
கல்கி

KALKI 27·11·83 ரூ- 1-20


புகைப்படச் சிறப்பிதழ்





காமிராக் கதை

கள்ள மார்க்கெட்டில் விலைக்குறைவு!







புகைப்படக் காமிரா உற்பத்தி பற்றி அக்ஃபா காவர்ட் அதிகாரிகள் திரு. பத்மநாபனும், திரு. ராகவன் நாயரும் சில செய்திகளைத் தெரிவித்தார்கள்.

''இந்தியாவில் நாங்கள் தயாரிக்கும் க்ளிக், ஐசோலி காமிராக்கள் அமெச்சூர் புகைப்படக்காரர்களுக்கே உதவக் கூடியவை. இப்போது புதிதாக அக்ஃபா மாடிக்–110 என்ற காமிராவை அறிமுகப் படுத்தியிருக்கிறோம். போட்டோ ஃபோன் நிறுவனத்தினர் ஹாட்ஷாட்–110, 35m.m. காமிராக்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். ஆனால் இவை எல்லாம் அமெச்சூர் புகைப் படக்காரர்களுக்கே ஏற்றவை. புகைப்படம் எடுப்பதைத் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள், இறக்குமதி செய்யப்பட்ட காமிராக்களையே நம்ப வேண்டியதிருக்கிறது. ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட காமிராக்களைப் பெறுவதில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத, இறக்குமதி விதிகளின் சிரமமான நிபந்தனைகள் குறுக்கே நிற்கின்றன.

''ஒரு நல்ல 35 m.m. ஜப்பானிய காமிரா கள்ளமார்க்கெட்டில் உங்களுக்கு 3500 ரூபாய்க்குக் கிடைத்துவிடும். ஆனால் அதே காமிராவை நீங்கள் சிரமமான முறையில் இறக்குமதி செய்தால் சுமார் 8000 ரூபாய் ஆகிறது! இட்டத்தட்ட 200 சதம் ட்யூட்டி தீட்டிவிடுகிறார்கள். கலர் பிலிம் அல்லது கறுப்பு – வெளுப்பு பிலிம் இறக்குமதியும் இதே கதைதான். 100 சதம் விலையுடன் கூட 170 சத ட்யூட்டியும் கட்ட வேண்டும். நஷ்டம் அரசுக்குத்தான். ஏனென்றால் கறுப்புச் சந்தையில் இது இன்னும்குறைந்த விலைக்குக் கிடைக்கிறதே! அரசு இந்த விஷயத்தில் பிராக்டிகலாக இருந்தால் நல்லது. (தற்போது OGL விதிகளின்கீழ் மிட்ஸுபிஷி, ஸகுரா, ப்யூஜி பிலிம்களை நாங்கள் இறக்குமதி செய்து விற்கிறோம். ORWOவும் இறக்குமதி செய்து விற்பனை செய்கிறது.)

பிரிண்டர்கள், பிராஸஸர்கள் முதலிய இயந்திரங்களை நாங்கள் தயாரித்து விற்பனை செய்கிறோம். மிக அத்தியாவசியமானால் ஆக்சுவல் யூசர் லைசென்ஸில், 'காபிடல் எக்விப்மெண்ட்' என்ற முறையில் இறக்குமதியும் செய்யலாம்.

அச்சுத் தொழிலுக்கும் சினிமாப்படப் பிடிப்புக்கும் பயிற்சிக் கல்லூரிகள் அரசு ஆதரவில் இருக்கின்றன. ஆனால் புகைப் படக்கலைக்கு, சிறந்த பயிற்சியளிக்கும் கல்லூரிகளோ, நிறுவனமோ அரசுத்தரப்பில் இருக்கின்றனவா? புகைப்படக்காரர்கள் தேவை என்று விளம்பரம் செய்யும் அமைப்புகள் குறிப்பிட்ட குவாலிஃபிகேஷன் தேவை என்று வெளியிட முடிகிறதா? புகைப் படக் கலையைக் கற்றவர்கள், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் நல்ல ஊதியம் பெற உயர்ந்த காமிராக்கள் உதவுகின்றன என்பதை உணர்ந்து, அரசு இந்தத் துறையில் இன்னும் அக்கறை காட்ட வேண்டும்.

நவீன உத்திகள் பல கொண்ட பென்டாக்ஸ்–LX, பென்டாக்ஸ்–MX, பென்டாக்ஸ்–6x7, பென்டாக்ஸ்–ME:F, என்று புதிய காமிராக்களை அக்ஃபா நிறுவனம் இறக்குமதி செய்து கொடுக்கிறது. கடைசியாகக் குறிப்பிட்ட காமிரா இது வரை மார்க்கெட்டில் கிடைக்கும் எந்தக் காமிராவையும் விட, அதிகமான வசதிகள் கொண்டதாம்!

— சாருகேசி



● அழகுப் போட்டியில் மிஸ் அமெரிக்காவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வானெஸ்ஸா வில்லியம்ஸ், அமெரிக்க சரித்திரத்திலேயே முதல் முறையாக ஒரு நீக்ரோ பெண்மணி மிஸ் அமெரிக்காவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இந்த ஆண்டு. ''நான் அழகி என்பதால் இந்தப் பரிசைப் பெற்றேன்; நீக்ரோ என்பதால் பரிவு காட்டி யாரும் தந்துவிடவில்லை என்பதே எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது'' என்றார் வானெஸ்ஸா.

XEROX
சிலதகவல்கள்



- Xaro—என்ற ஆங்கில வார்த்தைக்கு, உலர்ந்த, ஈரமில்லாத என்று பொருள். எந்தவித திரவமும் உபயோகிக்காமல் பிரதி எடுக்கப் படுவதால் இம்முறைக்கு X_rox என்று பெயர்.
- முன்பு போட்டோ காகிதத்தில் பிரதி எடுத்து அதை 'போட்டோஸ்டாட் காப்பி' என்பார்கள். அது முற்றிலும் மாறுபட்ட செய்முறை. விலை மிக அதிகம். (Xerox—ல் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிற பிரதி. போட்டோஸ்டாட்டில் 10 ரூபாய் வரை ஆகும்.)
- ஜிராக்ஸ் பிரதி எடுக்கும் மிஷின்களில் பல ரகம் உண்டு. சுமார் ஏழாயிரம் முதல் ஐம்பது, அறுபதாயிரம் ரூபாய் வரை இருக்கிறது.
- ஜிராக்ஸ் மிஷினின் ஒருபுறத்தில் உள்ள கண்ணாடித் தகட்டிற்குப் பின்னால் பிரதி எடுக்க வேண்டிய காகிதம் பொருத்தப் படுகிறது. இதன் பிம்பம் லென்ஸ்மூலம் எதிர்ப்புறத்தில் ஏற்படுத்தப்பட்டு, அங்கே சூடேற்றப்பட்ட பளபளப்பான தகடு வைக்கப்படுகிறது. பொதுவாக இந்தச் சமயத்தில் அறை இருட்டாக இருக்க வேண்டும். பின்னர் பிம்பம் உள்ள தகடு, வேறு ஒரு பெட்டி போன்ற பகுதியில் பொருத்தப்பட்டு, ஒரு சுற்றுச் சுற்றப்படும். அதனுள் ''பீட்ஸ்'' என்ற சிறு துகள்களுடன் கறுப்பு இங்க் பொடி கலக்கப்பட்டிருக்கும். இது பிம்பத்தில் படிய, தகடு எடுக்கப்பட்டு, அதன் மேல் வெள்ளைத் தாளை வைத்து அழுத்தவும். ஜிராக்ஸ் பிரதி கிடைக்கிறது.
- ஒரு ஜிராக்ஸ் பிரதிக்கு எழுபத்தைந்து காசிலிருந்து இரண்டு ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது.
- மிக எளிதில் பிரதி கிடைப்பதும், 'அட்டஸ்டேஷன்' போன்றதொல்லைகள் இல்லாததும் பெரும் வசதி.
- இரட்டை ஃபூல்ஸ்காப் (Foolscap) அளவுள்ள காகிதத்தில் உள்ளதைக்கூட ஜிராக்ஸ் பிரதி எடுக்க முடியும். பெரிய தானானால் லென்ஸை அட்ஜஸ்ட் செய்வதன் மூலம் பிம்பத்தைச் சிறியதாக்கியும் பிரதி எடுக்கலாம். (இதற்குக் கட்டணம் அதிகம்.)
- இன்று இந்தியாவில் சுமார் மூன்று டஜன் கம்பெனிகள் ஜிராக்ஸ் இயந்திரங்களை உற்பத்தி செய்கின்றன.

தொகுப்பு: மௌலி
படம்: சுபா

1968—ம் ஆண்டு திருமோகூர் என்ற வைணவத் தலத்துக்குச் சென்றிருந்தேன். காமிராவைப் பயன்படுத்த அதிக வாய்ப்பில்லையே எதைப் புகைப்படம் எடுப்பது என்றுயோசித்த வேளையில் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு கல்தூணும் அதில் ஆஞ்சநேயர் வடிவமும் தென்பட்டது. கிளிக்!

இந்தப் புகைப்படத்தை ஃபிரேம் செய்து பூஜையில் வைத்துத் தினம் வணங்குகிறேன். மங்களங்கள் தொடர்கின்றன. என் நண்பர்களுக்கும் தபால் செலவு பிரிண்டிங் சார்ஜ் மட்டும் பெற்றுக் கொண்டு அனுப்புகிறேன். அவர்களும் பூஜித்து மங்களம் அடைகிறார்கள்.

-மயூரப்பிரியா
சீர்காழி.



லக்ஷ்மி தேவதாஸ் காந்தி

"எங்களுக்குப் பிரியமான ஒரு பெண் குழந்தையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்" என்று தொடங்கி காந்திஜியுடன் தாம் நடத்திய ஓர் உரையாடலைப்பற்றி எழுதியிருக்கிறார் ராஜாஜி.

"இந்தப் பெண் ஒரு கதையோ, நாவலோ படித்ததில்லை; நாடகமோ சினிமாவோ பார்த்ததில்லை; இவள் மனத்தில் எப்படி காதல் புகுந்து கொண்டது? நினைக்க நினைக்க ஆச்சர்யமாயிருக்கிறது" என்றார் ராஜாஜி.

"அவளுக்கு ராமாயணம் தெரியுமல்லவா?" என்று காந்திஜி கேட்டார்.

"நன்றாகத் தெரியும்; படித்திருக்கிறாள்."

"அதைவிடச் சிறந்த காதல் காவியம் என்ன இருக்கிறது?" என்று வினவினார் காந்திஜி.

ராஜாஜி மௌனமானார்.

ராஜாஜியே பதில் கூற முடியாமல் போகும்படி நேர்ந்த இந்தச் சம்பவத்தின் கதாநாயகியாகிய அந்தப் பெண் ராஜாஜியின் மகள் லக்ஷ்மி. அவள் காதல் வயப்பட்டது காந்திஜியின் மகன் தேவதாஸ் காந்தியிடம்.

• • •

நல்ல வருவாயுடன் வசதியாக வாழக் கூடிய நிலையில் இருந்த அந்த வழக்கறிஞர் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுத் திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமம் நிறுவி எளிதான வாழ்க்கை மேற்கொண்டார். அதைவிடப் பெரிய தியாகம் ஒன்று உண்டென்றால் அது அவர் மகள் லக்ஷ்மியும் அந்த எளிய வாழ்க்கைக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டதுதான். ஆசைகள் வளர்கின்ற வயது, கனவுகள் மலர்கின்ற பருவம். அச்சமயத்தில், இருக்கிற சுக சௌகரியங்களையும் துறந்து தந்தையுடன் ஆசிரமத்தில் வசித்தாள் லக்ஷ்மி. தாயில்லாப் பெண்ணாகிய அவளிடம் தந்தையின் கண்டிப்பை விடவும் தாயின் பரிவை அதிகம் செலுத்தி வளர்த்தார் ராஜாஜி.

அங்கேதான் தேவதாஸைச் சந்தித்து மனத்தைப் பறிகொடுத்தாள் லக்ஷ்மி. தேவதாஸும் அந்தக் காதலின் எதிரொலியைத் தம் மனத்தில் உணர்ந்தார். ஆனால் அந்த இளம் காதலர்கள் எப்பேர்ப்பட்ட சோதனைக்கு உள்ளாக வேண்டியிருந்தது!

காந்திஜி நிபந்தனை விதித்தார்; "நீங்கள் ஒருவரை ஒருவர் மூன்று வருஷங்களுக்குச் சந்தித்துக் கொள்ளக் கூடாது. ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளவும் கூடாது. அதன் பிறகும் இப்போதுபோலவே மனத்தில் காதலை உணர்ந்தீர்களென்றால் திருமணம் புரிந்து கொள்ளுங்கள்."

தேவதாஸும் லக்ஷ்மியும் இந்தச்சோதனையில் மாபெரும் வெற்றி பெற்று, தங்கள் காதல் ஆத்மார்த்தமானது; வெறும் கவர்ச்சியல்ல என்று நிரூபித்தார்கள். அவர்களுடையது கலப்புத் திருமணம். காந்திஜி பகிரங்கமாகக் கலப்புத் திருமணங்களை ஆதரித்தவர். அவ்வாறிருந்தும் இப்படி ஒரு நிபந்தனையைத் தம் மகனுக்கே விதித்தார்.


திருமணத்துக்குப் பிறகும் சோதனைகள் தொடர்ந்தன. கல்யாணமாகிச் சில வாரங்களுக்குள்ளேயே தேவதாஸ் காந்தி கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனைக்கு ஆளானார். லக்ஷ்மியின் இல்வாழ்க்கைக்குத்தொடக்கத்திலேயே சோதனை. புதுடில்லியில் ஒரு குடும்ப நண்பர் வீட்டில் லக்ஷ்மி தங்கும்படி நேர்ந்தது. அப்போது சிறையிலிருந்து காந்திஜி கடிதம் எழுதினார். "நீ ஒரு வீரரின் மகள்; அதற்கேற்ப இந்தப் பிரிவையும் தனிமையையும் துணிவுடன் ஏற்றுக்கொள்." முன்னிலும் கடுமையான, ஆண்டவன் விதித்த இந்தச் சோதனையிலும் தவமிருந்து தேறினார் லக்ஷ்மி.

தமது கணவர் தேவதாஸின் மிக உன்னதமான குணங்கள் பலவற்றை லக்ஷ்மி தமதாக்கிக் கொண்டார். நண்பர்களை வரவேற்கும் போதும் அவர்களுடன் பேசிப் பழகும்போதும் அவர் முகத்தில் நிலவிய சாந்தமும், எளிமையும் மலர்ச்சியும் சில நிமிஷங்களுக்கொரு முறை கிளர்ந்தெழும் சிரிப்பும் தேவதாஸை அறிந்தவர்களுக்குச் சதா அவரை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

தமது கணவரையும் மாமனாரையும் கவனித்துக் கொண்டதன் மூலமே அரும் பெரும் தேசத் தொண்டாற்றி இருக்கிறார் லக்ஷ்மி. அதற்கும் மேலாக ராஜாஜியின் நூல்கள் பலவற்றை ஹிந்தியில் மொழி பெயர்த்ததன் மூலம் நாட்டு மக்கள் அனைவரின் நன்றிக்கும் பாத்திரராகியிருக்கிறார். ராஜாஜியின் ஆத்ம சிந்தனை (மார்க்க அரேலியர்), ராமாயணம், ராமகிருஷ்ண உபநிஷதம், கற்பனைக்காடு, துறவி லாரென்ஸ் முதலிய நூல்கள் லக்ஷ்மி தேவதாஸ்காந்தியினால் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதைவிடச் சிறந்த தேசத்தொண்டு வேறென்ன?

-கி. ராஜேந்திரன்


ராஜாஜி எழுதிய சக்கரவர்த்தித் திருமகன் (ராமாயணம்) சாகித்திய அகாதமியின் இலக்கியப் பரிசைப் பெற்ற சமயம் ராஜாஜி உடல்நலமின்மையால் புதுதில்லி செல்ல முடியவில்லை. அவர் சார்பில் மகள் லக்ஷ்மிதேவதாஸ் காந்தி பிரதமர் நேருஜியிடம் பரிசைப் பெற்றுக் கொண்டார்.





இளம் புகைப்படக்காரருக்கு





''எல்'' புகைப்படக்காரருக்குச் சில யோசனைகள்:—

1 நீளம், அகலம் மட்டுமல்லாது, ஒரு படத்துக்கு ஆழமும் உண்டு. இந்த ஆழத்தைக் கொண்டு வருவதற்காகவே ''இயற்கையாக இருப்பது போல்'' எடுக்க வேண்டும். ''படத்தை ஃபிரேம் பண்ணுவது'' என்கிறார்களே — அதுதான் இது.

2 சில எழுத்தாளர்கள் நடையழகுக்காகக் கதை அம்சத்தைக் கோட்டை விடுவார்கள். அதுபோல சூழ்நிலை; சுற்றுப்புறத்துக்காக, எந்தக் குறிப்பிட்ட பொருளைப் படம் எடுக்கிறோமோ அதை 'அம்போ'வென விடக் கூடாது. காட்சிப் பொருளின் தன்மை உயரும்படி எடுக்க வேண்டும்.

3 எடுக்கப் போகின்ற பொருள், சுற்றுப்புறத்தோடு நன்கு ஒத்துப் போக வேண்டும். அதாவது குறிப்பிட்ட ஆள் அல்லது பொருளுக்குப் படத்தில் நிறைய இடமும், பிற அம்சங்களுக்குக் குறைவான இடமும் இருக்குமாறு 'க்ளிக்' செய்தல் நலம்.

4 கற்பனையைப் பயன்படுத்துங்கள். ரசனையை வளர்த்துக் கொள்ளுங்கள். அதாவது கையில் காமெரா இல்லாவிட்டாலும், சில காட்சிகளை மனக்கண்ணால் கண்டு, எப்படிப் படம் எடுக்கலாம் என்று கற்பனை செய்யுங்கள்.

5 கூரிய பார்வை அவசியம். எடுக்கப் போகும் பொருளின் அமைப்பு சில ஆங்கில எழுத்துக்கள் போலிருந்தால், (உ—ம்: A, T, L, O, S, Z படம் நன்கு வர வாய்ப்பிருக்கிறது. ''புகைப்படப் பார்வை''யை வளர்த்துக் கொள்ளுங்கள்.

6 ஒரே காட்சியைப் பல முறை எடுத்துப் பரிசோதித்து நல்ல படத்தைத் தேர்ந்தெடுப்பது நலம். இதன்மூலம் தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம்.

நன்றி: கன்ஸ்யூமர்
ஈஸ்வர்குமார்

மெழுகுவர்த்தி ஒளியில் வண்ணப்படம்

மேலட்டையில் காணப்படும் அற்புதமான வண்ணப்படம் அந்த மெழுகுவர்த்தியின் ஒளியிலேயே, அந்த ஒளியில் மட்டுமே, எடுக்கப்பட்டது என்றால் நம்புவது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் நவீன விஞ்ஞான முன்னேற்றம் மிக மங்கலான ஒளியில் கூட வண்ணப்படங்கள் எடுக்க வழி செய்கிறது. புதிய **கோடாகலர் வி ஆர்-1000** ஃபிலிம் இதைச் சாத்தியமாக்குகிறது. இதே கோடாக், ஃபிலிம் பகல் நேரத்திலும், ஃபிளாஷ், ஸ்பாட் லைட்களிலும் சிறப்பான படங்களைத் தருகிறது. வெளிச்சம் போதுமா என்று யோசிக்க அவசியமில்லாமல் செய்கிறது. ஷட்டர் ஸ்பீடை அதிகரிக்கலாமாதலால் ஆக்ஷன் படங்களையும் குறைந்த வெளிச்சத்தில் எடுக்கலாம்.

நன்றி: ஐ. பி. வி. நியூஸ்



காட்பரிஸ்
சாக்லேட்டுகள்



5 ஸ்டார் கையில் இருக்கையிலே...
உங்கள் காரியம் கைகூடிடுமே

நடக்கையிலே, பேசிச் சிரிக்கையிலே, மகிழ்ச்சியிலே திளைக்கையிலே, சிறிது பசிக்கையிலே சாப்பிடுங்கள் 5 ஸ்டார், வழங்கிடுங்கள் 5 ஸ்டார்.,

சுவைமிக்க சாக்கலேட் பார்— வாயிலே நீரூறும்.


சுவை நலம் தரும் 5 ஸ்டார்.

வார்த்தைகளால் சொல்ல முடியாததை
நேர்த்தியாகச் சொல்வது.

OBM/2064/TM


யாரோ வெளிநாட்டுக்காரங்க தான்- அந்த தீயைத் தூண்டி விடறாங்க!.. கண்டு பிடிக்காம விடப் போறதில்லே!
பஞ்சாப் சீக்கிய தீவிரவாதிகள்


பாத்தியா.. சாதாரண டேப் என்னமா மாறிடுச்சு!
கர்நாடக


இந்திய கிரிக்கெட் அணி
மேற்கிந்திய அணி
புருடென்ஷியல் கோப்பை



கல்கி

1983 நவம்பர் 27
ருத்ரோத்காரி கார்த்திகை 11
மலர் : 42 இதழ் : 17



பணநாயகப் பண்பாடு!

நூலாசிரியர்களும், சிந்தனையாளர்களும் ''எங்கே போகிறோம்?'' என்று கேட்டு வந்தார்கள். இனி, 'எங்கே வந்து சேர்ந்திருக்கிறோம்?' என்று கூடக் கேட்க அவசியம் இல்லை. ஜனநாயகப் பண்பாட்டை ஆழக் குழி தோண்டி உயிருடன் புதைத்துவிட்டு, பணநாயகத்தை அரியாசனத்தில் அமர்த்தி அதற்குக் கைதட்டிச் சேவகம் புரியும் நிலைக்குத் தான் வந்திருக்கிறோம். தேர்தலில் வோட்டுக்களை விலைக்கு வாங்க ஆரம்பித்தபோதே பணநாயகத்தின் செல்வாக்கு தொடங்கிவிட்டது. மாருதி விவகாரத்துக்குப் பின்னும் அந்துலே ஊழலுக்கு அப்புறமும் குவோ கம்பெனியுடன் நடந்த பெட்ரோலியம் எண்ணெய் பேரத்துக்குப் பிறகும் இதுபற்றி யாருக்கேனும் கொஞ்சநஞ்சம் சந்தேகம் இருக்குமெனில் அதுவும் அண்மை நிகழ்ச்சிகளால் தீர்ந்து போயிருக்கும்.

சென்னை சர்வகலாசாலையில் சிமெண்ட் ஊழல் என்று சட்டமன்றத்தில் துரைமுருகன் குற்றம் சாட்டுகிறார். விஸ்கோஸ் கம்பெனியின் போனஸ் பிரச்சினையை நிர்வாகத்துக்குச் சாதகமாகத் தீர்த்து வைக்க அமைச்சருக்கு ஒன்பது லட்சம் வழங்கப்பட்டதற்கு ஆதாரமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ. அழகர்சாமி ஒரு கடிதத்தைச் சட்டமன்றத்தில் படிக்கிறார். இதையெல்லாம் தூக்கி அடிப்பதாக இருக்கிறது பங்களூர் சம்பவம். ஹெக்டே அமைச்சரவையைக் கவிழ்க்கக் கருதி இ. காங்கிரஸ் தலைவர் மொய்லி, எம்.எல். ஏக்களை விலைக்கு வாங்கும் முயற்சியில் இறங்கி ஒரு சுயேச்சை எம். எல். ஏக்கு இரண்டு லட்சம் வழங்கியிருக்கிறார். அந்தச் சுயேச்சை எம்.எல். ஏ., பைரே கௌடா, தமக்கும் மொய்லிக்கும் நடந்த உரையாடலை டேப் ரிகார்ட் செய்ததுடன் லஞ்சமாகத் தரப்பட்ட பணத்தை அனைவரும் அறியப் பையை உதறிக் கொட்டியிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாமே பொய் என்றும் சாட்சியங்கள் எல்லாமே போலி என்றும் கூறி விடுவது எளிது. 'உண்மையை அறிய விசாரணைக் கமிஷன் போடுகிறேன்' என்று பிரச்சினையை ஆறப்போட்டு விடுவதும் சுலபம். ஆனால் நெருப்பின்றிப் புகையாது என்றே மக்கள் கருதுவர். மொய்லி கூறுவது போல் அவர் குரலை அரை மணி நேரத்துக்கு மேல் யாரோ ஒருவர் 'மிமிக்ரி' செய்ய அதுதான் டேப் ரிகார்ட் ஆகியிருக்கிறது என்பதை நம்புவது கஷ்டமெனில், புதுதில்லி பாங்கு முத்திரையுடன் கட்டுப் பிரியாத நோட்டுக் கட்டுக்கள் பங்களூர் எம். எல். ஏக்கு எப்படி வந்து சேர்ந்தது என்பது குறித்து மொய்லிக்கோ அல்லது இ. காங்கிரஸ் மேலிடத்துக்கோ ஒன்றுமே தெரியாது என்று நம்புவது அதைவிடக் கடினம். இ.காங்கிரஸ் மேலிடம் மர்ம மௌனம் சாதித்து வருகிறது. 'எம். எல். ஏக்களை விலைக்கு வாங்குவது என்பது நாடு தழுவிய ஜனநாயகப் பிரச்சினை; எனவே நாடாளுமன்றம் இதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்' என்ற எதிர்க்கட்சி எம். பிக்களின் கோரிக்கை அடிபட்டுப் போனது துரதிர்ஷ்டம்.

காஷ்மீரோ, கர்நாடகமோ, தலைநகரோ தமிழகமோ எங்கேயாயினும் சரி, இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழுமேயானால் ஆத்மசோதனை நடக்கும், உண்மைகள் தெளிவாகும், அவமான உணர்வைத் தொடர்ந்து அச்சம் உருவாகும். இவற்றின் ஆரோக்கியமான பின்விளைவாக எதிர்காலத்தில் இத்தகைய லஞ்ச ஊழல்கள் குறையும் என்று மக்கள் எதிர்பார்த்த காலம் மலையேறிவிட்டது! இன்று நடப்பது இதற்கு நேர்மாறானது. குற்றச்சாட்டுக்குப் பதில் குற்றச்சாட்டும் குற்றம் சுமத்தப்பட்டவருக்குப் பாதுகாப்பும் அரவணைப்பும் தரப்படுகிறது. அச்சம், அவமான உணர்வு என்பதெல்லாம் அகராதியில் மட்டுமே உள்ள வார்த்தைகளாயிற்று. ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமந்து சிரித்தவாறே மேலும் பல லஞ்ச ஊழல்கள் புரியுமளவுக்கு நமது அரசியல்வாதிகள் துணிந்து விட்டனர்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 4

அரங்கூர் அவை

கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தாலும் அது இன்னும் நிரூபிக்கப்படவில்லையாதலால் உயர் அதிகாரியாகிய விக்கியண்ணன் சிறைக் கூடத்திலேயே வசதியான ஒரு பகுதியில் காவலில் இருந்தான். காலைக் கடன்களை முடிக்கவும் குளித்துப் புத்தாடைகள் புனையவும் திருநீறு அணிந்து இறைவழிபாடு செய்யவும் அவனுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உதவிய காவலர்கள், சிறைக் கூடத்தின் தலைமை அதிகாரியின் நேரடி மேற்பார்வையில் காலை உணவும் கொணர்ந்தார்கள்.

ஏதேதோ சிந்தனை வயப்பட்டு இரவெல்லாம் தூக்கமின்றிக் கடந்திருந்த போதிலும் விக்கியண்ணனுக்குப் பசியில்லை. ''உணவு இறங்காது. வேண்டாம்'' என்று கூறியபடியே திரும்பிப் பார்த்த விக்கியண்ணன், இரண்டு தங்கத் தாம்பாளங்களை உயர் பட்டினால் மூடிக் காவலர் எடுத்து வருவதைக் கண்டு வியப்பு மேலிட நின்றான். ''உனக்குப் பசியில்லையென்றாலும் நானாவது உண்ணலாம் அல்லவா?'' என்று குரல் கேட்டுச் சிலிர்த்தான். அடுத்தகணம் கோதண்டராம ஆதித்தனின் நெடிய திருமேனி நிலைவாசலில் தெரியவே, ''மகாராஜா!'' என்று ஆச்சர்யக் குரல் எழுப்பி எண்சாண்கிடையாகத் தரையில் விழுந்தான். ''பிரபோ! இந்த ஏழையைக் காணத் தாங்கள் சிறைச்சாலைக்கு வர வேண்டுமா?'' என்று நாத்தழுதழுக்க வினவினான்.


மணிமகுடம் அணியவில்லையென்றாலும் மற்றபடி பட்டுப் பீதாம்பரங்களும் பொன்னாபரணங்களும் அலங்கரித்த கம்பீரக்கோலத்தில் நெடிதுயர்ந்து நின்ற ஆதித்தன், ''சிறைக்கூடத்தையும் அவ்வப்போது பரிசோதிக்க வேண்டியது மன்னன் கடமையல்லவா? அதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்திருக்கிறாய்'' என்று கூறி மெல்ல நகைத்தான். ''விக்கியண்ணா! எழுந்திரு!'' என்றான்.

நிமிர்ந்தெழுந்த விக்கியண்ணனின் கண்கள் பனித்திருந்ததால் ஆதித்தன் உருவம் கலங்கலாகத் தெரிந்த போதிலும் நெற்றியில் பளிச்சிட்ட திருநீறும் புருவ மையத்தில் இலங்கிய திலகமும் ஆடை ஆபரணங்களை விடவும் அதிகமான ஈர்ப்புச் சக்தியுடன் திகழ்ந்து அவனைக் கவர்ந்தன. மன்னர் புன்னகையுடன் தம் கரங்களை உயர்த்தவும் அந்த ஆலிங்கனத்துக்காகவே காலமெல்லாம் காத்திருந்தாற் போன்ற ஆர்வத்துடன் அவரை நெருங்கினான் விக்கியண்ணன். இரும்புக் கரங்கள் நான்கு இரட்டை உரல்களைக் கட்டி அணைத்தன. சில நொடிகளில் அவன் திண் தோள்களை அழுந்தப் பற்றி வி. க்கிய ஆதித்தன், ''என் பக்கத்தில் அமர்ந்து கொள்; நான் உண்பதைக் காணவாவது உனக்குப் பசியெடுக்கிறதா பார்ப்போம்'' என்றான்.

''பிரபோ! தங்களுடன் சேர்ந்து உணவருந்தும் பாக்கியம் கிட்டுமெனில் நாலு பேருக்கான ஆகாரத்தை நானே விழுங்கி விடுவேன்! ஆனால் நான் பெறும் இந்தப் பேறு உங்களுக்குத் துன்பமாக முடியக்கூடாதே என்றுதான் தயங்குகிறேன்.''

''ஒரு துன்பமுமில்லை'' என்று கூறியவாறே மனையில் அமர்ந்து விக்கியண்ணனையும் அருகில் உட்காரச் செய்தான் ஆதித்தன். ''இது சிறைக் கைதிகளுக்கான காலை ஆகாரம் அல்ல. இளங்கோப்பிச்சியின்

கி. ராஜேந்திரன்



நேரடி மேற்பார்வையில் அரண்மனையில் சமைத்ததுதான்!''

பணியாளர்களைக் கரத்தின் ஒரு நொடிப் பிலே வணங்கிச் செல்ல அனுமதித்து விட்டுத் தங்கத் தட்டுக்களின் மீதிருந்த பட்டுத் துகில்களை நீக்கினான் ஆதித்தன். பிட்டும் ஆப்பமும் வைக்கப்பட்டிருந்தன. பெரிய கிண்ணங்களில் தேங்காய்ப்பாலும் நிறைந்திருந்தது.

''அடேடே! இளங்கோப்பிச்சியின் முன் யோசனையைப் பார்த்தாயா, விக்கியண்ணா! சேர நாட்டின் உணவுக்குப் பழகித் திரும்பி யிருக்கிறாயல்லவா? அதற்காகவும் உன் சேர நாட்டு அனுபவங்களை நான் கேட்டறிய வேண்டும் என்பதை நினைவூட்டவும் தேங் காய்ப்பாலும் ஆப்பமும் தயாரிக்கச் செய்து அனுப்பியிருக்கிறாள்!''

விக்கியண்ணன் புரிந்து கொண்டான். வழக்காடுமன்றத்தில் நீதி விசாரணை நடக் கும் போது சேர நாட்டுப் பயணம் பற்றி ஏதும் கேட்டறிய முடியாது. அப்படி வினவினாலும் அது அனைவருக்கும் தெரிய வந்த செய்தியாகிவிடும். அதைத் தவிர்த்து அந்தரங்கமாகப் பேசவே ஆதித்தன் அவசரப்பட்டு அதிகாலையில் இங்கு வந்திருக்கிறான். இப்படி ஒரு நிர்ப்பந் தத்தை மன்னருக்கு ஏற்படுத்தி விட்டதற் காகத் தன்னைத்தானே நொந்துகொண்டே விக்கியண்ணன் உணவருந்தியவாறே மன்ன ரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யப் பேசத் தொடங்கினான்.

சேரமான் தாணுரவி, ஆதித்தனின் அந்தரங்கத் தூதனாகிய தன்னிடமும் உடன்வந்த இகா வீரர்களிடமும் காட்டிய பேரன்பையும் ஆதித்தனிடம் சேரமான் கொண்டுள்ள அசைக்க முடியாத நட்பையும் விவரித்தான். தங்களுக்கு யானைகளைப் பிடிக்கவும் பழக்கவும் பராமரிக்கவும், அவற்றை ஆள்வதற்கும் மிகச் சிறந்த பயிற்சிகள் தரப்பட்டதைக் கூறினான். வலி மையும் போர்ப் பயிற்சியும் பெற்ற நூற்றி யெட்டு யானைகளுடன் தான் திரும்பியிருப் பதை விளக்கினான்.

''பிரபோ! சேரமானிடம் எனக்கு இம்மியளவும் ஐயப்பாடு தோன்றவில்லை. அவர் என்றும் உங்கள் உற்ற நண்பராய் விளங்குவார் என்பது உறுதி.''

''நான் வடதிசை சென்றால் தெற்கே பாண்டியன் சோழ தேசத்தைத் தாக்கும் துணிவு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை விவாதித்தாயா?''

அருள்வாக்கு

குருடன் ஒருவன் கையில் லாந்த ருடன் போய்க் கொண்டிருந்தானாம். எதிரில் வந்த ஒருவன் ''உனக்குத் தான் கண் தெரியவில்லையே, லாந்தர் ஏன் எடுத்து வருகிறாய்?'' என்று கேட்டான். அதற்குக் குருடன், ''எனக்குக் கண் இல்லாவிட்டாலும் உனக்குக் கண் இருக்கிறது அல்லவா? அதற்காகத் தான் இதை எடுத்துவரு கிறேன். இல்லாவிட்டால் இந்த இருட்டில் நீயே என்மேல் தடுக்கி விழுந்திருப்பாயே'' என்றானாம். அது போலவே பழைய சாஸ்திரங்கள் நமக்குப் புரியாவிட்டாலும் எதிர் காலத்தில் யாருக்காவது புரியலாம், பயனாகலாம் என்பதற்காகவது அவற்றை நாம் ரட்சித்தாக வேண்டும். ''வச தியே இல்லாத காலங்களில் யுகாந்தர மாக ரட்சிக்கப்பட்ட சாஸ்திரங்களை நமக்கு முதல் தலைமுறையினர் எல்லா வசதி இருந்தும் காப்பாற்றாமல் அழித்து நம்மை வஞ்சித்து விட் டார்கள்'' என்று வருங்காலத் தலை முறையினர் நம்மைக் குற்றம் சொல்ல இடம் வைக்கலாமா?

பழைய காலங்களில் சாஸ்திர ரட்சணம் அரசர்களின் பொறுப்பி லிருந்தது. இப்பொழுது ராஜாக்கள் இல்லை. ராஜ்ய, மத்ய சர்க்கார்கள் தாம் உள்ளன. அவற்றுக்கு நிம்மதியே இல்லை. ஒரு பக்கம் பாஷைச் சண்டை, ஒருபக்கம் எல்லைச் சண்டை, ஏகப் பட்ட பாலிடிக்ஸ், ஊழல் இப்படிப்பல கஷ்டங்கள்.

எனவே அரசாங்கத்தை சாஸ்திர ரட்சணத்துக்கு எதிர்பார்த்து பிரயோஜனமில்லை. சுற்றுப்புறத்தில் எல்லாம் ஒரே பூசல், குடும்பத்திலும் தொல்லை' என்று நாம் தட்டிக்கழிக்கக் கூடாது. வனவிலங்குகளைப் பாருங்கள். சிங்கம், புலியை அடிக்கிறது. புலி, மானை அடிக்கிறது. இருந்தாலும் காட்டிலே சிங்கக் குட்டியும், புலிக்குட்டியும் மான்குட்டியும் வளர்ந்து கொண்டும் விளையாடிக் கொண்டும் தான் இருக் கின்றன. அப்படி இருக்க நாமும் பழக வேண்டும். எத்தனை இடையூறு இருப் பினும் நமக்கு எதிர்காலத்தினரிடம் உள்ள கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து பழைய சாஸ்திரங்களை ரட்சித்துத் தர வேண்டும்.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



தீபாவளி மலர் —வாசகர் மகிழ்ச்சி



● பெரியவாள்களின் படம் எல்லாமே நன்றாக இருக்கின்றன. அதிலும் தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களின் படம் ரொம்பவும் பிரமாதமாக உள்ளது.

கட்டுரைகளில் டி. கே. சி. மாமா மிக அற்புதமாக அமைந்து விட்டிருக்கிறது. அது ஒரு தனி Classic என்றே தான் சொல்ல வேண்டும். எத்தனை முறை திரும்பத் திரும்பப் படித்தாலும் அலுப்புத் தட்டாது.

மாயூரம், ஆர். கே. சுப்பிரமணியம்.

● கட்டுரைகள், சித்திரங்கள், துணுக்குகள் தரமிக்கவை. அச்சினுக்கு விசேஷப் பாராட்டு. மூன்று ஆசார்ய சுவாமிகளின் வண்ணப் படமும் அற்புதம். பத்திரிகையின் சிறப்பினுக்கு அனைத்துமே புகழ் சேர்க்கின்றன.

சென்னை—26. எம். குமரன்.

● பத்திரிகை உலகில் 'கல்கி' தீபாவளி மலர் பாதுகாக்கப்படவேண்டிய அரிய பொக்கிஷம்.

துடுப்பதி எம்.பி. ரங்கநாதன்.

● இந்த வருடக் கல்கி தீபாவளிமலர் ஏ.ஒன். சிறுகதைகள் எல்லாமே அருமை.

கோயம்புத்தூர் உமார்த்தி

● ஒரே சமயத்தில் கல்கி, மங்கையர் மலர் கோகுலம் வாசகர்களைத் திருப்திப் படுத்தி விட்டீர்கள். வருஷம் முழுவதும் மணம் பரப்பும் வாசமுள்ள மலர்.

மின்பாறை. வெ. சியாமளா ரமணி.

● ஆச்சார்யாள் அனுக்கிரஹித்த கன்னடியன் வாய்க்கால் அந்த வாய்க்கால் நீர் போன்றே தெளிந்த நடையில் உள்ளது. இதற்கு மேலாக ஒரு விளக்கக் கட்டுரையோ— கதையோ எழுத முடியுமா என்றால் நிச்சயம் இல்லை.

நெய்வேலி. செந்தில்குமாரன்

● சிறுவர் சிறுமியர் பெரியவர் — சிறுகதை விரும்புவோர் கவிதைகள் விரும்புவோர் — பக்திப் பக்கங்களை விரும்புவோர்— இலக்கியம் விரும்புவோர் என்று எல்லாத் தரப்பு வாசகர்களும் முழு திருப்தி அடைகின்ற வகையில் அருமையாய் அமைந்துவிட்டது தீபாவளி மலர். •

பெங்களூர்—21. ப. மூர்த்தி.

''அவ்வாறு நேர்ந்தால் உடனே சேரமான் படைகள் பாண்டி நாட்டின் மீது பாயச் சித்தமாயுள்ளன, பிரபோ! இதைச் சேர நாட்டில் வளைய வரும் பாண்டி நாட்டு ஒற்றர்களும் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள். இதற்குள் மதுரையை எச்சரித்தும் இருப்பார்கள்.''

''விக்கியண்ணா! என் கவலையில் பாதி தீர்ந்தது. சோழ தேசத்துக்கு ஆபத்து ஏதும் நேராது என்பது உறுதியானால் நான் மனநிம்மதியுடன் வடதிசைப் படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்ய முடியும்.''

''பிரபோ'' அதைக் காலதாமதமின்றித் துரிதமாகக் கவனிப்பது நல்லது.''

''ஏன் அப்படிக் கருதுகிறாய்?''

''நான் யானைகளுடன் திரும்பி வருகையில் ஆங்காங்கே ஊருக்குப் புறம்பாகத் தண்டு இறங்கியபோதிலும் மக்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். 'இத்தனை யானைகள் எங்கே, எதற்காகச் செல்கின்றன?' என்று கேட்டார்கள். நானும் கற்பனையாகப் பல காரணங்களைக் கூறி வந்தேன். ஆனால் பலர் என்னை நம்பவில்லை. பெரிய யுத்தம் ஏதோ வரப்போகிறது அல்லது படையெடுப்பு நடக்கப் போகிறது என்று ஊகித்துப் பேசினார்கள்.''

''இந்தச் செய்தி பல்லவ சக்கரவர்த்தியின் காதுகளுக்கு எட்ட அதிக காலமாகாது என்றும் அவர் எச்சரிக்கை அடைந்து விடுவார் என்றும் எண்ணுகிறாய். அப்படித்தானே!''

''ஆம் பிரபோ!''

''யார் அங்கே!'' என்று அழைத்தான் ஆதித்தன். பணியாட்கள் கை கழுவவும் குடிக்கவும் நந்நீர் கொணர்ந்தார்கள். அவர்கள் நீட்டிய துகிலில் நனைந்த கரத்தை ஈரம் போக ஒற்றி எடுத்தபின்னர் ''நல்லது. நான் விடைபெறுகிறேன்'' என்றான் ஆதித்தன்.

''இவ்வளவு நேரம் இங்கு தாங்கள் தாமதித்ததே எனது பிறவிப் பெரும் பயன்'' என்றான் விக்கியண்ணன்.

நிலைவாசல் வரை சென்ற ஆதித்தன் நின்று திரும்பினான். ''விக்கியண்ணா! அடுத்த ஒரு சாமத்துக்குள் உன்னை அறங்கூர் அவைக்கு அழைத்து வருவார்கள்....''

''சித்தமாயிருக்கிறேன் மன்னவா!''

''அதுபற்றி நீ ஏதேனும் கூற விரும்பினால்...''

''உங்களுடைய நீதி வழுவா நேர்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றால்தானே நான் மன்றாட வேண்டும்? எனக்கு ஒரு கவலையும் இல்லை பிரபோ!''


''அந்த மன உறுதி உனக்கு இருந்தால் எனக்கு மகிழ்ச்சிதான்!'' என்ற ஆதித்தன் சிறைக் கூடத்தின் தலைமை அதிகாரியிடம் விக்கியண்ணனைப் பலத்த காவலுடன் வழக்காடு மன்றத்துக்குக் குறித்த நேரத்தில் அனுப்பி வைக்குமாறு பணித்தான்.

அதன் பிறகு தணிந்த குரலில் அவ ளிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னது போலவும் 'விக்கியண்ணனுக்குத் தோன்றி யது. அது மெய்யா, மனப்பிரமையா என்று அனுமானிக்கும் முன் ஆதித்தனின் ஆஜானு பாகு உருவம் ஏறு நடையில் பார்வையி லிருந்து மறைந்து விட்டது.

✻ ✻ ✻

மன்னர் வருவதற்குச் சற்று நேரம் முன்பாகவே அவை கூடிவிட்டது. அமைச் சர்கள், தளபதிகள், முதலானோர் ஒரு புறமும், புலவர்கள், கலைஞர்கள் போன்ற வர்கள் மறுபுறமும் அரியாசனத்துக்கு இரு மருங்கிலும் வீற்றிருந்தார்கள். முதல் வரிசை யில் கரங்கள் சங்கிலியால் பிணைப்புண்டிருந் தாலும் தன்னம்பிக்கை இழக்காத நிமிர்ந்த நெஞ்சத்தோடு விக்கியண்ணன் காவலர் சூழ நின்றான். இரண்டாவது வரிசையில் அபி மானவல்லி. அன்றைய சோகச் சூழலுக்கு ஏற்றாற்போல் பொன்னிழைகள் சில ஊடுரு விய கருந்துகில் கச்சில் திரண்ட மார்ப கங்கள் சிறைப்பட்டிருக்க, இடையைச் சுற்றிய பூந்துகிலான மற்றொரு கருந்துகில் முந்தானையாக மேலெழும்பிப் படர்ந்திருக்க அந்தக் கருமையை எடுத்துக்காட்டவே, கொண்டையிலும், கழுத்திலும் சில முத்துச் சரங்கள் அணிசெய்து அவள் தந்த உடலின் நிறத்துடன் போட்டியிட்டன. துயரமே வடிவழகு உருவில் வந்தாற்போல், நின்ற அவளைப் பார்த்துப் புன்னகைத்து ஊக்க மளித்தான் விக்கியண்ணன். வாடிய அவள் முகத்தில் சிறிதும் மலர்ச்சி காணாததால் அவன் ஏமாற்றமடையவில்லை; உள்ளூற மகிழ்ந்தான்!

''பரகேசரி விஜயாலய சோழனின் மருமகள், இராஷ்டிர கூட மன்னன் கிருஷ்ண தேவனின் திருமகள், இராஜகேசரி கோதண்டராம ஆதித்தனின் மனைமகள், பட்டத்தரசி இளங்கோப்பிச்சி வாழ்க!'' என்று கட்டியங் கூறுவோர் முழங்க உள் மாட முகப்பில் மகன் கன்னரதேவனுடன் வந்தமர்ந்தாள் அவள்.



அரசியை எதிர்ட்டு நோக்கி விக்கி யண்ணன் கரம் கூப்பவும் விலங்குகள் கலகலத்தன. சர்வாலங்காரங்களுடன் வந் தமர்ந்த அரசியின் கம்பீர எழில் அனைவர் உள்ளத்திலும் மரியாதையைத் தோற்றுவிக்க எழுந்து நின்று, அவள் அமர்ந்தபின் மீண்டும் உட்கார்ந்தனர். அரசியின் முகத் தாமரையும் அபிமானவல்லியின் மதிமுகமும் ஒன்றை நோக்க ஒன்று திரும்பின. நான்கு கண்களிலிருந்து பிறந்த மின்னல் பார் வைகள் ஒன்றை ஒன்று தாக்கித் துவண் டன. விக்கியண்ணன் தனக்குள் மென்நகை புரிந்தான். 'பெண்கள் என்றாலே பொறாமை, சற்றேனும் எட்டிப் பாராமல் இராது போலும்!''

இதற்குள் கட்டியங்கூறுவோர் கண்டங் களிலிருந்து மீண்டும் வாழ்த்தொலிகள் எழுந்தன. ''இராஜாதிராஜன், ராஜமார்த் தாண்டன், ஆதித்தேகவரம் எழுப்பிய சிவநேசச் செல்வன், பல்யானைக் கோக் கண்டன், இராசகேசரி கோதண்டராம ஆதித்தன் வாழ்க, வாழ்க!''

அவையோர் பரபரப்பும் எதிர்பார்ப்பும் பரவ எழுந்து நின்றனர். முத்துச்சரங்களும் பொன்னுபரணங்களும் மணிமுடியும் பொன் னிழைகள் ஓடியப் பட்டுப் பீதாம்பரமும் அணிந்து வந்து தர்மாசனத்தில் அமர்ந்து பலகணி வழியே பொழிந்த காலைக் கதிரவ னொளியில் பிரகாசித்த ஆதித்தனைக் காணவே கண் கூசியது பலருக்கு.

சுற்றுமுற்றும் ஒருமுறை அருட்பார்வையை வீசிய ஆதித்தன் பேசலுற்றான்:

''அவையோர்களே! நமது அரசவைப் புலவரும் சைவத் திருமுறைகளைத் தொகுக் கும் பெரும் பணியில் ஈடுபட்டு ஊர் ஊராகச் சென்று வருகிறவருமான நம்பியாண்டார் நம்பி இன்று தஞ்சையில் இருப்பதுடன் அவைக்கும் வந்திருப்பது நமது பாக்கியம்.''

''மன்னவா! தயவுசெய்து உபசார மொழிகள் வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார் நம்பியாண்டார் நம்பி. ''என் பெயர் எவ்வாறாயினும் பரஞ்சோதி முனிவரைப் போல் சிறுத்தொண்டராக விளங்கவே விரும்புகிறேன்.''

''புலவரேறே! அந்தத் தொண்டுள்ளம் காரணமாகவே ஆண்களில் சிறந்த நம்பி யாகிறீர்கள்; நம்பியாண்டார் நம்பியாகவும் விளங்குகிறீர்கள், தெரியும்! அதிருக்கட்டும், திருமுறைகளைத் தொகுக்கும் தங்கள் தெய் விகப் பணி எம்மட்டில் இருக்கிறது?''

''பிரபோ! எளிதான காரியத்தையா என் பொறுப்பில் விட்டிருக்கிறீர்கள்? நாவுக்கரசர் பெருமானும், ஞானசம்பந் தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் கொஞ்ச மாகவா பாடியிருக்கிறார்கள்! பக்திக்கடலில் மூழ்கி அக்கடலின் ஒவ்வொரு துளியையும் ஒரு பாடலாக்கியவர்களாயிற்றே! கசிந்துருகிக் கண்ணீர் மல்கியும் ஆனந்தக் கண்ணீர் உகுத்தும் அவர்கள் பாடிய திருப்பாடல் களைத் தொகுப்பது சுலப சாத்தியமா? நானும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞான சம்பந்தரின் பதிகங்களை மூன்று திருமுறைகளாக வகுத்துள்ளேன். இதிலேயே

இன்னும் தொகுக்கப்பட வேண்டியன எஞ்சியுள்ளன. தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.''

''நிதானமாக நடக்கட்டும்; முறையாக நிறைவெய்தட்டும். நான் கேட்க வந்தது வேறு. தங்களுக்குத் தேவையான வசதிகள் குறைவின்றிக் கிடைக்கின்றனவா இன்னும் ஏதும் தேவையா? என்று அறிந்துகொள்ள ஆர்வமாயுள்ளேன்.''

''சிவநேசச் செல்வராயிருந்தும் கோதண்டராமன் என்ற பெயரையும் ஆதித்தன் என்ற இயற்பெயருடன் இணைத்துக் கொண்ட உமது தர்ம ஆட்சியில் என் போன்ற எளியோருக்கு என்ன குறை இருக்க முடியும், வேந்தே!''

''சிலசமயம் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா புலவரே? இந்த ராஜ்ய பாரமெல்லாம் எதற்கு? உங்களைப் போல் ருத்திராக்கமும் எளியதோர் இடைத்துணியும் அணிந்து திருநீறை மட்டுமே ஆபரணமாகப் பூண்டு ஊர் ஊராகப் போய்த் திருமுறைகளைத் தேடிக் கண்டெடுத்துக் கண்ணில் ஒற்றிப் பாடிக் களிக்கலாமே என்ற எண்ணம் எழுகிறது.''

''மன்னவா! அவரவர் கடமை அவரவருக்கு இறைவன் வகுத்தபடி அமைந்திருக்க மனச்சோர்வு எதற்கு?''

''இன்றைய அவை நடவடிக்கைகளைக் கவனித்தால் உங்களுக்கே புரிந்து போகும் சுவாமி!'' என்றான் ஆதித்தன். ''சரி, ஒரு தேவாரத்துடன் தொடங்குவோமா?''

அவையில் பரிபூரண அமைதி நிலவ அப்பர் பெருமான் பாடலை இன்னிசையுடன் கணீரென்ற குரலில் பாடினார் நம்பியாண்டார் நம்பி.

''அல்லல் என் செயும்
  அருவினை என் செயும்
தொல்லை வல்வினைத்
  தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச்
  சிற்றம் பலவனார்க்(கு)
எல்லை இல்லதோர்
  அடிமை பூண்டேனுக்கே!''

''ஆகா! இன்றைய என் மனநிலைக்கு ஆறுதல் தரும் பொருத்தமான பதிகத்தைத் தான் பாடினீர்கள்!'' என்று பரவசமானான் ஆதித்தன். ''இறைவனுக்கு எல்லை இல்லாததோர் அடிமையாகிக் கடமையைச் செய்பவனை வல்வினைத் தொந்தங்கள் பாதிக்கக் கூடாதுதான். புரிந்து கொண்டேன் புலவரே; நன்றியும் சொல்கிறேன்!''

இதன்பின்னர் விக்கியண்ணன் மீது குற்றச்சாட்டு படிக்கப்பட்டது. மதியமைச்சரின் கேள்விகளுக்கு அபிமானவல்லியின் மாளிகைக் காவலர்கள் பதில் கூறி வர முதல் நாள் முன்னிரவு நிகழ்ச்சிகள் அனைவர் மன அரங்கிலும் நாடகமாயின. ஆண், பெண் கண்டங்களிலிருந்து இருமுறை கூக்குரல் எழக்கேட்டு ஓடிவந்து விக்கியண்ணனைச் சூழ்ந்து கொண்ட போது தாங்கள் பார்த்ததையும் அபிமானவல்லி ''என்ன, இப்படி ஒரு காரியம் செய்து விட்டீர்கள்!'' என்று கூறக் கேட்டதையும் மாற்றமின்றிக்கூறினர்

உள்ளங்கைக்குள் அடங்கக் கூடிய காமிராக்களை முன்பெல்லாம் ஒற்றர்கள் பயன்படுத்துவார்கள் என்று அதிசயத்துடன் படிப்போம். இப்போது சர்வ சகஜமாகி விட்டது. திரைப்படத் தொழிலுக்கும் சினிமா ஓபேட்டர்களுக்கும் தேவையான பல பொருள்களைத் தயாரித்து அளித்து வரும் ஃபோட்டோ போன் நிறுவனம் அண்மையில் ஹாட் ஷாட் 110 என்ற பாக்கெட் காமிராக்களைத் தயாரித்துள்ளது. அடக்கமான வடிவம்காரணமாகவும், ''குறி பார், கிளிக் செய்'' என்ற எளிய செயல்பாடு காரணமாகவும் ரொம்பப் பிரபலமாகிவிட்டது இந்தக் காமிரா. நிகர விலைவு கலர் ஃபிலிம் விலையும் அதை பிராஸஸிங் செய்வதற்கான கட்டணமும் கூடக் குறைந்துள்ளன. இந்த வெற்றியைத் தொடர்ந்து தற்போது ஹாட்ஷாட் ஒரு 35 மி. மீ. காமிராவும் தயாரித்துள்ளது. பிக்கோலோ என்ற கலர் ஃபிலிமும் அறிமுகப்படுத்தியுள்ளது.

-ஜெயந்தி

அடுத்து அபிமானவல்லி விசாரணைக்கு உள்ளானாள். சாத்தன் தன் மாளிகைக்கு அன்று பின் மாலைப் பொழுதில் ஓவியங்கள் சில விலைபேச வந்தானென்றும் பின்னர் தன்னையே விலை பேசத் துணிந்தானென்றும் நல்லவேளையாக அவன் அபரிமிதமாக மது அருந்தியிருந்ததால் அவனை மஞ்சத்தில் படுக்க வைத்து உறக்கத்தில் ஆழ்த்தித் தப்புவது எளிதாயிருந்தது என்றும் கூறினாள். இதற்கு முன்பும் பலமுறை தன்னைக் காண விக்கியண்ணன் மேன்மாடத்தில் தாவிக் குதித்து வந்ததுண்டு என ஒப்புக்கொண்டாள்.

முடிவாகச் சாத்தன் நெஞ்சிலே பாய்ந்திருந்த கத்தி விக்கியண்ணனுடையதுதான் என்பது அதில் அவன் பெயர் பொறிக்கப் பட்டிருந்ததால் உறுதியாயிற்று.

இவை அனைத்தையும் மறுப்பின்றி ஒப்புக் கொண்டான் விக்கியண்ணன். ஆனால் தான் சாத்தனைக் கொல்லவில்லை என்றும் முன்பு எப்போதோ அபிமானவல்லியைக் காண வந்த சமயம் தன் குத்துவாளை அம்மாளிகையில் தான் மறந்து போய் விட்டுச் சென்றிருக்க வேண்டும் என்றும் வாதித்தான்.

இதையொட்டி அபிமானவல்லியிடம் மன்னர் விளக்கம் கோரவும் தனக்கு அம்மாதிரி ஏதும் நினைவில்லை என்பது போல் தலையசைத்து மௌனம் சாதித்தாள் அவள்.

கனத்த நிசப்தத்துடன் அரசனின் தீர்ப்புக்கு அவையினர் காத்திருந்தனர். ஆடிக் காற்றில் அரச இலையாக நடுங்கினான் அபிமானவல்லி. தீர்ப்பு என்னவாயிருக்குமோ என்றெண்ணுகையில் விக்கியண்ணனின் முதுகுத் தண்டில் சில்லெனக் குளிர் பாய்ந்தது.

(தொடரும்)

இலவச அன்பளிப்பு!
கண்கவர் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூன்



க்ளுகோன்-டி® தரும் உடனடி சக்தியுடன்

உடனடி சக்திதரும் உமது தினசரி பானம். அதனைக் கலந்து அருந்திட பளிச்சென ஒரு வழி


இந்த மின்னும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூன். 400 கிராம் க்ளுகோன்-டி உறை வாங்கினால் இலவசம். க்ளுகோன்-டி புத்துணர்ச்சிதரும், குளுமையூட்டும், சக்திதரும்.

வைட்டமின் D, கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் ஆகியன செறிந்தது. பழரசம், பால், தேநீர் காப்பி, தண்ணீர் இவற்றிலே கலந்தோ, நேரடியாகவோ அருந்தலாம்.

சிறப்பு அன்பளிப்பாக நாமளிக்கும் ஸ்பூனை மட்டும் பயன்படுத்தத் தவறாதீர்கள்!

HTB-GLL-9686





வரம்புக்குட்பட்ட இருப்பு: குறிப்பிட்ட விற்பனைத் தலங்களில் மட்டுமே கிடைக்கும்.

உடனடி சக்தி பெற—க்ளுகோன்-டி®

உடல்நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

SIZE 20 X 12.5 CM. KALKI

சில பல

மீ. ப. சோமு



"நீங்கள் தொகுத்துள்ள புதுமைப் பித்தன் கதைகள் என்ற புத்தகம் இப்போது பீ. ஏ. வகுப்புக்குத் துணைப் பாடமாக இருப்பதால், மாணவர்கள் மட்டுமல்லாமல் பெற்றோர்களாகிய நாங்களுமே உங்களுடைய முன்னுரையைப் படித்துப் புதுமைப்பித்தனைப் பற்றியும், அவருடைய நேர்த்தியான சிறுகதைகள் பற்றியும் பல புதிய செய்திகளையும் கருத்துக்களையும் தெரிந்து கொண்டோம். எனவே ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். நீங்கள் உங்களுக்கு அவர் எழுதிய அதியற்புதமான இரண்டு கடிதங்களைக் கலைமகளில் அவர் மறைந்த புதிதில் வெளியிட்டீர்களே, அதுபோல மேலும் உள்ள கடிதங்களை சிலபலவில் கொடுத்தால், இன்றையத் தலைமுறையினருக்குப் புதுமையாகவும சுவையாகவும் இருக்கும். செய்வீர்களா?''

இவ்வாறு திண்டுக்கல்லிலிருந்து சி. இராமசாமி எழுதுகிறார். புதுமைப்பித்தனைப் பற்றித் திருச்சி வி. கிருஷ்ணனும் ஒரு முக்கியமான செய்தியைக் கேட்டிருக்கிறார்.

''புதுமைப்பித்தனுக்கும் கல்கிக்கும் இடையே பெரிய மனஸ்தாபம் இருந்து வந்தது என்று இங்கே பலர் பலபடியாகச் சொல்கிறார்கள். முக்கியமாக, ராஜாஜியையும், கல்கியையும் டி. கே. சி. யையும் மிகக் கடுமையாகத் தாக்கிப் புதுமைப் பித்தன் எழுதியுள்ள ஒரு பாடல் இலக்கிய நண்பர்களிடையே பவனி வருகிறது. நானே திருலோக சீதாராம் அவர்கள் இந்தப் பாடலைப் பாடிக் கேட்டிருக்கிறேன். சில நாட்களுக்கு முன்பு பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் இந்தப் பாடலைப் பற்றிச் சுவையானதோர் சர்ச்சை நடந்தது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். பாடலை எழுதியவர் திருச்சிற்றம்பலக் கவிராயர் என்னும் புனைபெயர் கொண்ட தொ. மு. சிதம்பர ரகுநாதன் அவர்களா, அல்லது வேளூர் கந்தசாமிக் கவிராயர் என்னும் புதுமைப்பித்தன் அவர்களா? பாடலை என் போன்று பலரும் கேட்டிருப்பதால், அதன் ஆசிரியர் யார் என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். சில பலவில் விளக்குவீர்களா?''

முதலில் கடிதங்களைப் பிரசுரிப்பது குறித்துத் திண்டுக்கல் நேயரின் வேண்டுகோள்: இது சம்பந்தமாக ஒரு வார்த்தை: இலக்கிய மதிப்பீடு, பத்திரிகை தருமம் ஆகியன பற்றிப் புதுமைப்பித்தனுக்குச் சில ஆணித்தரமான அபிப்பிராயங்கள் உண்டு. கூர்மையான பார்வையும், 'கருக்'கென்று பாய்கிற அரிய வாக்கியங்களும், சிந்தனை நுட்பமும் வாய்ந்த அந்த மதிப்பீடுகளை அவ்வப்போது வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவேன். சந்தேகமில்லை. ஆனால் நம்மிடையே வாழ்ந்து வருகிற சில அறிஞர்களைப் பற்றி அவர் மனம்விட்டு நையாண்டியாக எழுதியுள்ள பகுதிகளை வெளியிடத் தயங்குகிறேன். இது புதுமைப்பித்தனுடைய கடிதங்களுக்கு மட்டுமல்ல. டி. கே. சி. கடிதங்களுக்குமே பொருந்தும்! ராஜாஜியின் சிற்சில குறிப்புக்களும் ஒலிப்பதிவுகளும் கூட.





அப்படியே! நம்பிக்கையிலும் அன்பிலும் சில விஷயங்களை அந்தரங்கமாக அவர்கள் சொல்லியிருப்பார்கள். அவற்றை முழுதும் பிரசுரிப்பதில் எனக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது என்பதை நேயர்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

இனி திருச்சி நேயரின் கடிதம்:

புதுமைப்பித்தனுக்கும் கல்கிக்கும் நடுவே இருந்த, நடந்த, பல இலக்கியச் சண்டைகளுக்கு மத்தியில் ஒரு பெரிய பீரங்கிப்புகை 1945-இல் திடீரென்று கிளம்பியது!

மு. அருணாசலம் அவர்கள் இக்காலத்துத் தமிழ் வசன நடையை மதிப்புரை செய்து ஒரு நூல் எழுதினார். அந்தப் புத்தகம் வெளியானதோ இல்லையோ, கூவம் நதியே தீப்பிடித்து எரிந்தது என்று சொல்ல வேண்டும்! காரணம், அந்த நூலிலே கல்கி, டி. கே. சி. முதலிய சிலரை மிகவும் உயர்வாகப் பாராட்டிய ஆசிரியர், புதுமைப்பித்தனையும் வேறு எழுத்தாளர்களையும் சட்டை செய்யவில்லை. அவருடைய மதிப்பீடு அது. ஆனால் புதுமைப்பித்தனுடைய இலக்கியக் கோட்பாட்டுக்கு இது ஏற்கவில்லை. வெகுண்டெழுந்தார். விறுவிறுப்போடு ஒரு பாட்டு எழுதினார், நான்கே வரிகளில்! பிறகு, இந்த நான்கு வரிகளும் ஒரு காவியமாகவே விரிந்தன! பாடல் முழுவதும் எனக்கு அவர் அனுப்பி, என்னிடம் இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சர்ச்சை நடந்த பாட்டு இதுவே. பாடலை இப்போது படித்தாலும் சிற்சில இடங்களில் மூச்சுத் திணறுகிறது! அதே சமயம் அதன் கவிநயம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது! சில பெரியோர்கள் மீது சொ[க]ற்களை வீசியுள்ளதைப் பார்க்கும் போது, அதை அப்படியே வெளியிடுவது உசிதமில்லை என்று தோன்றுகிறது. ஆனால் அந்தக் கவிநடை அதை உடனே வெளியிட வேண்டும் என்னும் ஆசையை எழுப்புகிறது! என் மனநிலையை உங்களிடம் அப்படியே சொல்கிறேன். மேலும் சொல்வதாக இருந்தால், இந்தப் பாடலை அதன் முழு வடிவிலும் வெளியிடுவதற்காகப் புதுமைப்பித்தன் இருந்தபோதே ஒரு முயற்சி நடந்தது! நான் தலையிட்டு அதை நிறுத்த நேர்ந்தது.

ராஜாஜி என்னிடம் கேட்டார், ''நீ ஏன் அதை நிறுத்தினாய்? முட்டையும் தாரென்னையும் வாங்கிப் பழகிய உடம்புதானே இது.''

''அதுசரி; ஆனால் அந்தப் பழக்கத்துக்கு உள்ளாகாத சில உடம்புகளும் மாட்டிக் கொண்டிருக்கின்றனவே!'' என்று சொன்னேன். சிரித்து விட்டார்!

''அதிகார பூர்வமாக'' முழுப்பாட்டும் வெளியாகாவிட்டாலும் பலருக்கு முக்கிய பகுதிகள் மனப்பாடமே ஆகியிருப்பதால், சர்ச்சைக்குள்ளான இந்தப் பாடலின் ஆசிரியர் யார் என்ற கேள்விக்கு விடையாக நண்பர் புதுமைப்பித்தனின் 5.11.1945 கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:—

''இது இரண்டுபேர் பெற்ற கதம்ப விவகாரம். தமிழ் வசன நடை புத்தகம் வந்தவுடன் ரகுநாதன் ஒரு பிரதியை எடுத்து வந்து என்னிடம் கொடுத்து மதிப்புரை ''காரமாக'' எழுதவேண்டும் என்றார். நான் புத்தகத்தை வாங்கியதும், ''மூளையருணாசலமே...'' (நான்கு வரிப் பாட்டு) என்பதுதான் இதற்கு மதிப்புரை என்று சொன்னேன். மறுநாள் என்னை ரகுநாதன் சந்தித்த பொழுது ''மூளை அருணாசலமே'' என்றெடுத்த பாட்டைக் கொண்டு வந்தார். அதை நான் திருத்தி அமைத்ததுதான் இப்பொழுது அது பெற்றுள்ள உருவம். உண்மையில் இது நாங்கள் இருவரும் ''பாடியது''(!) கேட்டவர்கள் எல்லோரும் அதை நான்தான் எழுதியிருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். என்ன செய்வது? சுமை தாங்கிதான்! டி. கே. சி., ராஜாஜி, கல்கி விளக்கங்கள் தான் என் கைச்சரக்கு!''

இறை வழிபாடு தொடர்பாக எனக்குச் சில ஐயப்பாடுகள் ஏற்பட்டன. அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜிக்கு என் சந்தேகங்களைத் தெரிவித்து எழுதினேன். அவர் தம் புகைப்படமொன்றிலேயே தமது மறுமொழியை எழுதி அனுப்பினார்:

கிருஷ்ணமூர்த்திக்கு அன்புடன்:

நாம் செய்வோம் என்று பிறர் எதிர்பார்க்கும் எந்த வேலையையும் பக்தியுடன் செய்தால் அதுவே கடவுள் ஆராதனையாகும்.

இராஜகோபாலாச்சாரி.
20.9.48.

அறிவுரையுடன் கூடிய அமரரின் திருவுருவப்படத்தை என்றென்றும் பொக்கிஷமாய்ப் பாதுகாப்பேன்.

-டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி
சென்னை—24.



மாலையில் பூக்கும் மலர்கள்

சிவசங்கரி

17

ஆறரை மணிக்கு அலாரம் அடித்ததும் பாலாஜி திடுக்கிட்டுக் கண் விழித்தார்.

எழுந்திருக்க மனமில்லாதது போல ஒரு நிமிஷம் அப்படியே படுத்து, திரைச் சீலைகளின் இடுக்கு வழியாகத் தெரிந்த காலை வெளிச்சத்தை வெறித்தார்.

பக்கத்துப் படுக்கையின் வெறுமை அடங்கி இருந்த வலியை உசுப்பிவிட, படுத்தது போதும் என்று எழுந்து குளியலறைக்குச் சென்றார்.

பல் தேய்த்த கையோடு, உடைகளைக் களைந்து, ஷவரைத் திருப்பி ஊசியாய் விழுந்த குளிர்ந்த நீரில் தலையை நீட்டினார்.

நீரின் ஸ்பரிசம் மனசுக்கும் உடம்புக்கும் இதமாக இருப்பதை உணர்ந்தபடியே ஸ்டாண்டில் இருந்த சோப்பை எடுக்கக் கைநீட்டினார்.

தட்டையாக, தேய்ந்து போன சோப் துண்டு, கையில் அகப்படாமல் நழுவிக் கீழே விழுந்தது.

சோப் தீர்ந்து போய் இரண்டு நாட்களாகிவிட்டன. ஒவ்வொரு தரமும் குளிக்க வந்து, ஷவரடியில் நின்று உடம்பை நனைத்துக் கொண்ட பிறகுதான் புது சோப் எடுத்து வரவில்லை என்பது நினைவுக்கு வருகிறது.

ஷவரை நிறுத்தியவர், டவலைச் சுற்றிக் கொண்டு வெளியில் வந்தார்.

ட்ரெஸ்ஸிங் டேபிள் ட்ராயரில், அலமாரியின் தட்டுகளில் சோப் இருக்கிறதா என்று தேடினார்.

ம்ஹூம், காணோம்.

டாய்லட் சமாசாரங்களை அவ்வப்போது ஒன்று இரண்டு என்று வாங்காமல், ஆறு மாசத்துக்குத் தேவையானவற்றை மொத்தமாக வாங்கும் பழக்கம் கௌரிக்கு உண்டு என்பது அவருக்குத் தெரியும்.

ஆனால், அவைகளை எங்கே வைத்திருக்கிறாள்?

பெட் ரூமில் இல்லை.

கீழே ஸ்டோர் ரூமில்?

வா.. பேஸினுக்குப் பக்கத்திலிருக்கும் அலமாரியில்?

எந்த சாமானும் தீர்ந்து விடும் முன்பாகப் பார்த்துப் பார்த்து இதுநாள் வரை அவள் எடுத்து வைத்திருந்ததில், இதுஇல்லை, அது காணோம் என்று வாய் திறந்து கேட்கும் அவசியம் எங்கே இருந்தது?

கதவைத் திறந்து தலையை வெளியில் நீட்டி 'ரங்கா' என்று குரல் கொடுத்தார்.

பத்து நொடிகள், மறுபடி 'ரங்கா' ம்ஹூம், பதிலில்லை.

எங்கே போய்விட்டான்?

பின் கட்டில் இருக்கிறானா?

கதவைச் சாத்திக் கொண்டு திரும்பியவரிடம், என்ன விஷயம் என்று கேட்பது போல, விக்ரம் சுற்றிச் சுற்றி வந்தது.



நின்று அதன் தலையைத் தட்டிக் கொடுத்தார்.

"அம்மா இல்லாம எனக்கு ஒண்ணுமே சரியாத் தெரியலேடா. சோப் எங்க இருக்குன்னு கூடத் தெரியலே பாரு"—

சின்ன குரலில் வருத்தத்துடன் பேசியவர் மீண்டும் குளியலறைக்குச் சென்று கீழே விழுந்து கிடந்த துண்டத்தை எடுத்து ஒரு தேய்ப்பு தேய்த்துக் குளித்து விட்டு, வெளியில் வந்தார்.

அணிய வேண்டிய வெள்ளை சபாரி ஸூட்டை வெளியே எடுத்து வைத்தபின் காலுறைகளைத் தேடினார்.

கௌரி இருக்கும்போது ஆறு ஜோடிகளுக்குக் குறையாமல் இருப்பவைகளில் இன்று ஒன்றைக் கூடக் காணோம்.

எங்கே போயின அத்தனையும்?

பாண்ட், ஷர்ட், வேட்டிகளைக் கலைத்துத் தேடிய போது அடியில் கிடந்த இரண்டு ஜோடிகள் அகப்பட்டன.

ஒரு ஜதையைக் கட்டில் மேல் வைத்து விட்டு ஸ்லிப்பான்களைக் குனிந்து கையில் எடுத்த போது அவற்றின் உள்ளேயே முதல் நாள் அணிந்த காலுறைகளைத் திணித்திருப்பது தெரிந்தது.

அவர் எப்போதுமே வெள்ளைக் காலணிகள் தான் அணிவார் என்பதால் நாலு ஜோடி ஸ்லிப்பான்கள் உண்டு. போட்ட ஒன்றையே மறுநாளும் அணியக் கூடாது என்பதில் கௌரி கறாராய் இருப்பாள்.

—நான் பூரா போடறதை எல் மறுநாள் போடணும்பாளா? அதுக்கு ஓய்வு வேணுமா? பாலிஷ் செய்து சுத்தமா வைக்கச் சொல்றேன். மத்ததைப் போட்டுக்கங்க...

கையில் எடுத்த காலணிகளை வைத்து விட்டு இன்னொரு ஜதையைப் பாலாஜி எடுத்தார்.

பௌடர் பூசின மாதிரி தூசி...

வாயால் ஊதி, இரண்டு தரம் கையால் தட்டினார்.

ஹாலில் இருந்த இதர காலணிகள் மேல் பார்வை விழ, அவைகளும் தூசிப்போர்வை போர்த்துக் கொண்டிருப்பது புரிந்தது.

கௌரி இருந்தால் இப்படித் தூசியோ, தும்போ எதன் மேலாவது இருக்குமா? வாட் எ க்ளீன் பர்ஸன் ஷீ வாஸ்!

தான் மட்டும் சுத்தம் என்றில்லாமல் தன் சுற்றுப்புறத்தையும் எத்தனை சுத்தமாக வைத்துக் கொண்டிருந்தாள்?

ஒரு வீட்டை நிர்வகிப்பது என்றால் என்னவோ சாதாரண விஷயம் என்று நினைத்துக் கொண்டிருந்தது எத்தனை தவறான கணிப்பு?

சின்னச் சின்னதாய் எத்தனை வேலைகள்! கவனிப்புகள்?

ஆட்கள் இருந்தால் மட்டும் ஆயிற்றா?

அவர்களுக்கு வேலை சொல்லிக் கொடுத்து, வேலை வாங்கி, மேற்பார்வை செய்து,



வெளியில் வாசலில் சென்று வந்து. வீட்டில் உள்ளவர்களுக்கு ஈடு கொடுத்து. வருவோர் போவோரை அக்கறையுடன் கவனித்து......

—இன்னிக்கு கிதா விட்ட. அரைமணி ஒரு லெக்சரே செஞ்சிட்டேன் பாலா.... வரவர நிறைய பொம்பளேங்க நடுவுலே ஒரு தாழ்வுணர்ச்சி உண்டாயிருக்கு. வெளில போயி இன்னொருத்தர் கிழே உழைச்சி சம்பாதிக்கறது தான் பெருமையா? வீட்டு வேலேகளைக் கச்சிதமா கவனிக்கறதும், அருமையா குடுத்தனம் பண்ணி நிறைவா வாழறதும் உசத்தி இல்லையா? பணத்தேவை இருந்தா துன்னு வேலே பாக்கறது அவசியம். இல்லா தப்போ? இப்ப என்னேயே எடுத்துக்கங்க—நான் வெளியிலே போய் வேலே பார்க்கறேனு? பணம் சம்பாதிக்கறேனு? ஆனு. எனக்கு அந்த காம்ப்ளெக்ஸ் இல்லேயே? எல்லாம் நம்ப மனசை நாம வைச்சிக்கற விதத்துல தானே இருக்கு? என்ன நான் சொல்லறது?

—அ... அ... உன்னேயும் இந்த லிஸ்டுலே சேர்த்தா எப்படி டார்லிங்? நீ வேலே பண்ணலேன்னு பேரே ஒழிய, எனக்குக் காரியதரிசி நீதான்; நர்ஸிங் ஹோமை நிர்வகிக்கறது நீதான். கணக்கு வழக்குகளே எல்லாம் எழுதி. ஆடிட்டர் கிட்ட கொடுக்கறது நீதான்...

என் மூத்த பையனுக்குச் சிறு வயதில் விஷமத்தனம் அதிகம். நான் என்ன செய்தாலும் தானும் செய்கிறேன் என்று வந்து பாடாய்ப்படுத்துவான். பள்ளிக்கூடம் அனுப்பும் வயதாகும் வரை அவனே வைத்துக் கொண்டு நான் பட்டபாடு... இப்போது குறும்பெல்லாம் அடங்கிப் பத்தாவது படிக்கும் இந்தச் சாதுப் பிள்ளேயா அன்று அப்படி இருந்தான் என்று எனக்கே சந்தேகம் வரும்போது இந்தப் படத்தை எடுத்துப் பார்த்து என் ஞாபக சக்தியில் நம்பிக்கை பெறுவேன்!

-மீனு கிருஷ்ணமூர்த்தி
திருவாரூர்.



—அடேயப்பா! இத்தனே வேலேயா செய்யறேன்! அப்ப, சம்பளம் கேட்டுட வேண்டியதுதான்.

—பார்த்து. கட்டுப்படியா ருப்பல கேளும்மா...

சற்றே முன்னுல் சாய்ந்து குழைந்து கௌரி சிரிக்க...

சரியாகத் துவட்டாத தலேயிலிருந்து நீர்த் திவலேகள் சொட்டி. எடுத்து வைத்திருந்த ஸபாரி ஸூட்டில் பொட்டிட்டன.

பிரயத்தனத்துடன் சிந்தனேகளே மாற்றிக் கொண்டு, பாலாஜி தயாரானுர்.

அன்றைக்குச் செய்யப் போகிற அறுவைச் சிகிச்சை பற்றி நினேப்புகளே வளர்த்தபடி கிழே வந்தார்.

பூஜை அறையைத் தாண்டுகையில் லேசாகத் தாமதித்தார்.

உள்ளே போகலாமா?

போக வேண்டும் போல, பிரார்த்திக்க வேண்டும் போலத் தோன்றவில்லேயே?

—இன்னிக்கு நான் ஸ்லோகம் எதுவும் சொல்லலே பாலா... என்னமோ தெரியலே. காரணமே இல்லாம கவனம் சிதறி, சிதறிப் போச்சு. இரண்டு தரம் தவறினதும், 'மனசு லயிக்கலே கடவுளே – இன்னிக்கு ஸ்லோகம் சொல்லப் போறதில்லே'னு வந்திட்டேன். செயற்கையா எதுவும் பண்ணப் பிடிக்கலே பாலா. உங்களுக்கு நான் என்ன சொல்றேன்னு புரியுது. இல்லே?

சாப்பிட உட்கார்ந்தார்.

ருக்மணியம்மா செய்து வைத்திருந்த இட்லிகளேப் பவ்யமாக ரங்கன் பரிமாறினுன்.

''மேலே என் பாத்ரூம்ல சோப் இல்லே, எடுத்து வைச்சிடு.''

''சரிங்க''—

''விக்ரம் பால் சாப்பிட்டானு?''—

''இன்னும் இல்லீங்க... இனிமேதான்.''

ஆறிப் போயிருந்த இட்லியை விண்டு வாயில் போட்டார்.

உள்ளே போக மாட்டேன் என்று அது சண்டி பண்ணியது.

ஜூஸை எடுத்து ஒரு வாய் குடித்தார். கசந்தது.

—நீ ஜூஸ் பண்ணு மட்டும் ஜோரா இருக்கு. மத்தவங்க செஞ்சா கசக்குதே. ஏன் கௌரி?—

—அதான் என் கைராசி பாலா....

சிரித்தவள். சொன்னுள்:

—மிக்ஸிலே பழங்களேப் போடறப்ப கவனமா இருக்கணும். கொட்டை அரைபட்டு டிச்சின்னு கசக்கும்.

பாலாஜி டிபன் தட்டை அப்படியே ஒதுக்கித் தள்ளினுர்.

''பசிக்கலே – ஆடா காப்பி மட்டும் வாங்கிட்டு வா''—

அவர் கை கழுவி வருவதற்குள் மேஜை மேல் காப்பி இருந்தது; ஒரு பக்கமாய் ருக்மணியம்மா.

''சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. நான் உங்களே விட வயசுலே பெரியவ. அந்த உரிமைல சொல்றேன். போனவங்க போயிட்டாங்க; அவங்களே நினேச்சிக்கிட்டு நீங்க சாப்பிடாம, தூங்காம, உடம்பைக் கெடுத்துக்கறது நல்லதுக்கு இல்லே...''



CASBS-112-203 TAM

கண்கவரும் வண்ணக் கைத்தறி ஆடைகளை
நாங்கள் தயாரிக்கிறோம். தேவையான
இடுபொருட்களும் தொடர்ந்த வேலை
வாய்ப்பும் நியாயமான கூலியும் கிடைக்கிறது.
எப்படி ?
கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
கைகொடுத்து உதவுகின்றன.



எங்கும் எதிலும் கூட்டுறவு
வளம் பொங்கப் பொலிவதும் கூட்டுறவு.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

பாலாஜி பதில் பேசாமல் காப்பியைக் குடித்தார். வாசல் பக்கமாய் நகர்ந்தார்.

வழி அனுப்ப வந்த விக்ரமின் கழுத்தைக் குனிந்து வருடிக் கொடுக்கையில், அதன் வாய் நாறுகிற மாதிரி பட்டது.

''குளிப்பாட்டி நாளாச்சா, ரங்கா? நாத்தம் வருது?''—

''இல்லிங்க... மூந்தா நேத்து கூடக் குளிப்பாட்டினேங்க...''

பொய் சொல்லுகிறானா?

அப்புறம் ஏன் இந்த நாற்றம்?

கூடத்தைத் தாண்டும் போது போன் ஒலித்தது.

நாழியாகிவிட்டது; இந்தச் சமயம் பார்த்து யார் கூப்பிடுகிறார்கள்?

''பெரியம்மா கூப்பிடறாங்க ஸார்.''

ரிஸீவரை வாங்கி 'ஹலோ' என்றார்.

''நான்தான்ப்பா... அக்கா பேசறேன்... நர்ஸிங் ஹோமுக்குக் கிளம்பிட்டியா?''—

''ம்''—

''ராத்திரி தூங்கினியா பாலா?''—

''ம்''—

''நேத்து ராத்திரி பத்து மணி வரைக்கும் வீட்டுக்கு வரலே போல இருக்கே?''—

''மெரினாலே உட்கார்ந்திட்டிருந்தேன்க்கா....''

சுந்தரி நீளமாய்ப் பெருமூச்சு விட்டாள்.

''உன்னை நினைச்சா என் வயிறு பிரண்டு போகுது பாலா... இருவது நாள்ல சன்யாசி மாதிரி ஆயிட்டே... பேச்சும், சிரிப்பும் அந்த மகராசியோடயே போயிட்ட மாதிரி ஒடுங்க போயிட்டே...''

''.......''

''நேத்து மாமா கூட வருத்தப்பட்டுக் கிட்டார், இப்படி இவன் உருகிப் போறானேன்னு. அங்க வந்து உன் கூட இருப்பம்னா, இங்கு வீடு வாசல் திண்டாடிப்போகுது.''

''.......''

''காரியமெல்லாம் முடிஞ்சி ஒரு வாரம் கூட ஆயாச்சு, இன்னும் நீ தேறாமல் இருக்கறது தப்பு பாலா... உடம்புக்கு வர்றதும், சாவும் உனக்குப் புதுசில்லே.... நடந்தது நடந்தாச்சின்னு விட்டுட வேண்டியதுதான், என்னப்பா?''—

''ம்''.

''ராத்திரி பால் வைச்சா அப்படியே இருக்குதாம் — சாப்பாடு வேணாம்னு சொல்றியாம். என்ன பாலா இதெல்லாம்? போனவளை நினைச்சி நீ இப்படி வேதனைப்பட்டா...''

பாலாஜி அலுப்புடன் குறுக்கிட்டார்.

''ஆபரேஷனுக்கு நாழியாச்சிக்கா...''

''உன்னை விட்டா எனக்கும் யாரு? சொல்லு தம்பி? நீ பழையபடி இருக்கணும்- அதான் எனக்கு வேணும். சாயங்காலமா இங்க வர்றியாப்பா? பேசிட்டு இருந்திட்டுப் போலாம்...''

''பார்க்கலாம்.''

''உன்னால வர முடியாட்டி, நாங்க வரோம்... உன்னை இப்படியே தனியா உருக விடறது நல்லதுக்கில்லே.''

தொடர்ந்து சுந்தரியைப் பேச விடாமல், சாயங்காலம் பார்க்கலாம் என்று சொல்லித் தொடர்பைத் துண்டித்த பாலாஜிக்குள் நமநமவென்று எரிச்சல் மண்டியது.



நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டு, தமிழக அரசு கலைக்கப்பட்ட தருணம். கலைஞர் கருணாநிதியைப் பார்ப்பதே தவறு பேசுவது குற்றம் என்று கருதப்பட்ட காலம். பெங்களூர் தி. மு. க. தோழர்கள் மிகத் துணிச்சலுடன் கலைஞரை வரவழைத்து கட்சிக்கு நிதி வழங்கியதுடன் நெருக்கடி நிலைப் பிரகடனத்தை எதிர்த்த கலைஞருக்குப் பாராட்டும் வழங்கினர். அப்போது முதல் நிலை அணுக்கத் தொண்டனாய் நான் கலைஞருக்குப் பணியாற்றியபோது எடுக்கப்பட்ட படம் இது. கலைஞருடன் சேர்ந்து வேறு பல நிகழ்ச்சிகளின் போது நான் படமெடுத்துக் கொண்டிருந்தாலும் இந்தப் படத்துக்கு என்றும் நான் தனி மதிப்பு தருவது இயல்புதானே?

-ப. மூர்த்தி
பெங்களூர்.

போனவன் போய் விட்டான் — அவளை மறந்து விடு... நினைக்காதே, வருந்தாதே, வேதனைப்படாதே. நீ சாப்பிடு. நீ தூங்கு. நீ நன்றாய் இரு...

இந்தப் பேச்சைத் தவிர இவர்களுக்கெல்லாம் வேறு ஒன்றும் தெரியாதா?

காரியங்கள் முடியும் வரை சுந்தரி, மாமா குருமூர்த்தி இங்கே இருந்த போதும் அதே பேச்சுதான்.

பாவி — போய் விட்டாளே... உன்னைக் குலைய வைத்து விட்டுப் போய்விட்டாளே... உன் சிரிப்பு சந்தோஷத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டாளே.

யார் பாவி?

என் கௌரியா?

இருபது வருஷங்கள் என் நிழலாக, நிலவுமாக, தென்றலாக, உணவாக, இன்பமாக, உயிராக, என் எல்லாமாக வாழ்ந்த என் கௌரியா?

உன் நினைவை அழி என்கிறார்களே இது சாத்தியமா கௌரி?

கோபத்தில் கண்கள் வேர்த்துப் போக, இரண்டு தரம் இமைகளைக் கொட்டி, மசமசத்த பார்வையைச் சரியாக்கிக் கொண்டவர், வேகமாகப் படிகளில் இறங்கி நர்ஸிங்ஹோமை நோக்கி நடந்தார்.

(தொடரும்)

உறவு சிறுகதையாறும்

அனுராதா ரமணன்

அன்று முதல் ஓலை படிக்கப்படுகிறது. தேவாலயத்தின் மிகப் பெரிய ஹாலில், ஞாயிறு பூஜைக்காக வழக்கமாய்க் கூடியுள்ள ஜனங்களின் மத்தியில்...

"...திரு ஜோசப் அவர்களின் குமாரத்தி ரீடாவைச்சேர்ந்துப்பட்டு திரு ஸ்டீபன் அவர்களின் குமாரன் லாரன்ஸுக்கு மணமுடிப்ப தாய்க் கர்த்தரின் திருவுளத்துடன் நிச்சயிக்கப்பட்டுள்ள திருமணம். பெண் வீட்டாரின் பங்கு கோவிலான இந்தப் புனித பாதிமா தேவாலயத்தில் ஜூன் திங்கள் இருபத்தியொன்பதாம் நாள் நடைபெற இருக்கிறது. இத் திருமணத்தில் விக்கினம் காண்பவர்கள் யாராயினும்சொல்லலாம்..."

பாதிரியார் முதல் ஓலையைப் படிக்கையிலேயே பெண்கள் பகுதியில் சலசலப்பு... எதிர்காலக் கனவுகளில் மூழ்கியவாறு தலைகுனிந்து அமர்ந்திருந்த ரீடா, ஓரக் கண்ணால் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த டாரதியைப் பார்க்க...

அவள் நெஞ்சம் 'திக்'கென ஒரு முறை அதிருகிறது.

டாரதி அவளின் அருமைச் சினேகிதி. சின்னப் பெண். கள்ளம் கபடு அறியாத உண்மையான கிறிஸ்துவப் பெண்.

அப்பேர்ப்பட்ட டாரதி, தனது தாயின் வலக்கரத்தை, உயிரே எழும்ப விடாமல் அழுந்தப் பற்றிக் கொண்டிருந்தாள்.

வயதான அந்த மூதாட்டியின் கரம் துயரத்தினலோ அல்லது ஃபாதரின் ஓலை வாசிப்புக்கு மறுப்புச் சொல்ல வேண்டுமென்றே மகளின் பிடிக்குள் துடித்துக் கொண்டிருந்தது.

அதற்கு மேல் ரீடாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

என்னமோ அவள் மனசில் கல் விழுந்தாற் போல...

டாரதியும் அவள் தாய் அற்புதம்மாளும் எதையோ மறைக்கிறார்கள்.

என்ன அது...?

ரீடாவின் நீண்ட விழிகள், மாப்பிள்ளை வீட்டவர் அமர்ந்திருந்த திசையை ஒரு கணம் சலித்துவிட்டு, மீண்டும் அன்னை மேரியின் திருவுருவத்தில் நிலைக்கிறது.

ஆண்கள் அமரும் பகுதியில் தலையை எந்தப்புறமும் திருப்பாமல் இறுகிப்போய் அமர்ந்திருக்கிறான் லாரன்ஸ். உள்ளத்து உணர்ச்சிகளை எத்தனைதான் சாமர்த்தியமாக மறைத்தாலும் அவனது கன்னப் பகுதி தாடை. எலும்புகளின் விறைப்பு ரீடாவின் கண்ணுக்குத் தப்பவில்லை.

வாஸந்தி அமெரிக்கா சென்றிருக்கிறார். அவரிடமிருந்து தபாலில் கட்டுரை வரத் தாமதமாகிறது. அடுத்த இதழில் அவர் கட்டுரையைப் பிரசுரிக்க முடியும் என்று நம்புகிறோம்.

-ஆசிரியர்

தனக்குத் தெரியாமல், தன் சினேகிதி காதலில் சிக்கி விட்டாளோ...? இவள் காதலித்தது லாரன்ஸைத்தானோ...?

எத்தனை அவமானச் சொற்களைச் சுமந்திருக்கிறார்கள் இந்த டாரதியும் அவள் தாயும்!

அற்புதம்மாளின் முகத்தில் நிரந்தரமாகவே சோகம் படிந்திருக்கும். ஏனெனில் முறை தவறியவள் என்கிற முத்திரையைச் சுமக்கின்ற முகம் அது.

பதினெட்டு வருடங்களுக்கு முன் — நீலகிரியில் ஒரு ஆங்கிலேயக் குடும்பத்தில் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் ஆயாவாக வேலை பார்த்து வந்த அற்புதத்தை — அந்த வீட்டு எஜமானனின் தம்பியே, தனது ஆசைக்குப் பலியாக்கிக் கொள்ள... அற்புதம், வயிற்றில் டாரதியை மட்டுமல்லாது முறை தவறியவள் என்ற பட்டப்பெயரையும் சேர்த்துச் சுமந்தாள்.

அற்புதம் சிசுவுடன் கோயமுத்தூர் அநாதை விடுதியில் தஞ்சம் புகுந்தாள். அதற்குப்பின் எத்தனையோ கஷ்டம்... டாரதியை வளர்க்கும்பொழுதே அற்புதம் தோத்திரப் பாடல்களைப் பாடவும், இளம் பெண்களுக்கும் மூதாட்டிகளுக்கும் புனித பைபிளைப் படித்துக் காட்டி விளக்கவும் கைவேலைகள் பல நேர்த்தியாய்ச் செய்யவும் கற்றுக் கொண்டாள்.

ரீடாவின் குடும்பத்துக்கு அவள் அறிமுகமானதும் இப்படித்தான். ரீடாவின் பாட்டியொருத்தி படுத்த படுக்கையாய் மா



ணத்தை எதிர்பார்த்துக் கிடந்தபோது... அவளது மனச் சாந்திக்காகத் தினமும் வந்து கவிசேஷம் படிப்பதும், புதன் கிழமைகளில் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடுவதுமாய்....

அப்பொழு தெல்லாம் அற்புதத்தின் கூடவே வருவாள் டாரதி. தன்னை விடவும் நாலைந்து வயதுச் சிறியவளானாலும், அந்தச் சிறுமி, ரீடாவின் நெஞ்சில் இடம் பெற்றுவிட்டாள்.

பாட்டி பரமண்டலத்துக்குப் போன பிறகும் அக் குடும்பத்துடன் அற்புதம், டாரதியின் தொடர்பு நீடித்ததென்றால்... அதற்கு முக்கிய காரணம் ரீடாதான்.

''அம்மா அற்புதம்மா வீட்டே நானும் தோத்திரப் பாட்டுக் கற்றுக்கப் போறேன்!''

''செய் மகளே.''


ரீடாவின் தாய் நல்லவள். நாகரீகம் தெரிந்தவள். நல்ல மனிதர்களை இனம் கண்டுகொள்ளக் கூடிய திறமை மிக்கவள். அவளுக்கு அற்புதத்தின் கடந்த காலம் ஒரு பெரிய விஷயமாகவே படவில்லை. மாறாக, அவளது ஒவ்வொரு செய்கையிலும் கரைந்து போனாள்.

இரண்டாவது ஓலை வழங்கும் ஞாயிற்றுக் கிழமைக்கு முதல் நாள்.

ரீடாவின் தாய், அற்புதத்தையும் அழைத்துக்கொண்டு புடவைக் கடைகளுக்கும், நகைக் கடைகளுக்குமாய்ப் படையெடுக்க... கூடவே ரீடாவும்.... டாரதி தனக்குத் தலைவலி என்று வீட்டிலேயே பிடிவாதமாய்த் தங்கி விட்டாள்.

''அவங்க வீட்டுல தாலி செயின் போடற வழக்கமாம். பதிமூணு பவுன்லே செயின்... அதுலேயே நாம போடற ரெண்டு பவுனும் சேர்ந்துடுது.... மாப்பிள்ளைக்கு வெட்டிங் ரிங் வாங்க வேண்டியது நாமதானே அற்புதம்மா....''

''ஆமா...''



தலையில் முடியுடனும் அரை நிஜாருடனும் சற்று இளமையாகக் காட்டு தரும் சோவின் புகைப்படம் என் ஆல்பத்தில் முக்கிய இடம் பெறுகிறது. நாகர்கோயிலில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இரு நாடகங்களை நடத்திவிட்டுப் புறப்படும் நேரத்தில் அவரை நண்பர் வீரமணியுடன் சந்தித்தேன். எங்களைப் படம் பிடித்தார் நண்பர் சுப்பிரமணியன்.

விமர்சனக் கண்ணோட்டமுள்ள வித்தியாசமான மனிதர் என்ற வகையில் சோவை நான் மதிக்கிறேன் —

-குமரி அமுதன்
நாகர்கோயில்.

படத்தில் இடமிருந்து வலமாக: வீரமணி, சோ, குமரி அமுதன்.

''இப்பவே அதையும் வாங்கிட்டுப் போயிடலாமே... அப்புறம் பெண் தோழிக்கு டிரஸ்... இந்த டாரதி வந்திருந்தா அளவு கொடுக்கச் சரியாக இருந்திருக்கும்.''

''அவ தோழியா இருக்க வேணும்மா... வேற யாராச்சும்... ஏன் மாப்பிள்ளையோட தங்கையே இருக்காளே...''

''அவருக்குத் தங்கை இருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்... நீங்கதாங் அவங்க குடும்பத்தோட இன்னும் பேசவே இல்லையே....''

ரீடா சரியான இடம் பார்த்துத் தாக்க.. பரிதவித்துப் போகிறாள் அந்தத் தாய்.

''யாரோ சொன்னாங்க...''

அற்புதம் உதடு ஒரு புறமாய்க் கோண, விழி விளிம்பில் ததும்பிக்கும் கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கியபடி சொல்ல... அந்தக் கணத்துக்குப் பேசாமல் விட்ட ரீடா, அன்று மாலையே அற்புதத்தைத் தனியே சந்திக்கிறாள்.

''டாரதி எங்கே?''

''பைபிள் கிளாசுக்குப் போயிருக்கா...''


''இப்ப எல்லாம் அவ, உங்களை விட அதிகமா ஆண்டவரை நினைக்கிறாப்பல இருக்கு.''

''உம்... மடத்துல சேரப் போறாளாம். சொல்லிட்டிருக்கா.''

''என்னது... டாரதியா? கன்னிகா ஸ்திரீயாப் போகப் போறாளா... அவளுக்குக் கல்யாணம் பண்ணிட்டு, குழந்தை பெத்துக்கணும்னு எத்தனை ஆசை... அவளா...என்ன சொல்றீங்க அற்புதம்மா....''

''அதையேதான் நானும் சொன்னேன். எனக்கு இனிமே கல்யாணமே வேண்டாம்னு சொல்றா... மனசளவுல களங்கம் புகுந்துச்சாம். இவளுக்காக நான் அந்தப் பிள்ளை வீடு தேடிப் போனேன். 'தம்பி... ஆசையே இல்லாதமனசுல அநியாயமா ஆசைவிதையை விதைச்சுட்டீங்களே'ன்னு அழுதேன். அவ

கோத்ரெஜ் ஸ்டோர்வெல் — ஆயுட்கால அன்பளிப்பு !



கோத்ரெஜ் ஸ்டோர்வெல், எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற அருமையான அன்பளிப்பு. ஆயுட்காலம் முழுவதும் நினைவில் நிற்கும் அன்பு பரிசு. வழக்கமான மற்ற ஸ்டீல் அல்லது மர அலமாரிகளோடு ஒப்பிடும்போது, இந்தப் பயன் மிக்க,கவர்ச்சியான, ஸ்டீல் அலமாரி தனக்கே உரிய, நீடித்த உழைப்பாற்றல் மற்றும் கூடுதல் பாதுகாப்பு போன்ற, நலநயங்களைக் கொண்டது.

கோத்ரெஜிடம் மட்டுமே உள்ள வண்ணப் பூச்சு முறை காரணமாக, கீறல் விழாத மேம்பட்ட மெருகு, இதன் அழகிற்கு மேலும் பொலிவூட்டுகிறது.

தவிரவும் முழுநீள 137 செ.மீ. வெளி நாட்டு 'ப்ளேட்' கண்ணாடி, தகர்க்க முடியாத பூட்டுகள், மறைவான கீல்கள், இறுக மூடிக்கொள்ளும் மும்முனைப் பூட்டு மற்றும் அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்ப்புகள்.

இத்தனைச் சிறப்புகளாலும் கோத்ரெஜ் ஸ்டோர்வெல் மறக்க முடியாத, பல தலைமுறைகளுக்கு உழைக்கும் அன்பளிப்பாக அமைகிறது.

கோத்ரெஜ் Godrej®

மேம்பட்ட தொழில்—
நுட்பம் மற்றும் மதிப்பு.

ULKA-GS-2-82 TAM

னுமே தப்பை உணர்ந்துதான் பேசிறேன். இப்பவும் சொல்றேன். உங்க மகனை விரும்பின என்னுலே வேற ஒருத்தியை நினைச்சுக்கூடப் பார்க்க முடியாதுன்னு சொன்னுன்.... ஆனு... அவனைப் பெத்தவங்க இதுக்கு ஒத்துக்கலே. அப்பன் பேரு தெரியாத ஒரு பொண்ணை, தங்களோட மருமகளா ஏத்துக்கிட்டா... அடுத்து நிக்கற பொண்ணுங்க கல்யாணம் எல்லாம் தடைப்படும்னு சொன்னுங்க... நீங்க உங்க பொண்ணுக்காக யாசிக்கிறீங்க. நாங்க எங்க பொண்ணுங்களுக்காக யோசிக்கறோம்னு நறுக்குத் தெரிச்சாப்பல அந்தப் பெரிய மனுசங்க சொல்லிட்டாங்க....''

''ஓ....''

ரீடாவுக்கு ஏதுவோ புரிவது போல... அற்புதத்திடம் விடை பெறும் முன் ஒன்றை மட்டும் அழுத்தமாகச் சொல்லி விட்டுக் கிளம்பினுள்.

''டாரதிய நாளைக்கு நான் வரச் சொன்னேன்னு சொல்லுங்க... நாளைக்கு ரெண்டாவது ஓலை தெரியுமில்லே....''

மறு நாள் ஓலை வாசிக்கப்பட்ட பொழுது. டாரதியும் அற்புதம்மாளும் அவன் அருகில்..

''...இந்தத் திருமணத்தில் விக்கினம் காண்பவர்கள் யாராயினும்....''

பாதிரியார் சொல்லிக் கொண்டிருக்கையில், ரீடா வாரன்ஸையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறுள். அவன் முகம் வியர்க்க, கைகளை இறுகக் கட்டியபடி தலை குனிந்தான்.

''என்னது!''

''கல்யாணப் பெண்ணே ஆட்சேபிக்கிறுளா....!''

ரீடாவின் பெற்றோர் பொறி கலங்கிப் போக... அற்புதம், அவளை இருக்கையில் அமர்த்தப் படாத பாடு பட....

பாதிரியாருக்குமே இது ஒரு அதிர்ச்சிதான். ''உன் ஆட்சேபணைக்கு என்ன காரணம் மகளே?''

''ஆட்சேபணைக்குக் காரணம் — இவர் ஒரு பெண்ணின் கற்பு பறிபோகக் காரணமாக இருந்தவர் என்பதுதான்.''

''என்னது... என் மகனு...''

வாரன்ஸின் தந்தை, ரீடாவைக் கட்டெரித்து விடுவது போலப் பார்க்கிறுர்.

''அந்த அம்மாதான் இதுக்கெல்லாம் காரணம் ஃபாதர். அவங்க மகளை என் மகன் விரும்பினன். அவங்க குடும்பம் சரியில்லே. எங்களுக்கு ஒத்து வராதுன்னு சொல்லிட்டோம். இதைத் தவிர, என் மகன் அவகிட்ட முறை தவறி நடக்கல்ல. ஆண்டவர் அறிய.''

வாரன்ஸின் தாய் அலறுகிறுள்.

''என்ன ரீடா இது....''

தந்தையின் தழுதழுக்க குரலையும் மீறி வெளிப்படுகிறது ரீடாவின் குரல்.

''ஃபாதர், திருச் சபையில் சின்னவளான நான் அதிகம் பேசுவது மரியாதையில்லே.

''பைபிள்லே ஒரு பெண்ணைத் தகாத எண்ணத்தோட பார்க்கற எவனும், தன் மனசாலே அவ கிட்ட முறை தவறி நடந்துக்கறுன்னு சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கப் போனு மிஸ்டர் வாரன்ஸ் என் சிநேகிதியோட கற்பு கெடக் காரணமாயிருந்திருக்காரு....''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இந்த இதழின் தயாரிப்பில்
உதவியவர்கள்:

★ **சாருகேசி**

★ **வாதூலன்**

★ **சந்திரமௌலி**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''....''

''இப்பேர்ப்பட்டவ நம்ம மத ஆசாரப்படி இன்னெருத்தனை மணக்கவும் முடியாது. அவ நினைக்கிற மாதிரி கன்னிகா ஸ்திரீயாக மாறவும் முடியாது. இவளுக்கு என்ன வழின்னு தேவரீர், நீங்கதான் சொல்லணும்... மனசாலே இவ, கணவனுலே விலக்கி வைக்கப்பட்டிருக்கா. ஒரு பெண், தன் கணவனுக்குத் துரோகம் செய்தாலே தவிர, வேற எந்தக் காரணத்துக்காகவும் அவளை விலக்கி வைக்கக் கூடாது என்றும் அதே புனித பைபிள்லேதான் சொல்லப் பட்டிருக்கு.''

பாதிரியார் அவளையே புன்னகை தவழப் பார்க்கிறுர்.

ரீடாவின் அன்னையோ பெரிதாக விசும்புகிறுள்.

''மகளே... அழாதே... இப்பேர்ப்பட்ட பெண்ணைப் பெற்றதற்காகப் பெருமைப்படு. அற்புதம்மா இன்றிலிருந்து நாலாவது ஞாயிறு நான் நல்லா விருக்கு. மிஸ்டர் ஸ்டீபன் ஒரு பெண்ணேட எதிர்காலத்தை உத்தேசித்து நீங்க இந்தக் கல்யாணத்துக்கு...''

ஸ்டீபன் தலைகுனிந்து நிற்கிறுர். வாரன்ஸ் நன்றி ததும்பும் விழிகளால் ரீட்டாவைப் பார்க்க...

''இந்தக் காலத்திலே ஆம்பிளைகளுக்குத் தைரியமே இல்லே.'' பொதுவாய் இப்படிச் சொல்லிவிட்டு டாரதியுடன் நகர்ந்த ரீடா, அவளின் காதோடு சொல்கிறுள்.

''கல்யாணத்தும்போதாவது நீ தைரியமா, மாப்பிள்ளையை, நம்ம வழக்கப்படி முத்தமிடு. பயந்து சாகாதே.''

டாரதியின் முகத்தில் புதிதாய் நாண மெருகு....

மனக் கண் முன் அந்தக் காட்சி படமாய் விரிய.... சட்டெனக் கண்களைப் பொத்திக் கொள்கிறுள் அவள்.

தீபாவளி ரேஸ்

அன்புள்ள வாசகருக்கு,

உபயகுசலோபரி,

இப்பவும் சென்னையின் பனியும் குளிரும் அவசரமாய் வந்த விருந்தாளிகளாய் எலும்பை நடுக்க, சூடான இரண்டு படங்களை எடுத்துக் கொள்வோமா?
அத்தனை குதிரைகளிலிருந்தும் வேறுபட்டு, கனகம்பீரமாய் நிமிர்ந்த தலை குனியாமல், நேரெதிர்ப் பாய்ச்சலாய் வரும் ராஜகுதிரையை முதலில் பார்ப்போம்.

வெள்ளை ரோஜா

பணம் கொடுத்தவர் (தயாரிப்பாளர்) : ஃபிலிம்கோ
பயிற்சி கொடுத்தவர் (இயக்குனர்) : ஏ. ஜெகன்னாதன்

சிவாஜி + சிவாஜி + ஜூனியர் சிவாஜி ஆகியோர் இணைந்து நடித்திருக்கும் படம். எனவே எதிர்பார்ப்புகள் எக்கச்சக்கம்.

ஊருக்குள் ஒரு சிலுவைக்கோவில். அதில் சாந்தமான பாதிரியார். அவரிடம் ஊர்ப் பிரச்சினைகளைக் கொண்டு வந்து கொட்டும் மக்கள். முரட்டு இளைஞன் ஒருவன். அவன் தங்கை, காதலித்தவனோடு கைகோத்துவிட்டு, அவனால் கர்ப்பமாகி, விஷயம் தன் அண்ணனுக்குத் தெரியக் கூடாதே எனப் பாதிரியாரிடம் உதவிகேட்டு இறைஞ்ச, அதன் அரைகுறை வார்த்தைகளை மட்டும் கேட்டுவிட்டுப்பாதிரியாரையே சந்தேகிக்கிற வேறு பெண் அந்த அண்ணனின் காதலியாய் இருந்துவிட, அண்ணனுக்கு விஷயம் எட்டுகிறது. தங்கையை நையப் புடைக்கிறான். பாதிரியாரைக் கொல்ல முயற்சிசெய்து ஜெயிலுக்குப் போகிறான். போகும் வழியில் தப்புகிறான். அந்தத் தங்கைக்காரி தற்கொலை செய்துகொள்ள, அதன்பேரில் சந்தேகம் ஏற்பட்டு, பாதிரியார் தன் போலீஸ் அண்ணனைக் கூப்பிட்டு, புதைத்த பிணத்தை எடுத்து போஸ்ட்மார்ட்டம் செய்யுமாறு வேண்ட, மறுநாள் காலை அந்தச் சவப்பெட்டி வெளியே எடுக்கப்பட்டுத் திறக்கப்படுகிறது. கடவுள் என்று நம் நெஞ்சம் நின்று போகிறது. சவப்பெட்டியில் தற்கொலைப் பெண்ணின் பிணத்திற்குப் பதிலாய் அமைதியே உருவான வெள்ளையுடைப் பாதிரியார் பிணமாய்க் கிடக்கிறார்.

சகோதரனின் சாவுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்கிற முழுமுயற்சியில் அந்த போலீஸ் அண்ணன் ஈடுபட, ஏகப்பட்ட கனவயான முடிச்சுகளுடன் கதையைப் பின்னியிருக்கிறார்கள்.


பாதிரியார் சிவாஜி அமைதியின் அற்புதச்சின்னம் எனில், காக்கி உடை சிவாஜி பிடரிசிங்கத்தின் மறுஉரு. இந்த சிவாஜியின் குரல் குழைந்து குழைந்து வருகிறது. போலீஸ் சிவாஜியின் குரலோ எதிரில் நிற்பவர்களை நடுநடுங்க வைக்கிறது.

குமுறும் அண்ணனாய் பிரபு. தற்கொலைத் தங்கையாய் ராதா, காதலியாய் அம்பிகா, இன்னும் தொட்டுக் கொள்ள ஊறுகாய்களாய் தே. சீனிவாசன், மனோரமா, மகேந்திரன், கல்கத்தா விசுவநாதன், சுரேஷ் முதலிய பலர்.

பாடல்களில் இரண்டு ஓ.கே. சிலுக்கு வருகிற ஒன்றிரண்டு காட்சிகளிலும், சைக்கிள் கடை மனோரமா காட்சிகளிலும் ஆசை நரைக்காத வசனங்கள் எக்கச்சக்கம். வசனம் யாரென்று பார்த்தால்? மீசை நரைத்த ஏ. எல். நாராயணன். நாற்காலி முனையில் உட்கார வைக்கிற காட்சிகளைக் கோத்து, ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஒரு தொய்வில்லாமல் கதையை நகர்த்திக் கொண்டு போயிருப்பது டைரக்டரின் சாமர்த்தியம்.

ஜெயமன்மதன் டிப்ஸ்: ஜாக்பாட் வரிசையில் மிக நம்பகமான குதிரை





நாலாபக்கமும் நம்பிக்கை இல்லாமல் பார்த்துக் கொண்டு வரும் அடுத்த குதிரை.

தங்கைக்கோர் கீதம்

பணம் கொடுத்தவர் (தயாரிப்பாளர்) : உஷா ராஜேந்தர்
பயிற்சி கொடுத்தவர் (இயக்குனர்) : டி. ராஜேந்தர்

ஊரிலிருக்கும் அத்தனை வேலைகளையும் தன் தலையில் இழுத்துப் போட்டுக் கொண்டு ராஜேந்தர் செய்திருக்கும் படம்.

ஒரு கொடுமைக்கார சித்தி. அவளை வார்த்தைக்கு வார்த்தை டீ போட்டுப் பேசிவிட்டு தங்கையை 'தன்கை'யை நம்பி வளர்க்கிறேன் என்று புறப்படுகிற சின்ன பையன். ராஜபார்ட் ரங்கதுரை ஸ்டைலில் ரயிலில் பாட்டுப்பாடி, நல்லவர் ஒருத்தர் கண்ணில்பட்டு, ஒரு தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்கிறான். வளர்கிறான்.

வியர்வையைக் குடம்குடமாய் சிந்தி பைசா பைசாவாய்க் சேர்ப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் இரண்டு காட்சிக்கொருமுறை நியாயத்துக்காக, நாற்காலி மேஜைகளையும், எதிர்ப்பவர் எலும்புகளையும் உடைக்கிறான். அழகாய் வளர்கிற தங்கையை நகரத்துக் கல்லூரிக்கு அனுப்புகிறான். இங்கு உழைக்கிறான், வில்லன்களை உதைக்கிறான். ஆசை காட்டுகிற முதலாளியிடம் முதுகு வளையாமல் பேசுகிறான். அவர் காத்திருந்து, அவனுடைய தங்கையின் கல்யாணத்தின்போது அவனுக்குக் காசு கிடைக்காமல் செய்து சந்தோஷப்படுகிறார்.

அட, படத்தில் புதுமை போலிருக்கிறது. இன்டர்வெல் இல்லாமலேயே முடித்து விடப் போகிறார்கள் என்று நினைக்கிறபோது, தடாலென்று இடைவேளை போட்டு, மறுபடியும் ஒரு முழுப்பட நீளத்திற்குக் கதை தொடர்கிறது.

தங்கையின் கல்யாணம் எப்படி நடக்கிறது.

பிரச்சினைகள் அண்ணனை எப்படி மடக்கிடுது. அவனை அந்தத் தங்கை எப்படி எடுத்தெறிந்து ஏசுகிறாள்,

அவன் உறவை விட்டெறிந்து வீசுகிறாள்,

அவன் எப்படி மூட்டை தூக்கிய முதுகையும், பாசம் பொங்கிய நெஞ்சையும் எண்ணி இனிசரின் உபயோகித்துப் பாடுகிறான்,

மாப்பிள்ளையைக் காப்பாற்ற ஓடுகிறான்,

வில்லன்களைப் புரட்டிப் போடுகிறான், இறுதியில்

தியாகக் கண்களை மூடுகிறான்.

என்று விஸ்தாரமாய்ப் பார்க்க மடிநிறையப் பொறுமையோடு உட்கார்பவர்களுக்கு ஒரு சபாஷ். (படம் பார்த்த கையோடு எழுத உட்கார்ந்ததில் ராஜேந்தரின் எதுகை மோனை வியாதி நம்மையும் தொற்றிக் கொண்டது. மன்னிக்கவும்.)

சிவகுமார், செந்தாமரை தவிர அத்தனை முகங்களின் பின்னணியிலும் ராஜேந்தர் தெரிகிறார். நாகேஷின் பிள்ளை ஆனந்த்பாபு அறிமுகம். சுலபமான நடனத்துடன் சுந்தரமுகம். மற்றபடி விட்டுப்போன பெயர்கள் மனத்தில் நிற்கவில்லை. வசவசவென்று பாடல்கள். கண்ணை மூடிக்கொண்டால், மூன்றுக்கு மேலே ரசிக்கலாம். பாசமலரையும், பாக்ஸ் ஆபீஸையும் கலந்து தருகிற முயற்சி. பார்க்கிற நமக்கு அயர்ச்சி.

ஜெயமன்மதன் டிப்ஸ்: எது வின்னிங் போஸ்ட் என்று நிசைபுரியாமல் கிளம்பியிருக்கிற குதிரை.

அடுத்த வாரம் சந்திக்கும், வரை வந்தனங்களுடன்.
ஜெயமன்மதன்



"இடி இடிச்சா 'இந்திரா, இந்திரா'ன்னு ஜெபிங்க, பயம் போயிரும்



"சரின்னு சொல்றதுக்கு முன்னே எதுக்கு நாலு தடவை யோசிக்-கணுங்கறே?"

புகைப்படச்

"ஐயோ மறந்தே போச்சே! இன்னிக்கு சீஃப் மினிஸ்-டர்ஸ் கான்பரென்ஸ் இல்லே?"



"அம்மாடி! ரெண்டாவது கால் சிலிண்டர் 'அலாட்' ஆயிருச்சா. நிம்மதி!"







"இனிமே உங்களுக்கு 'ஜனதா' மீல்ஸ்தான்!"


"போனஸ்லேந்து இவ்வளவுதான் துணி வாங்க முடிஞ்சுது!"

சிரிப்பிதழ்

ஜம்புநாத்

"டேய்! எவன் கேலி பண்ணி-னாலும் சரி என்னோட அடுத்த படம் 'எல்லாம் நானே'!"

"சட்டை போடாம நாட்டியம் ஆடிருந்-தானே வம்பு.... இப்போ?"





ஜங்ஷனிலே ஒரு ஊமைப்பாலம்

ஐயலன்

5

"சைக்கிள்விடக் கத்துக்கிட்டீங்களா... கத்துக்கப் போறீங்களா?" என்று கேட்டான் காசி.

"பாதி கத்துக்கிட்டேன். ஏறத் தெரியாது. எறங்கத் தெரியாது." என்றாள் எஸ்தர்.

அவள் பேசும்போது ஜலதரங்கம் வாசிப்பது போலிருந்தது. ஏழு கிண்ணங்களில் தண்ணீர் வைத்து இரண்டு கோல்களில் கிணுகிணுவென்று தட்டிக் கொண்டே ஒரு வித்வான் ரயில்வே கிளப்பில் வாசித்ததைக் காசி கேட்டிருந்தான். எஸ்தரின் குரலில் ஒரு மனசு கொஞ்சுவது வெளிப்பட்டது.

"அந்தக் கல்லு மேலே காலே வச்சு எறுங்க"

அவன் யோசனைக்கு அவள் ஒரு சின்னச் சிரிப்பு சிரித்தாள். கன்னம் குழிந்தது.

"தாங்க்ஸ். காத்து எறங்கிடுச்சி. பங்சர் போலத் தெரியுது."

காசி தன் சைக்கிளுக்கு ஸ்டாண்ட் போட்டான். எஸ்தரின் சைக்கிள் பின் சக்கரத்தை அமுக்கிப் பார்த்தான். பிறகு வால் ட்யூபைப் பிடுங்கினான். புஸ்ஸென்று கொஞ்சம் காற்றுப் போயிற்று. இரண்டு விரல்களால் வால்ட்யூபை உரித்துப் பார்த்தான். "பங்சர் இல்லே... வால் ட்யூப் போயிருக்கு."

"நீங்க சைக்கிள்ஷாப் வச்சிருக்கீங்களா?"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"ரெண்டும் ரெண்டும் நாலு! இருக்கிற காத்தையும் பிடுங்கி விட்டுட்டீங்க. நான் தள்ளிக்கிட்டுத்தான் போகணும்."

"இது வாடகை சைக்கிளா?"

"ம்ம்... சொந்த சைக்கிள். மாமா வீட்டிலே இருந்தது. நம்பர் போட்டிருக்கேன்னு சொல்றீங்களா? வாடகை சைக்கிள் ஷாப்பிலே வாங்கியது. மாமா ரீபெயிண்ட் பண்ணும வச்சிருக்கார்."

"ஓ... நீங்க ரயில்வே எஞ்ஜினியர் பீட்டருக்கு?" என்று இழுத்தான்.

"அக்கா மகள்" என்று எஸ்தர் முடித்தாள்.

காசி தன் சைக்கிளை ஸ்டாண்ட் தள்ளி நகர்த்தப்போனான். இரவு இன்ஸ்பெக்டரைச் சந்தித்துவிட்டு வரும்போது ஹரியிடம் இவள் வில்வத்தை விசாரிக்கணும் என்பது ஞாபகம் வந்தது.

"காலேலே எங்கே வால்ட்யூப் போடு வாங்க?" என்று எஸ்தர் கேட்டாள்.

"ஒரு பத்து நிமிசம் வெயிட் பண்ணு. பார்சல் பேட்டை வரைக்கும் போயிட்டு நான் திரும்பி வர்றேன். எங்கடைலே போட்டுடறேன்."

"பத்து நிமிஷமா... ம்ம்..." என்று அவள் யோசித்தாள். பின்பு தொடர்ந்தாள்.

"இங்க ஊரும் ஜங்சனும்.. நெனைச்சா பயம்மா இருக்கு. ராத்திரி என்னடான்னு எறங்கறப்பவே ஒரு சண்டை.. ஆமா... நீங்க ஏன் அவனே அப்படி உதைச்சீங்க. அவன் என்ன பண்ணியிருப்பான் என்னே... கிட்நாப் பண்ணிட்டுப் போயிடுவானு?"



அவள் தைரியம் காசிக்குப் பிடித்தது.

''அவனுங்க பொம்பளைப் பொறுக்கிங்க.''

''நான் அவனுங்களுக்கு இரையாயிட்டிருப்பேன்னு நெனைக்கிறீங்களா? எனக்குக் கராத்தே தெரியும்.''

''நீங்க மெட்ராஸா?''

''ஏன் மெட்ராஸிலே மட்டும் தான் பெண்கள் கராத்தே கத்துக்குவாங்களா?'' என்று அவள் மடக்கினாள்.

''இல்லே... மெட்ராஸ் காரங்கதான்...'' என்று ஆரம்பித்தவன் அதையும் மடக்குவாள் என எச்சரிக்கையுற்று, ''இப்படி காலங்கார்த்தாலே சைக்கிள் கத்துக்கறேன்னு கெளம்புவாங்க'' என்றான்.

''ஏன்...? நீங்க எங்கியாவது அவசரமாப் போகணுமா?''

காசிக்கு அவள் விடை கொடுக்குமுன் தான் சைக்கிள் ஏறியது பண்பாடு இல்லை என்ற மாதிரி தோன்றிற்று. மீண்டும் இறங்கினான்.

''அவசரம் ஒண்ணுமில்லே.''

''அப்ப வாங்க... நானும் ஒங்க கூடயே வர்றேன்.''

''கொஞ்ச தூரமாச்சே...'' ஜோலார்ப் பேட்டையில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போகும் ஒரு பெண்ணோடு கூட நடந்து போனான் என்றால் நாலு நாளைக்கு அது 'நியூஸாக' அடிபடும். அவன் தயங்கினான்.

''பரவாயில்லே...''

காசி அரைமனசாக அவளுடன் நடந்தான். எதிரில் காதர் சைக்கிள் கடை வந்ததும் அவன் கடையில் இவளை ஒப்படைத்து விடலாம் என்று தற்காலிகமாக மனசில் ஒரு பாதுகாப்பு தேடிக்கொண்டான்.

''நேத்து நீங்க வில்வத்தைப் பத்திக் கேட்டீங்களாமே... ஹரி கிட்டே!''

''எந்த வில்வம்... ஓ... அந்த ரௌடி வில்வமா? ஆமாம்..''

தலையைத் திருப்பி அவளைப் பார்த்தான்.

''அவனை ஒங்களுக்குத் தெரியுமா?''

''நல்லாத் தெரியும். போன மாசம் நானும் அப்பாவும் சென்ட்ரல் ஜெயில்லே அவனைச் சந்திச்சோம். அப்பா ஜெயில்லே கைதிகளுக்காக ஒரு இலக்கியக் கூட்டத்திலே பேசப் போயிருந்தார். நான் கைதிங்களைப் பார்க்கலாமேன்னு போனேன். அப்பா தலையைப் பார்த்ததும் ஒரு கைதி மொகத்தைத் திருப்பிக்கிட்டு வேகமா நழுவறதை அவர் கவனிச்சிட்டாரு. அந்தக் கைதியைக் கூப்பிடுங்கன்னாரு. அவனை ரெண்டு பேர் அளச்சிக்கிட்டு வந்தாங்க. நீ வில்வம்தானேன்னு எடுத்த எடுப்பிலே கேட்டாரு. அவன் தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டான்.''

காசிக்கு முக்கியமாக ஒன்று தெரிய வேண்டியிருந்தது. அதை எப்படிக் கேட்பது என்று புரியாமல் அவன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான்.

''வில்வம் இங்கே ரயில்லே ஸ்கூல்லே அப்பாகிட்டே படிச்சவன். சின்ன வயசலேயே மகா முரடனும். ஆனா அப்பா தன் வீட்லேயே அவனை ஒக்கார வைச்சு சாப்பாடு போட்டு ட்யூஷன் ஃப்ரீயா சொல்லிக் கொடுத்துத் திருத்த முயற்சி பண்ணியிருக்காராம்.''

அவள் வெகு சகஜமாகப் பேசி வந்தாள்.

காசி சட்டென்று குறுக்கிட்டான்.

''நீங்க மாத்யூ வாத்தியார் பொண்ணு.''

''ஆமா... ஏன்?''

''நானும் அஞ்சாவது வரைலே அவர்கிட்டே படிச்சேன்.''

''ஐ. ஸீ'' என்று சிரித்தாள். மீண்டும் அந்தக் குளிர்ச்சியான உணர்வு காசியைத் தொட்டது. மாத்யூ வாத்தியாரின் மகள்... காசியின் உள்ளத்தைத் தீண்டிய அந்தக் குளிர்ச்சியில் ஒரு பெண்மையின் நளினத்திற்கு மேலாக ஒன்று அவனை நெகிழ வைத்தது. அது பக்தி.



மாத்யூ வாத்தியாரை அவரிடம் ஓரிரண்டு வருடம் படித்த எந்த மாணவன் மறக்க முடியும்? அந்த கெய்சர் மீசை நீலக்கோட்டு மூக்குக்கண்ணாடி. முகம் சனியச் சிரித்துக் கொண்டே பிள்ளைகளின் தோள்மீது கைபோட்டுப் பேசும் மென்மை.

''ஏதோ கூட்ஸ் ரயில் சொன்னலை சிக்கிட்டானுமே... அந்த வில்வம். இந்த வாரம் நீலீஸாவேன்னு சொன்னான்.''

காசி தன் பள்ளிப் பருவத்தில் மூழ்கி வெளிவந்தான்.

''அப்பா அவன்கிட்டே இனிமேலயாவது நல்லவனு என் ஸ்டூடண்டுன்னு பெருமைப் படனுப்பிலே நடந்துப்பியான்னு கேட்டார்.''

காசியின் கைகள் தானகச் சைக்கிளை நிறுத்திவிட்டன.

''ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டான். பதிலே சொல்லலே. அப்பா மறுபடியும் மறுபடியும் கேட்டார். சாரி சார்... நான் எவ்வளவோ தூரம் வழிமாறி வந்துட்டேன். இனிமே திரும்பவே முடியாதுன்னு வெளிப்படையாச் சொன்னான். அவனைக் காட்டிக் கொடுத்தவன் எவனையோ கணக்குத் தீக்கணும்னுன். அப்பா அழுததை நான் அன்னிக்குத்தான் பார்த்தேன். ஏதோ ஒரு சொந்தப் பிள்ளையை ஜெயில்லே பார்க்கிற மாதிரி அவருக்கு ஒரு வேதனை... பட்... அவன் அதனுலே கொஞ்சம் கூட மாறல்லே...வெளிப்படையா தன் மனசைத் தொறந்து சொல்விட்டான். அது யாரோ காசியாமே...'' என்றுள் எஸ்தர்.

''அது நான்தான்'' என்று காசி அமைதியாகச் சொன்னான்.

''ஆங்...'' என்று வியப்பினுல் ஒரு வார்த்தையும் வராமல் அவள் வாயடைத்துப் போனுள். இருவர் மத்தியிலும் நிலவிய நிசப்தத்தைத் தூரத்தில் கூவிய ஓர் எஞ்சின் ஓசை மிகைப்படுத்திக் காட்டிற்று.

அதற்குமேல் அவள் ஒன்றும் பேசாமல் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தாள். காதரின் சைக்கிள் கடை திறந்திருந்தது.

''இங்கே சைக்கிளுக்கு வால்ட்யூப்மாத்திக் கறீங்களா?''

எஸ்தர் அவன் தன்னைத் தவிர்க்க விரும்புவதைப் புரிந்து கொண்டாள்.

''ஓ. எஸ்... ஒங்களுக்கு இஷ்டமில்லேன்னு நின்னுக்கறேன்.''

மாத்யூ வாத்தியாரின் மகள். பனிச் சென்று எவ்வளவு வேகமாகப் புரிந்து கொண்டு நைக்கிற மாதிரி பேசுகிறுள்!

''சரியாய்ப் போச்சு! என்னை மாதிரி ஆளோட நீங்க வர்றது ஒங்களுக்குப் புடிக்குமோ என்னவோன்னு சொன்னேன்.''

அவள் ஒரு மாதிரியாகச் சிரித்தாள்.

''காசி... சமாளிக்காதீங்க.. என்னை ஏமாத்த முடியாது.''

''சரி ஏமாத்தலே... வாங்க போகலாம்'' அவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டே நடந்தான். ஓரிரண்டு கஜம் போனதும் ''ஆமா ஏன் ரெண்டு பேரும் தள்ளிக்கிட்டே போகணும். வால்ட்யூப் மாத்திக்கிட்டா நீங்களும் கூட வரலாமே'' என்றுன்.

''ஆல்ரைட்.''

காதர் இருவரையும் ஒருமாதிரி ஏற இறங்கப் பார்த்தான். காசிக்கு உடனே வதந்தியைக் கத்தரிக்கத் தோன்றிற்று.

''யாரு... தெரியுதா காதர்?''

''தெரியலியே...''

''ரயில்வே ஸ்கூல்லே இருந்தாரே மாத்யூ வாத்தியாரு. அவரு பொண்ணு. நம்ப ரயில்வே எஞ்சினியர் பீட்டர் சாரு அக்கா மக.''

''அட.... பாத்ததே இல்லியே.''



1962 தீபாவளியன்று இந்தப் படத்தை எடுத்தேன். அரை டிராயர் பனியன் சகிதம் பட்டாசு கொளுத்தும் இச்சிறுவன் காதைப் பொத்திக்கொண்டு சற்றே பயத்துடன் காணப்படும் சிறுமியின் கழுத்தில் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று முடிச்சுப் போட்டான். என் வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்து தலை தீபாவளி கொண்டாடினுன்! ஈசுவர சங்கல்பம் என்பதை எனக்கு என்றைக்கும் உணர்த்தி வருகிற படம் இது.

என். வி. ஆர். சுவாமி
சென்னை–33.

''நான் இங்கே வந்ததே இல்லே. கோயம் புத்தூர்லே ஆண்ட்டி வீட்டிலேயே படிச்சுக் கினு இருந்தேன்.''

தன்னிடம் அவள் பேசியதில் காதருக்குப் படுகுஷி. நல்லவள் என்று தீர்மானித்தான். அந்தே நிமிஷத்தில் வால்ட்யூப் மாட்டினான். சில்லறை வாங்க மறந்துவிட்டான்.

''நீங்களும் அப்பாகிட்டே ஸ்டூடண்டா?'' என்று விசாரித்து வைத்தாள்.

''ஆமாம்மா கொளந்தே... அவுரு இன்னு மாதிரி ஆத்மா... நல்லாருக்காராம்மா...'' என்று பரவசமாய்க் கேட்டான் காதர்.

''நல்லா இருக்கார். வரட்டுமா?''

''போய்ட்டு வாம்மா.''

ஒரு படிக்கட்டில் கால் வைத்து எஸ்தர் ஏறி உட்கார்ந்தாள்.

''மெள்ளப் போங்க. ஸ்பீடா ஓடினு என்னாலே எறங்க முடியாது. ஏதாவது வாசப்படி வந்தாதான் நிதானமா கால் வச்சு எறங்குவேன்.''

அவளுக்காக அவன் மெதுவாகச் சைக்கிள் மிதித்தான்.

''அப்பாவுக்கு வில்வம் விஷயத்திலே பெரிய ஏமாற்றம். அவன் இப்படி மாறினது தன் வாழ்க்கையிலே ஏற்பட்ட பெரிய தோல்வி மாதிரி நெனைக்கிறார்...''

காசி மௌனமாகச் சைக்கிள் மணியை அடித்தான். ஒரு சிறுவன் படபடப்புடன் ஒதுங்கினான்.

''ஏன்... எதுக்கு வில்வம் அப்படி மாறிப் போனான்...?''

அவளுக்கு எதைச் சொல்வது... எப்படி வளர்த்துச் சொல்வது... காசி யோசித்தான்.

''ஜங்ஷன் ரொம்பப் பொல்லாதது'' என்றான்.

அவன் மேலே சொல்வான் என்று அவள் காத்திருந்தாள்.


''இங்கே ரயிலும் தண்டவாளமும் வுளுந்ததிலே இருந்து கொலையும் கொள்ளையும் ரௌடித்தனமும் வலுத்துப்போச்சு. ஜங்ஷன் மனுஷனை ஒண்ணு ரௌடியாக்குது இல்லே கோழையாக்குது.''

தான் என்ன இப்படிப் பேசுகிறோம் என்று தன் சொல்வன்மை மீது காசிக்கே வியப்பாய் இருந்தது.

''வில்வம் ஒரு மோசமான குரூப்லே மாட்டிக்கினான். ரெண்டு தபா நான் அவனை எச்சரிக்கை பண்ணேன். அதுக்குள்ளே அவன் ரொம்ப கெட்டுப்புட்டான். ம்ஹூம்... அந்தக் கூட்ஸ் கொள்ளேலே அவனை நான் காட்டிக் குடுக்கணும்னு நெனைக்கலே... ப்ச்... நடந்தாச்சு. அவன் திருந்துவான்னு நான் நெனைக்கலே. நான் தயாராக் காத்திருக்கேன்.''

எஸ்தருக்கு ரத்தம் உறைவது போலிருந்தது. அவன் அதை அவ்வளவு சாதாரணமாக எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்து விட்டு எதற்கும் சித்தமாக இருப்பவன் போல் சொன்னான்.

பார்சல்பேட்டைக்கு வளையும் திருப்பத்தில் தான் ஹரியின் வீடு. அவனது உயர



கர்நூலில் முகாமிட்டு வந்த காஞ்சி ஆசாரியர்கள் மூவரையும் தரிசிக்கச் சென்ற எனக்குப் புதிதாகப் பட்டத்துக்கு வந்திருக்கும் சங்கரானந்தேந்திரரைப் புகைப்படம் எடுக்கும் பாக்கியம் கிடைத்தது. ஆற்றங்கரையில் சந்தி கால அனுஷ்டானங்கள் முடித்து, உடன்வரும் மக்களின் ''ஜயஜய சங்கர, ஹரஹர சங்கர'' ஒலியின் லயகதிக்கு ஈடாக நடந்து வந்த திருக்கோலம் என்று காண்கினும் மெய் சிலிர்க்க வைப்பது.

-தி. பிரகாஷ்
தாம்பரம் (கிழக்கு).

மான ஆக்ருதி படைத்த உடம்பு வீட்டு மாடியின் மீது ஒரு புறாக்கூண்டைத்திறந்து கொண்டு நிற்பது கீழிருந்து தெரிந்தது.

அவன் தலைக்கு மேலே, முதுகில் தோளில் தத்தித் தத்தி உட்கார்ந்து சிறகடித்துப் புறாக்கள் குதுகுதுத்தன.

''ஏய் ஹரி'' என்று கூப்பிட்டு விட்டு, காசி கிணுகிணுவென்று சைக்கிள் மணியை அடித்தான். அவன் திரும்பினான்.

''அட... இன்னு அண்ணாத்தே காத்தாலே...''

''தலக்கறி வாங்கியாரலே'' என்று பதிலுக்குக் கேட்டான் காசி.

(தொடரும்)



நெகடிவ் அப்ரோச்

ஜே.எஸ்.ராகவன்

[ஒரு மந்தமான மத்தியான வேளையில் ரெஞ்சீவி பட்டப்பாவும், சௌபாக்யவதி பெருந்தேவியும் அஜந்தா போட்டோ ஸ்டுடியோவுக்குள் வலது செருப்புக்களை எடுத்து வைத்து நுழைகின்றனர். குரல்வளை நெரிக்கப்பட்ட பெருச்சாளியின் உறுமல்களைத் தன் குறட்டைகள் மூலம் இனம் காட்டிக் கொண்டிருந்த வெங்கடபதி உதறி அடித்துக் கொண்டு எழுந்து கொள்கிறான்.]

வெங்: வாங்க சார்! வாங்கம்மா! என்ன வேணும்? பாஸ்போர்ட்டா? இல்லாட்டி ஜட்டிகூடப் போடாம குப்புறப் படுக்க வெச்ச சௌந்தைப் போட்டாவா?

பட்ட(மென்ன): சுத்த இராக் போல இருக்கு! (உரக்க) பாஸ்போர்ட் எதுக்கு? நான் லங்கையைக் கூடத் தாண்டப் போறதில்லே. (பெருந் தேவியின் மேல் காதல் பார்வையை உலவ விட்டு) 'குவா குவா' சமாசாரம் இன்னும் ரொம்ப நாள் ஆகும்.

வெங் (குஷியுடன்): அப்போ கல்யாணப் போட்டோ! ஹிஹிஹி... ஜாலிதான். உக்காருங்க. எப்படி? நீங்க உட்கார்ந்துண்டு அம்மா நிக்கிற மாதிரி தெம்பரபோலவா இல்லாட்டி அம்மா உட்கார்ந்துண்டு அய்யா நிக்கிற மாதிரி மதுரை போலவா? அதுவும் இல்லாட்டி ரெண்டு பேரும் உக்காந்துண்ட மாதிரி சம உரிமை போலவா? ஹ்ம்... தலைகாணி வெச்சுக்கணும். அம்மா ஹைட் கொறவு!

பட்ட (மென்ன): அதென்னமோ தெரியலே. நம்மைப் பார்த்தாலே ரொம்பப் பேர் அசடு வழியறுங்க.

பெரு: எல்லாம், இனம் இனத்தோட....

வெங்: சார்? கலரா, பிளாக் அண்ட் வொய்ட்டா? அம்மா நல்ல வொய்ட்டு. அய்யாதான் கொஞ்சம் பிளாக்கு. ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கிறது, பிரதமர் வந்தா ரோட்லே பிளாட்பார விளிம்புக்கு பெயின்ட் அடிப்பாங்களே, அது மாதிரி..

பட்ட (கோபத்துடன்): மிஸ்டர், என்ன இது?

பெரு (கனைத்து): உங்கம்மாவின் அறிவுரை ஞாபகம் இருக்கட்டும், 'பட்டப்பா, படபடப்பா பேசக்கூடாது!'

வெங் (தொழிலில் குறியாக): அதோ அந்த ரூம்லே எல்லாம் இருக்கு. சீப்பு, பவுடர், கண்ணாடி.. சிங்காரிச்சுக்குங்க. செண்ட் மாத்திரம் கிடையாது.

பட்ட (எரிச்சலுடன்): எல்லாம் இந்த அழகு போறும். அதோ அங்கேதான உக்காரணும்?

வெங்: ஆமா சார்! அய்யா அங்கே. அம்மா இங்கே. அய்யாவோட வலப் பக்கம் அம்மா. அதாவது அம்மாவோட இடப் பக்கம் அய்யா. அம்மாவுக்கு அய்யா 'இடம்' கொடுக்கக் கூடாது.... ஒக்கெக்கெ... இதோ வந்துடறேன்.
பெரு: வேற வலம்... சீச்சி... இடம் பாக்க லாம்னு அப்பவே சொன்னேன். இந்தப் பாடாவதி ஸ்டுடியோதான் கெடைச்ச தாக்கும் .
பட்ட: எல்லாம் நன்மைக்கே பெருந்தேவி. சரியாத்தான் சொன்னான் அந்த ஆள். பார் தலைகாணி மேலே உக்காந்தாத்தான் உன் தலை என் தோளுக்கு வரது.
வெங்: நீங்க ரெண்டு பேரும் சொஞ்சம் திரும்பி அதோ மூலையிலே இருக்கிற அனுமார் படத்தைப் பார்த்திண்டு இருக் கணும். 'சைட்' போஸ்தான் சரியா இருக்கும். அம்மா மூக்கு அப்போதான் ஜம்முன்னு விழும்.
பட்ட: அட, உன் பேரு பெருந்தேவியா? ஸ்ரீதேவியா? மூக்கு சமாசாரத்தை டக் குனு வெளிச்சம் போட்டுக் காட்டுறரே?
பெரு (பெருமையுடன்): இது ஃபேமஸ் மூக்காக்கும்! ஊர்ல என் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் என்னே 'மூக்காம்பிகை'னுதான் கூப்புடுவாங்க!
வெங்: எல்லாம் ரெடி! படம் எடுக்க இன் னும் இரண்டு விஷயங்கள்தான் பாக்கி. வந்தவுடன் எடுத்து விடலாம்.
பட்ட (கலவரத்துடன்): என்னது?
வெங்: மின்சாரமும், முதலாளியும்!
பட்ட: அப்போ, அப்போ...
வெங்: நான் கடைப் பையனுங்க. (குரலைத் தாழ்த்தி) நான் மட்டும் கறுப்புத் துணிக் குள்ளே பூந்துண்டு 'க்ளிக்' பண்ணினு படம் என்ன பிரமாதமாய் விழும் தெரி யுமா? முதலாளி, ராயர் கடையிலே மிளகு வடை சாப்பிடப் போயிருக் கார். மூனு மணிக்குச் சூடாப் போடு வாங்க. ஒண்ணு பதினேஞ்சு பைசா, ஒரு ரூபாய்க்கு ஏழு! கரண்டு அடுத்த தெரு டிரான்ஸ்பார்மர்லே அடைச்சுக்கிச்சி. சரி செய்யறாங்க... அட..இதோ வந்துட்டாரே.

[தாடி, மீசையுடன் ரஷ்ய சாமியார் ரஸ்புடீனை நினைவுறுத்தும் ஒரு ஆள், மிளகு வடை வாடையுடன் உள்ளே நுழைகிறார். கையோடு அழைத்து வந்ததைப் போல் 'பளிச்'சென்று மின் சாரமும் வருகிறது. 'ரஸ்புடீன்' நேராக காமிரா பின்னால் போய் அதன் வழி யாகப் பார்க்கிறார்... பார்க்கிறார்... பார்த்துக் கொண்டே இருக்கிறார்.]

பெரு: எவ்வளவு நேரம் ஆச்சு. இன்னும் 'கிளிக்' சத்தத்தையே காணுமே? சித்து வேலை ஏதாவது செய்யப் போறாரா?
வெங்: சைலன்ஸ்... சைலன்ஸ்...
பட்ட (உதடுகளைப் பிரிக்காமலே): இவன் ஒருத்தன், எய்த் பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட் ப்யூன் மாதிரி...
பெரு: தாடி 'கிளிக்'கிலே சிக்திண்டு மீசை லென்ஸை மறைக்குதுன்னு நினைக்கிறேன்.

['ரஸ்புடின்' விலுக்கென்று தலையை வெளிக் கொணர்கிறார். தாடியை நீவி விட்டுக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்குகிறார்.]





ஒரு சாதாரண டிட்டர்ஜெண்ட்
சலவை கட்டியை விட
எடையோ இரண்டு மடங்கு
விலையோ
சிலகாசுகள்தான் அதிகம்
அதிகப்படியான சலவை செய்யும் டிட்டர்ஜெண்ட் கட்டிகள்
சிக்கன முறையில் சலவை செய்யும் சோப் பார்கள்.
நிகரமான எடை 300 கிராம்கள்
டோட்டல்
நீலநிற டிட்டர்ஜெண்ட் பார்
Total
BLUE DETERGENT BAR
எளிதான சலவைக் கேற்ற ஐந்து பகுதிகளைக் கொண்டது
தரமான தயாரிப்பினை வழங்குவோர்:
கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
பெங்களூர்
விற்பனை செய்வோர்:
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் பெங்களூர்
MCA/TDB/52/TAM-R

ரஸ்புடன்: அதே மூக்கு! ஆ! அதே மூக்கு!

பட்ட (தலையைத் திருப்பி): பெருந்தேவி! என்னடி இது. 'அதே மூக்கு அதே மூக்கு' என்று சொல்றாரே. அடுத்தாற்போல் 'இந்தக் காமிரா சந்நிதானத்திலே சிங்கார வேலனே தேவா....' என்ற பாட்டை மூக்கால் முனகச் சொல்லப் போகிறாரா.'

பெரு: தப்பு தப்பு. அது 'சிங்கார வேலனே' இல்லே. 'கங்கைக் கரைத் தோட்டம்...

ரஸ்பு (ஏதோ நீண்ட மௌன விரதத்திலிருந்து விடுபட்டவராக) சார்! உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிடுச்சா? நம்ம கடையிலே கல்யாணம் ஆனவங்களுக்கு 'ப்ரூஃப்' ஆனாத்தான் 'ஜோடி'ப் படம் எடுக்கறதும்னு ஒரு விதி!

பட்ட: என்ன மகா பேத்தலய்யா இது?

வெங்: ஏதாவது ப்ரூஃப்? மாங்கல்யம், கல்யாண நோட்டீஸ் இனிஞ்ச பிளாஸ்டிக் தேங்காய்ப் பை... இப்படி ஏதாச்சியும்...

பட்ட (எழுந்து நின்று): வாடி போகலாம். இனிமே ஒரு செகண்ட் கூட இங்கே இருக்கக் கூடாது. லேட்டை.. அனையுங்கய்யா. நெருப்பு மாதிரி எரியுது. போட்டோ எடுக்கறுங்களாம் போட்டோ.

ரஸ்பு: சார் ஒன் மினிட். நான் எக்ஸ்பிளெய்ன் பண்றேன். இதன் பின்னாலே ஒரு கதையே இருக்கு...

பட்ட (ஆவலுடன்): கதையா? ஹை! பெருந்தேவி உக்கார் உக்கார். சார் ஏதோ கதை சொல்லப் போறாராம்.

ரஸ்பு (பிளாஷ்பாக் கண்களுடன்): சுமார் இருபது வருஷத்துக்கு முன்னே மதுரையிலே நான் ஒரு பொண்ணைக் காதலிச்சேன் சார். கல்யாணத்துக்குப் பெரியவங்க தடை விதிச்சிட்டாங்க. ஏதோ ஒரு உத்வேகத்திலே நானும் அவளும் கல்யாணம் ஆனமாதிரி சேர்ந்து போட்டோ எடுத்துண்டு என் அப்பாவுக்கு அனுப்பிச்சேன். அவருக்கு ரொம்பக் கோபம் வந்துடுத்து. நெஜமாவே கல்யாணம் செஞ்சிண்டு அப்படிப் படம் எடுத்திருந்தா மன்னிச்சிருப்பாராம். எங்களை விரட்டிட்டார். சில வருஷத்திலே அவளும் ஒரு பெண் குழந்தையைப் பெத்துட்டுச் செத்துட்டா. குழந்தையை அவ பாட்டி எடுத்துண்டுட்டா அப்புறம் நான் பிரிஞ்சு எங்கெங்கோ சுத்தி.... அவங்களைப் பார்க்கவே முடியலே. ...என் பொண்ணு எங்கே இருக்காளோ?....

பெரு (ஆவலுடன்): அவர் பேரு வரதகுட்டியா சொல்லுங்க.

ரஸ்பு: (மோவாயையும் தாடியையும் இறக்கி) ஆமாம் ஆமாம். வரதகுட்டி, வாடிபட்டி வி. வரதகுட்டி அதான் என் பேரு.

பெ: (கண்ணீருடன்): அவர் பொண்ணுக்கு ஏதாவது மச்சம் உண்டான்னு கேளுங்க?

ரஸ்பு: ஆமா! இடது தொடையிலே, தம்படி அளவுக்கு இருக்கும்.

பெரு (கவலையுடன்): எனக்கு இருக்கு.

பட்ட (ஆவலுடன்): அட! நான் கவனிக்கவே இல்லையே....

பெரு (வெட்கத்து): அப்பா அப்பா! நான் தான் உங்க பொண் அப்பா! உங்க மகள்.

ரஸ்பு: மகளே, என் மகளே!

வெங்: ம்! வெறும் போட்டோ காமிராவுக்கு முன்னாலேயே இப்படி ஒரு க்ளைமாக்ஸா!

ரஸ்பு: வெங்கடபதி! இவங்களைப் பார்த்துக்கோ இதோ ஒரு நிமிஷத்திலே வந்துடறேன்.

வெங் (ஆர்வத்துடன்): எங்க சார், மிளகு வடை வாங்கப் போறீங்களா? ஒரு டஜன் புடிச்சிண்டு வாங்க.

ரஸ்பு: சே! இந்தத் தாடி மீசையை எடுத்துட்டு வந்துடறேன். என் பொண் கிடைச்ச மறு நிமிஷமே எடுத்துடறதா சபதம்!

புகைப்படம்: நாமு
ஸ்டுடியோ: லாவண்யா, சென்னை-18
நடிப்பு: காத்தாடி ராமமூர்த்தி
மேகலா விஜயலட்சுமி

அடேடே அப்படியா!

"அடேடே! அப்படியா!" என்று நீங்கள் வியக்கும்படியான அனுபவம் சமீபத்தில் என்ன நேர்ந்தது? கீழேயுள்ள வெற்றிடத்தில் எழுதி இந்தப் பகுதியை கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு உண்டு. உறையின் மேல் "அடேடே அப்படியா!" என்று குறிப்பிடவும். முடிவு தேதி டிசம்பர் 12.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

....





சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

"**கா**த்தால ஆருகிட்டப் பேசறே அருக்காணி?" என்று கேட்டுக் கொண்டு புளியமரத்துத் தோட்டக்கார அம்மான் வந்தாள்.

"ஆருகூடப் பேசறதுங்க...? நாமளே நம்மகூடப் பேசிக்கிறதுதான். அல்லாரும் மாதிரி நாம தங்கத்துல தாலிக் கொடியா போட்டிருக்கறோம்? வாரத்துல ஏழுநாளு நம்பியூர்க்கும் சாவக்காட்டுப்பாளையத்துக்கும் சினிமாவுக்குமா போறோம்? மாத்திக்கட்ட றதுக்குசீலே இல்லாம தவியாத் தவிக்கறோம். கேட்டாக்கூட உடனே ஓடிப்போய் வாங்கற இவளுக்கு பொழுது வெடிஞ்சா சண்டைக்கு இழுக்கலேன்னு கஞ்சி எறங்க மாட்டேங்குது...?"

"யாரைச் சொல்றே நீ?"

"மெக்கால ஊட்டுக்காரியைத்தான். என் கொழந்தையைப் பார்த்தாலே போதும், அவளுக்குப் பத்திட்டு வந்துரும்... இவ கண்ணுபட்டே, ரெண்டு மாசமா புள்ளைக்கு ஒடம்பே சரியில்லே."

புளியமரத்துத் தோட்டத்து அம்மான் புன்னகைத்துக் கொண்டாள்.

"நான் ஒண்ணு கேட்டதுக்கு நீ ஓராயிரம் பேசிக்கிட்டே இருக்கே அருக்காணி... போச்சது போ... எவளோ எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன? நம்ம மூச்சு நம்ம மூக்குலதான் உடோணும். எவளோ மினுக்குறா நமக்கு வயிறு நிரம்பிப் போகுமா? உம் புள்ளைக்கு ஒரு வழி சொல்லணும்னுதான் வந்தேன். நம்ம ஊர்ல நாளையிலேர்ந்து ஏழெட்டு டாக்டர்க வந்து கேம்ப்பு போட்டு எல்லோருக்கும் காசில்லாம வைத்தியம் பண்றாங்களாம்... ஊரெல்லாம் நோட்டீசு குடுத்திருக்காங்க. நம்பியூர்ல வேலைக்குப் போகுதே மயிலாத்தா பொண்ணு... அதுதான் எங்கிட்ட வெவரமாச் சொல்லிச்சு... ஒவ்வொரு பெரிய சிக்குக்கும் ஒரு டாக்டர் வர்றாராம். பள்ளிக்கோடத்துல தங்கி வைத்தியம் பண்ணி மருந்தும் தர்றாங்களாம். அவங்க மூணு நாளைக்குத் தங்கறாங்களாம்... ஊர்க் கவுண்டர் ஊட்ல தான் சோறு தண்ணி ஆகுதாம். புள்ளைய அவங்ககிட்டக் காட்டி ஒடம்புக்கு என்ன ஏதுன்னு கேட்டு மருந்து வாங்கிக் குடு. புள்ளைக்கி சொஸ்தமாகுனும் எம் மனசு சொல்லுது. அதைச் சொல்லத்தான் வந்தேன்."

"அப்படீங்களா? என் காதுல இதெல்லாம் உழுகலையே? நாளைக்கே மொதல் ஆளா சின்னு காட்டுடறேனுங்க... நம்ம ஊரு திருப்பூர். அவனுகின்னு ஆஸ்பத்திரிக்கு அலைஞ்சு காட்டறதுக்குக் காசு பணம் கொட்டியா வெச்சிருக்கோம்?"

"யாருகிட்டயும்வார்த்தைகுடுத்துப்பேச்சு வாங்கிக்க வேண்டாம்... உன்ற வேலையைப் பாரு... கொழந்தைய மொதல் வேலையா டாக்டருமாருக கிட்டக் காட்டு."

"என்ற கதி இப்படி ஆயிடுச்சே? அந்த மனுசனுக்கு வேலை ஒழுக்கமா இல்லே... காட்டுல போட்டது ஒண்ணும் வெளையலே. வீடு ஒண்ணு இல்லேன்னு எங்காவது பரதேசம்தான் போயிருக்கோணும். கஞ்சியாவது கெடைக்குதேன்னு மனசைத் தேத்திக்கறதுதான்..."

"எந்தத் தேசமும் போக வேண்டாம்... பத்து நாள்ல மழை ஒரளவு பேஞ்சிருக்கு... நரிப்பயிரையாவது போட்டு வை. வர்றது வரட்டும். சாயந்திரமாத் தோட்டத்துக்குத் வா..."

"சரிங்க" என்று திருப்பூர்க்காரி கண்ணை துடைத்துக் கொண்டாள்.

மலையடிப்பாளையம் சோகையான கிராமம். அநேகமாய், முக்கால்வாசி வீடுகளில் ஜனங்களே கிடையாது. பிழைப்புக்காகவும், குழந்தைகளின் படிப்புக்காகவும், வேறு காரணங்களுக்காகவும் பக்கத்து நகரங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள். காடு தோட்டம் இருக்கிறவர்கள் மட்டும் பல்லைக் கடித்துக் கொண்டு உயிர் வாழ்கிறார்கள்.

"நான் கல்யாணம் பண்ணிட்டு வர்றப்ப கூட, ஊர் நல்லாக் செழுத்தியாத்தான் இருந்தது. எல்லாருக்கும் வேலை இருந்தது. எவர்சில்வர் பாத்திரத்துல கஞ்சி குடிச்சவங்க, பழையபடி மண்ணு சட்டிக்கு வந்துட்டாங்கன்னு பொளப்பு எப்படி இருக்கும்னு பாத்துக்க வேண்டியதுதானே" என்று திருப்பூர்க்காரி அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்வாள்.

அவள் புருஷன் ரெண்டு ஏக்கர் காடு இருக்கிறது என்று கல்யாணமான புதிதில் மதர்ப்பாய் நடந்து கொள்வான். மாமனார் வீட்டை ரெண்டே மாதத்தில் எதிர்த்துக் கொண்டான்.

ரெண்டு ஏக்கர் ரெண்டு ஏக்கர் என்று பெருமை பேசிய அவள் புருஷன் சம்முகம், மழையின் ஒத்துழையாமையினால், மூணு வருஷமாய்ச் செயல் இல்லாமல், கோயில் திண்ணையில் தாயம் ஆடிக் கொண்டிருந்தான். போன வருஷம் ஈரோட்டில், மலையடிப் பாளையத்துக்காரர் ஒருவர் குத்தகைக்கு எடுத்த கள்ளுக்கடையில் சேர்ந்து கொண்டான். அவன் செலவு போக, மீதி சந்தைச் செலவுக்குக் கூட வராது. சும்மா இருக்கறதுக்கு இதுவாவது வருதே என்று அற்பத் திருப்திப் பட்டுக் கொண்டாள் திருப்பூர்க்காரி. அவன், மாதத்துக்கு ஒரு முறை வந்து விட்டுப் போவான்.

இந்தத் திருப்தியில் குழந்தையின் ஆரோக்கியக் கேடு வேறு.

"நாளைக்கி டாக்டர்மாருங்க வர்றாங்க தெரியும் இல்லே. அதுல ஈறு பொம்பளே

பிரதிபா ராஜகோபாலன்



டாக்டருமாருங்க வர்ருங்களாம். அவங்க இங்க தங்கியிருக்கிற மூணு நாளைக்கும் எடுங்காமுடங்கா வேலே செஞ்சு ஒதவற துக்குப் பொம்பளை ஆள் வேணுமாம். உனக்குத் தெரிஞ்சா ஒருத்தியச் சொல் லேன்'' என்று சின்னப்பொன்னன். பொன் சாமி சொல்லச் சொல்லத் திருப்பூர்க்காரி இடைமறித்தாள்.

''இன்னொருத்தி எதுக்கு? அவங்க கிட்ட எம்புள்ளையக் காமிச்கோணும்னு இருக் கறேன். அவங்களுக்கு ஒத்தாசையா இருந்தா புள்ளைய இன்னும் நல்லாக் கவனிப்பாங்க இல்லே?''

''சாயந்திரம் வந்துடுவாங்க. ஊர்க் கவுண்டர் ஊட்ல தான் எல்லாரும் தங்க றாங்க. சமுத்திரம் மாதிரிதான் கெடக்குதே ஊடும் வாசலும்.''

''வந்ததுமே பாத்துடறேன். ஆமா, யாரு உங்களுக்குச் சொன்னது வேலைக்கு ஆள் வேணும்னு?''

''ஊர்க்கவுண்டர் பேத்தி நளினிதான்.''

''அவங்களையே போய்ப் பாத்துற வேண் டியதுதான்.''

''பாத்திரு, பாத்திரு.''

''நீதான் நளினி சொன்ன ஆளா?'' என்று பெண் டாக்டர் ஒருவர், திருப்பூர்க் காரியைப் பார்த்துக் கேட்டாள்.

''ஆமாங்க... என் பேரு அருக்காணி.''

''என் பேர் டாக்டர் சந்திரகாந்தி. மூணு நாள் கேம்ப் அநேகமாக, இன்னும் மூணுநாள் எக்ஸ்டெண்ட் ஆகும் போலி ருக்கு. லேடி டாக்டர்ஸ் நாங்க மூணு பேர் வந்திருக்கோம். இங்க தங்கி இருக்கிற நாள்ல, புடவை துணிதுவைக்க, சாப்பாடு இங்கேயே வாங்கிவர, மத்த வேலேகளுக் குன்னு ஒரு ஆள் வேணும். அங்க கேம்ப்ல நீ இருக்க வேண்டியதில்லே. இங்க மட்டும் இருந்தாப்போதும். போகும்போது பிரியப் பட்டுத் தர்றதை வாங்கிக்க...''

''அதெல்லாம் வேண்டாங்க... எம் புள்ளைக்கு, ஒடம்பு சரியில்லே. அதைக் கவனிச்சுக் கொணமாக்கினாப் போதும்... ஆயுசுக்கும் ஒங்களை மறக்காம இருப் போம்...''

டாக்டர் சந்திரகாந்தி புன்னகைத்தாள்.

சிகிச்சை முகாமில் நுழைந்தவுடன், விவரத்தை எழுதிக் கொண்டபின் மூன்று

டைரக்டர் கே. சுப்பிரமணியம் காலத்திலிருந்து, எம். ஜி. ஆர்., சிவாஜி, பி. எஸ். வீரப்பா முதலிய பலருடன் திரை உலகில் பணியாற்றி இன்று ஓய்வு பெற்று எளிமையாக வாழ்ந்து வருகிறார் என் தாத்தா ஆர். கிருஷ்ணமூர்த்தி. திரை உலகில் அவர் எடுத்துக் கொண்ட புகைப் படங்கள் பல என்றாலும் இது ஒன்றே எஞ்சியிருப்பதால் இதனை உயிரினும் மேலாகப் போற்றிப் பாதுகாத்து வரு கிறோம். நடுநாயகமாக உள்ள பி. எஸ். வீரப்பாவின் வலக்கரம் அருகே நிற்பவர்தான் என் தாத்தா.

—இரா. சுவாமிநாதன்
நாச்சியார்கோவில்



டாக்டர்கள் நன்றாகப் பரிசோதனை செய் தார்கள். டாக்டர் சந்திரகாந்தியும் திருப்பூர்க் காரியிடம் குழந்தையைப் பற்றி நன்றாகக் கேட்டு அறிந்தபின் வயிற்றுப் பகுதியை எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

இருபது பேரே சிகிச்சைக்குக் காத்திருந்த தால் டாக்டர் குழுவுக்கு வேலை எளிதாக இருந்தது.

''எங்க வேன் திருப்பூர்போகுது. நாளைக்குக் காலைல சர்க்கார் ஆஸ்பத்திரில போட்டோ எடுத்துட்டு, மலம், ரத்தம், கபம் எல்லாம் டெஸ்ட் பண்ணிட்டு வந்துடு... அதுல எல்லாம் தெரிஞ்சுடும்...'' என்றாள் டாக்டர்.

அடுத்த நாள், திருப்பூர் போய், எக்ஸ்ரே எடுத்து, மற்றப் பரிசோதனைகளும் முடிந்து முடிவுகளும் தெரிந்து வரும்போது சாயந் திரம் ஆகிவிட்டது.

மறுநாள் மீண்டும் முகாமுக்குப் போய், விவரத்தைக் காட்டினாள்.

''குடல்லே மிஸ்டேக் இருக்கு. சீழ் புடிச் சிருக்கு. புண் பெரிசா இருக்கு. தின்ன தெல்லாம் அஜீரணமாகும். வாந்தியாயிடும். அதனால புள்ளை ஒடம்பு தேறுது. மந்தமா இருப்பா. வயித்துல வலி நெறைய இருக்கும்...'' என்றார்கள் டாக்டர்கள்.

''ஆமாங்க... திமிர்திமிர்னு அழுவாங்க...''

''இப்ப இங்க நாலஞ்சு நாள்ல கொண மாக்க முடியாது. தற்காலிகமாக ஒரு மருந்து தர்றோம். குடுத்துட்டு இரு.... ஈரோடு பெரிய ஆஸ்பத்திரியில ஒரு மாசமாப் புள்ளையப் படுக்கைல உடோணும். தேவையானா ஆபரேஷன் பண்ணணும்.''

''அந்தச்சோடு சீக்குங்களா...?''

''சின்னச் சீக்குதான்...'' என்றாள் டாக்டர் சந்திரகாந்தி. இருந்தும் அவள் உண்மையை மறைப்பதைத் திருப்பூர்க்காரி உணர்ந்துவிட்டாள்.

மணி ஐந்தரை. டாக்டர்கள் தங்கள் முகாமிலிருந்து திரும்பியிருந்தனர். டாக்டர்



CLARION/NC/8340

சந்திரகாந்தி குளித்துக் கொண் டிருப்பதாகச் சொன்னுள் இன்னொரு டாக்டர்.

பெண் டாக்டர்கள் தங்கியிருக்கும் அறைகளைத் துப்புரவாய்ப் பெருக்கி வாசல் திண்ணையையும் பெருக்கித் தண்ணீர் தெளித்துவிட்டு, மற்ற டாக்டர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள் அருக்காணி.

''நீங்களெல்லாம் மகராசியா இருக்கோணும் சாமிங்களா... என்ற புள்ளைக்கு ஏதோ பெரிய சீக்காத்தான் இருக்கோணும். இல்லேன்னு ஒரு மாசம் ஆஸ்பத்திரில படுக்க வெக்கோணும்னு டாக்டரம்மா சொல்லுவாங்களா? நானே இங்க ஒரு பொழுது கஞ்சி குடிச்சிட்டு இன்னொரு பொளுது தண்ணியக் குடிச்சுட்டு இருக்க றேன். ஆஸ்பத்திரிக்குச் செலவு என்ன பண்ணுவேன்னு தெரியலீங்க...''

டாக்டர் சந்திரகாந்தி குளித்துவிட்டு உடைமாற்றிக் கொண்டிருந்தாள்.

இருந்தாற்போலிருந்து, சந்திரகாந்தி, ''ஏய் அருக்காணி, இங்க வா'' என்று பெரிய சத்தத்துடன் கூப்பிட்டாள்.

''என்னங்க...?''

''இங்க இருந்த பர்ஸ் எங்கே?''

''பர்சுங்களா? நான் பாக்கலீங்களே?''

''ஏண்டி திருடிட்டு ஜோக்கா அடிக்கிறே?''

''இந்தாங்க டாக்டர் அம்மணி, நா அப்பேர்ப்பட்ட வம்சத்துல பொறக்கலீங்க.. கை மறதியா வேறெங்காவது வெச்சிருப் பீங்க... அதுக்கோசரம் தடால்னு என்னைத் திருடின்னு முடிவு கட்டிட்டீங்களே? நான் ஏழைதான். படிக்காதவதான். பாக்கறதுக்கு கறேல்னு சோத்துக்குச் செத்தவளா இருக் கறேன். ஆனா மனசுல வெள்ளைங்க...''

அதற்குள் இருவர் சத்தம் கேட்டதும் ஒரு பெண் டாக்டர், பர்ஸுடன் ஓடி வந்தாள்.

''டாக்டர், இதை கேம்ப்ல வெச்சிருந் தீங்களாம்... நீங்க குளிக்கறப்ப வாட்ச் மேன் கொண்டு வந்தார். ரூமுக்கு வந்த உடனே குடுக்கலாம்னு இருந்தேன்....''

டாக்டர் சந்திரகாந்தியின் முகமே மாறி விட்டது.

''தாங்க் யூ டாக்டர்'', என்று வாங்கிக் கொண்டு, ''என்னே மன்னிச்சுடு அருக் காணி, பர்சைக் காம்ப்புக்குக் கொண்டு போன ஞாபகம் இல்லாம, இங்க வச்சுத் தான் காணோம்கிற ஏமாற்றத்துல, ஆத்தி ரத்துல உன்னைப் பேசிட்டேன். மனசில வச்சுக்க வேண்டாம்'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

திருப்பூர்க்காரியின் கண்கள் கலங்கி விட்டன.

''ஒரு நிமிசத்துல என்னைத் திருடியாக்கிப் போட்டீங்களே டாக்டர் அம்மணி. பர்சு கெடைக்காம நான்தான் திருடினேன்னு முடிவு கட்டி, ஊர்க்கவுண்டர் முன்னால நிறுத்தி, ஊர்ப் பேரை வெளியூர்க்காரங்க முன்னால கெடுத்திட்டியேன்னு அவர் ஊர் நடுவுல கட்டி வெச்சு ரெண்டு போடு போட்டிருந்தாக்கூட, நான் திருடி இல் லேன்னு மெய்ப்பிக்க முடியாது. ஆனா, அந்த நிலையிலும், உங்களை ஒண்ணு கெஞ்சி கேட்டிருப்பனுங்க...'' என்று விம்மிக் கொண்டே சொன்னாள்.

''என்ன கேப்பே?''

''எம் புள்ளைய எப்பாடு பட்டாவது காப்பாத்துங்கன்னு கால்ல உளுந்துக் கேப்பேனுங்க...''

''என்னது?...'' டாக்டர் சந்திரகாந்தி, திருப்பூர்க்காரியின் தாயுணர்வை உணர்ந்து, உணர்ச்சி பொங்க, ரெண்டடி வைத்து அவளின் கையைப் பிடித்துச் சத்தியம் செய்தாள்.

''எத்தனை செலவானாலும் உன் புள்ளையக் காப்பாத்தறேன். நானும் மனுஷிதான்...''

திருப்பூர்க்காரி, அதனால் பூமியை ஜெயித்துவிட்ட சந்தோஷ நிறைவால் இன்னும் அழ ஆரம்பித்தாள்.

கழுத்தில் மாலையுடன்' காட்சிதரும் சுவாமி சிவானந்தாவின் இந்தப் புகைப்படத்தைப் போற்றிப் பாதுகாக் கிறேன். அவருக்கு முன்னால் அபிநயம் செய்து கொண்டிருக்கும் சிறுமி நான் தான். இடதுபக்கம் உள்ள சிறுவன் என் தம்பி. அவனுக்குப் பின்னால் என் தந்தை டாக்டர் ராவ். அவர் ஆசிரமத்திலேயே பணியாற்றினார். என் தம்பிக்குத் தம் பெயரையும் இணைத்து சிவப்பிரேம் என்று பெயர் சூட்டினார் சுவாமி சிவானந்தா. இன்று அவரும் இல்லை என் தந்தையும் இல்லை. எந்தப் பெரிய மனிதர் ஆசிரமத்துக்கு வந்தாலும் சிறுமியாகிய என்னை அழைத்து விடுவார் சிவானந்தா. நடன மாடி அவர்களை மகிழ்விக்க. அந்த இனிய நினைவுகளை, அன்புள்ளத்தை எனக்குச் சதா நினைவூட்டிக் கொண் டிருக்கிறது இந்தப் படம்.

-வசந்தா கோவிந்தராஜன்
பெங்களூர்.





புகைப் படங்கள் பலவிதம்

செய்திப் படங்கள்

"ஆயிரம் வார்த்தைகளில் எழுத வேண்டியதை ஒரு புகைப்படம் உணர்த்திவிடும்" என்பது பிரஸ் ஃபோட்டோகிராஃபிக்கு மிகவும் பொருந்தும். ஹிந்து பத்திரிகையின் தலைமைப் புகைப்பட நிபுணர் சாரி கூறுகிறார்:-

"வெள்ளத்தைப் பற்றிப் பத்திபத்தியாக எழுதினாலும் நீங்கள் மேலே காண்கிற ஏரியல் ஃபோட்டோவுக்கு ஈடாகுமா? விமானப்படை விமானமொன்றில் கதவைத் திறந்து விட்டுத் தரையில் படுத்துக் கொண்டு இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை இருபுறமும் இருவர் பிடித்துக் கொள்ள இந்தப் படத்தை எடுத்தேன். ஸ்ரீரங்கம் துண்டிக்கப்பட்டுப் போனதையும் வெள்ளத்தின் பயங்கரத்தையும் படம் தெளிவாக்குகிறது.


"கீழே உள்ள படம் ஆந்திராவில் கடுமையான வெள்ளம் வந்தபோது எடுக்கப்பட்டது. படம், அபரிமித வெள்ளத்தின் அளவை மட்டுமின்றி அதை எதிர்த்துப் போராடும் மனிதகுலத்தின் முயற்சியையும் எத்தனை அற்புதமாக எடுத்துக் கூறுகிறது! செய்திப் படங்கள் இப்படிப் "பேசுகிறவையாக" அமைதல் வேண்டும்!"

திரு. சாரி, "செய்திப் படங்கள் எடுப்பதில் ஆபத்தும் உண்டு. ஆனந்தமும் உண்டு" என்கிறார். கலவரங்களைப் படம் எடுக்கப் போனால் அடி உதை விழும்; பிரபலஸ்தர்களைப் படம் பிடிக்கும்போது எதிர்பாராத மகிழ்ச்சிகள் ஏற்படும்! ஒரு முறை நேருஜி, "நீதான் எப்போதும் என்னைப் படம் எடுக்கிறாயே. ஒரு தடவை நாம் இருவரும் சேர்ந்து ஒரு படம் எடுத்துக் கொள்ளலாமே!" என்று கூறி அதைச் செயல்படுத்தவும் செய்தார் என்பதை சாரி நெகிழ்ச்சியும் பெருமிதமும் பொங்கக் கூறுகிறார்.



✕ சாரி





நீர், நிலம், வானம்


மனிதர்கள், மிருகங்கள் முதலியவற்றைப் படமெடுப்பதைவிட வானையும், கடலையும், நிலத்தையும் நீரையும் படம் பிடிப்பதிலே சிலருக்கு ஆர்வம் அதிகம். லாண்ட் ஸ்கேப் எனப்படும் இவ்வகைப் புகைப்படங்களை எடுக்கும் கலைஞர்களுள் ஒருவர் **மனோகர் தேவதாஸ்**. இவருக்கு ஓவியம் வரைவதிலும் —குறிப்பாக லைன் டிராயிங் — ஆசை உண்டு. பக்கத்தில் காணப்படும் மனோகரின் முகம் அவரே வரைந்தது.

''பாண்டிச்சேரி போயிருந்தபோது எடுத்த படம் இது. கறுப்பு, வெளுப்பு படம் தான் என்றாலும் 'ஜெட்டி', கடல், வானம் ஆகிய மூன்றும் வெவ்வேறு கருநிறங்களில் வித்தியாசப் பட்டுத் தோன்றுவதைக் கவனியுங்கள்'' என்கிறார்.



⌘ மனோகர் தேவதாஸ்

வனவிலங்குகள்



⌘ ஜகந்நாதராவ்

வனவிலங்குகளைப் புகைப்படமெடுப்பதில் ஸ்பெஷலைஸ் செய்பவர்கள் நிறையப்பேர். அவர்களுள் **ஏ. என். ஜகந்நாத ராவ்** கூறுகிறார்: ''புகைப்படக்கலையே காஸ்ட்லி ஹாபி என்றால் வனவிலங்குகளைப் படம் பிடிக்க இன்னும் அதிகச் செலவாகும். திட்டமிட்டுச் செயல்பட முடியாது. அதிர்ஷ்டம் வேண்டும். நாட்கணக்கில் காத்திருக்க வேண்டும். பயணச் செலவுகள் வேறு.''

கால் நூற்றாண்டாக இத்துறையில் ஈடுபட்டுள்ள ஜகந்நாதராவ் உயிரைத் திருணமாக மதித்து விலை உயர்ந்த காமிரா டெலிபோட்டோ லென்ஸ்கள் சகிதம் கானகங்களில் மாதக்கணக்கில் வளைய வருகிறவர்.

மைசூரில் ஓரிடத்தில் காட்டாற்றில் இறங்கி, யானைகள் குளிக்கும் இந்தக் காட்சி தமக்கு மிகவும் பிடித்த படம் என்றார். ''அவற்றின் தும்பிக்கைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக வளைந்து அசைந்தாடுகிற அழகைப் பாருங்கள். அதிலுள்ள நளினமான நடன அழகு புலனாகிறதா?'' என்று கேட்கிறார். யானைகளிடம் சிறிதும் அஞ்சாமல் ஒரு வெண் பறவை ஆனந்தமாய்ப் பறந்து அருகில் வருவதையும் சுட்டுகிறார்.






நிலைக்குத்திய இயக்கம்

ஓர் இயக்கத்தைப் புகைப்படத்தில் அப்படியே சிறைப்படுத்தி விடுவதை 'ஸ்டாப் ஆக்ஷன்' ஃபோடோகிராஃபி என்கிறார்கள். இதற்கு ஷட்டர்ஸ்பீட் அதிகம் வைத்து, அதற்கேற்ப டயாபிரம் திறந்து, சரியான தருணத்துக்குக் காத்திருக்க வேண்டும். விளையாட்டுக்களில் இந்தப் புகைப்பட யுக்தி முக்கிய இடம் பெறுகிறது. குதிரைகள் பாய்ந்து வருவதை, உயரம் தாண்டுதலை, ஹர்டில்ஸில் தாவுவதை, மோட்டார் சைக்கிள்கள் ரேஸில் வளைவு திரும்பச் சாய்வதை, விமானம் மூக்கு உயர வேகமாய் மேலெழுவதையெல்லாம் ஸ்டாப் ஆக்ஷன் புகைப்படங்கள், நிலைக்குத்தி நிற்கும் இயக்கமாகச் செய்துவிடும்.

படத்தைப் பாருங்கள். இது ஒரு சிறந்த சினிமா ஸ்டில்லாக மட்டுமின்றி அற்புதமான ஸ்டாப் ஆக்ஷன் புகைப்படமாகவும் அமைந்திருக்கிறது. புரூஸ் லீயின் இயக்க வேகம், ஆண்மை, வீரம், யுத்தத்திறன், வலிமை முதலிய அனைத்தையும் தெற்றென எடுத்துக் காட்டுகிறது.

திரைப்படம்: பிக் பாஸ் புகைப்படம் உதவி: ந.மு.ரா.



நெல்லிக்குப்பத்திலிருந்து கடலூருக்கு இடைப்பட்ட அடுத்தடுத்த இரண்டு சிற்றூர்களின் பெயர்கள் 'கருப்பு கேட், வெள்ளைக் கேட்'. இந்த இரண்டு ஊர்களும் ரயில்வே லைனை ஒட்டின மாதிரி இருப்பதால் அந்தந்த இடங்களில் லெவல் க்ராசிங்கின் கேட்டுகளில் பூசப்பட்டிருக்கும் நிறங்களைக் கொண்டே அந்த ஊர்களின் பெயர் களை அழைப்பது வழக்கமாகி விட்டது.

—ரா. ஜோதிராமன்



எதிர்பாராத தருணங்கள்

எதிர்பாராத தருணங்களுக்காகத் தயாராகச் சதா காமிராவும் கையுமாகக் காத்திருக்கும் புகைப்பட நிபுணர்கள் உண்டு. உதாரணமாக ஒரு போலீஸ் வேன் கடக்கக் கூடாத மஞ்சள் கோட்டைக் கடந்து சாலையின் வலப்புறம் செல்லலாம். இத்தகைய படங்களில் ஒரு செய்தியை மட்டுமல்ல, ஒரு கதை அல்லது கட்டுரையையே படிக்கலாம்! புகைப்பட நிபுணர் **வி. கே. ராஜாமணி**, தமது படுக்கை அறையில் இருந்த போது பக்கத்து வீட்டுப் பெண் ஏதோ யோசனையில் ஆழ்ந்த வண்ணம் கீழே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்தக் காட்சி அவரைக் கவரச் சட்டென்று ஜன்னல் வழியே படம் பிடித்து விட்டார். பாவ பூர்வமாக அமைந்துவிட்டது படம்.




✱ ராஜாமணி

தொழிலகம்

தொழில் துறையைப் படம் பிடிப்பது இண்டஸ்ட்ரியல் ஃபோட்டோகிராஃபி எனப்படுகிறது. இதில் நிபுணரான ஒருவர் தந்த படம் மேலே காண்பது. தம் பெயரை வெளியிட விரும்பாத அவர் கூறினார்:

'வெறும் இயந்திரங்கள்தானே. தொழிலகத்தைப் படம் பிடிப்பது என்ன கஷ்டம்?' என்று தோன்றலாம். படத்தை இன்னொரு முறை பாருங்கள். ஓர் எஃகு ஆலையில் எடுக்கப்பட்டது. அனல் கக்கும் அப்பகுதியின் உஷ்ணத்தைக் கூட உணர முடிகிறதல்லவா? அவ்வாறு உணர முகமூடி அணிந்த அந்தத் தொழிலாளி எட்ட நின்று கரம் நீட்டும் நிலையும் உதவுகிறது. அவனுடைய உழைப்பார்வமும் தெரிகிறது. தொழிலகங்களைப் படம் பிடிக்கும்போது அதன் இயக்கத்தையும் அங்கு நிலவும் சீதோஷ்ண நிலையையும் தொழிலாளர் பங்கையும் மற்றும் பல அம்சங்களையும் படம் பிரதிபலிப்பதாய் அமைய வேண்டும்.''





■ நீங்கள் இந்த வாரம் நடுப்பக்கத்தில் தந்த தகவல் துணுக்குகள் சூடாக மட்டுமல்லாமல்... சுவையாகவும் அமைந்திருந்தன. செங்கிரணின் 'பார்லிமெண்ட்' கவிதையை ரசித்துப் படித்தேன்!
குளச்சல் — எம். முகம்மது இப்ராஹிம்.

● 13.11.83 கல்கி இதழில் வந்துள்ள கதைகள் அனைத்தும் நெஞ்சில் ஆழமாகப் பதியும்படி அமைந்து விட்டன.
மதுரை — பரமசிவம்

● 'பட்டம் விட்டால் வனவாசம், குதிரை மிரண்டால் சிறைவாசம்' என்று தலைப்பு கொடுத்திருக்கிறீர்கள். மிகவும் சரி. ஆனால் இந்தச் 'சொற்றொடரை'ச் சொன்ன கவிஞரின் பெயரையும் வெளியிட்டிருக்கலாமே.
இரணியல் — கலைமணாளன்

● கிரெனடா நிலைபற்றிய தலையங்கம் கன கச்சிதம். கடலில் வாழும் பெரிய மீன்கள் சின்ன மீன்களை உண்பது போல் வல்லரசுகள் சிறுநாடுகளை வசப்படுத்துகின்றன. இது உலகப் போருக்குத் தான் அடிகோலும்.
சென்னை—45. — கணபதி சுப்பிரமணியம்

● 13.11.83 கல்கி முதற் பக்கத்தில் காந்திஜியைப் பற்றிய தகவல்கள் மூன்றும் ருசிகரமானவை மட்டுமல்ல. முத்தானவை. சிந்தனையைத் தூண்டுபவை.
சென்னை—4 — வெ. முத்துகிருஷ்ணன்

● சின்னக்கொலம்பஸின் நகர்வலம் கண்டேன். ஸ்ரீதேவியும், எம். ஜி. ஆரும் தான் நடிகர்கள் — நன்றாகப் பேசி நடித்திருக்கிறார்கள் என்றால், அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்களையும் மிஞ்சியிருக்கிறார்.
கெங்கவல்லி—636 105 — ராணிமுருகவேள்

● தக்க சமயத்தில் ''கொசுப் பண்ணை'' என்ற ஓர் அருமையான கட்டுரையை வெளியிட்டுக் கல்கி தனக்குச் சமுதாயத்தின் மேலுள்ள அக்கறையை இன்னும் அதிகமாக உறுதிப்படுத்துகிறது.
சென்னை—7. — கலைமணி.

● சிவசங்கரியின் 'மாலையில் பூக்கும் மலர்கள்' தொடருக்கு மாருதி அவர்கள் வரைந்திருக்கும் ஓவியம் என் மனத்தை நெருடி விட்டது.
வால்குடி — ஆ. சந்திரசேகரன்

● ''சூடான சுவையான பல செய்திகளை நடுப்பக்கத்தில் அளித்துவிட்டு அதற்குத் தலைப்பை மட்டும் ''சூடாக என்ன இருக்கு?'' என்று கொடுத்திருப்பது குறும்புத்தனமானது. பாராட்டத்தக்கதும் கூட.
மே. மாம்பலம். — எஸ். மோகன்.

● என்ன சொல்கிறார் ஜே. கே.? அவர் பேசுவதுதான் சிலர் புரியவில்லை என்கிறார்கள். ஆனால் நீங்கள் எழுதியதே எனக்குப் புரியவில்லை!
பொள்ளாச்சி. — சி. என். வேலுச்சாமி.

● பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடுவதே உண்மையான சுதந்திரம் என்று ஜே. கே. சொல்வதில் எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது என்பதை நன்கு ஆழ்ந்து சிந்தித்தால்தான் விளங்கிக் கொள்ள முடியும். ஜே. கே. யின் பேச்சுக்கள் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுபவை என்பதால் மேம்போக்கான சிந்தனையாளர்களுக்கு அது ஒன்றுமில்லாததாகப் படுவதில் வியப்பொன்றுமில்லைதான்.
கரூர்—2. — கே. என். இராமகிருஷ்ணன்

● 30—10—83 இதழில் மின்சார மீட்டர் சரியாக இயங்குகின்றதா என்று சோதிக்க வழி கூறப்பட்டுள்ளது. மற்றொரு வழியும் இருக்கிறது. மின்சார மீட்டர் ஒவ்வொன்றிலும் சுழலக்கூடிய 'வட்டு' ஒன்று உண்டு. மின் பளுவுக்குத் தக்கவாறு இது சுற்றும். உபயோகிக்கும் மின்சாரத்தினை 'வட்டு' சுழலும் சுற்றுக்களால் அளவிடும் எண் ஒன்று மீட்டரில் பொறிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பல்பினை எரியவிட்டு 'வட்டு' ஒரு சுற்றுக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தினைக் கைக் கடிகாரத்தினால் செகண்டுகளில் கண்டு விட முடியும். மீட்டர் வேலை செய்யும் விதம் இதிலிருந்து கணக்கிடலாம்.
நெல்லை — எம். காசிப்பாண்டியன்

● ராஜாஜி நினைவாலயத்தில் இருக்கவேண்டிய புகைப்படங்கள் சில திருட்டுப் போயிருக்கின்றன. உள்ள புகைப்படங்களும் கிழிந்தும் அழுக்கேறியும் இருப்பதைப் பார்த்து மிகவும் வருந்தினேன்.
அரியலூர் — மு. நா. ராம்சந்தர்

● 13—11—83 இதழில் வெளியான 'கிரெனடா' தலையங்கம் படித்தேன்.
ஆப்கனிஸ்தானத்தை அடிமை கொண்ட ரஷ்யா, கிரெனடாவைக் கைப்பற்றிய அமெரிக்கா — இரண்டில், ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிப்பதில் முன்னணியில் நிற்பது யாரென்று வாதிப்பதைவிட, சூழ்ந்து வரும் உலகப் போர் மேகங்களை விலக்கி, அமைதி விளக்கேற்றி வைக்கும் வழிமுறைகள் என்னவென்று சிந்திப்பதே இன்றைய முதல் தேவை என்பதை நியாய உணர்வு மிக்க தலையங்கத்தில் நன் முறையில் சித்திரித்துக் காட்டியிருந்தீர்கள்!
வேலாயுதம்பாளையம் — எம். சம்பத்

ஆகாயம் நிரம்பி நிழலிட்ட சாலையில் அந்தி நேரம் கடுகிக் கொண்டிருக்க, முதன் முறையாக அவன் திடுக்கிடலுடன் யோசித்தான்.

பாதை தவறி விட்டானு?

ரோடு துப்புரவாகப் பெருக்கி இருந்தது. ஈ, காக்கை இல்லை. இருபக்கமும் உள்ள மரங்கள் தான் அவனைப் பயமுறுத்திக்கொண்டிருந்தன. அவை அடர்ந்து வருவதைப் பார்த்தால் காட்டுக்குள் வந்தது போல இருந்தது.

இது சரியான பாதைதானு?

அவனது யமஹா அறுபதில் ஓடிக்கொண்டிருந்தது. வளைவுகள் முன்னிட்டதால் இவ்வளவு! இல்லாவிடில் இதற்கு மேல் எகிறி இருப்பான்.

எப்படியும் முதல் பரிசை அடைந்துவிட வேண்டும் என்று ஆசை! இரண்டு லட்ச ரூபாய்! அடேயப்பா! குடும்பக் கவலைகள் எல்லாம் போய்விடும். இரண்டு தங்கைகளுக்குத் திருமணம் பண்ணலாம். அவனும்...

போட்டியில் இதுவரை அவன்தான் முன்னல் போய்க் கொண்டிருந்தான். ஸைபஸ்டின் போன இடம் தெரியவில்லை! ராவ், கேசவ், வத்தீப் எல்லோரும் பின் வாங்கி விட்டார்கள். இனிமேல் அவனைத் தாண்டி யாரும் முன்னல் போக முடியாது. அவ்வளவு தூரம் அவன் முன்னணியில் போய்விட்டான்.

மகிழ்ச்சியாக இருந்தது. ''ஞான வரம் விஜயபாஸ்கர் அவர்களே நீங்கள் வாழ்க!'' என்று சொன்னுன்.

விஜயபாஸ்கர் தான் இந்த ரேஸ் ஏற்பாடு பண்ணியவர். மரத்தான் ரேஸ். பம்பாயிலிருந்து ஞானவரம் வரை! ஞானவரம் பழைய ஜமீனின் வாரிசு விஜயபாஸ்கர்! சோழவரம் போல் தமது ஊரையும் பிரசித்திப் படுத்த வேண்டும் என்று இந்த மோட்டார் சைக்கிள் ரேஸை நிறுவியிருந்தார். பம்பாயிலிருந்து ஒரே நேரம் புறப்பட வேண்டும். வழியில் நூறு, அல்லது இரு நூறு மைல்களுக்கு இடையே இருக்கும் நடுவர்களிடமிருந்து டோக்கன் வாங்கிக் கொள்ள வேண்டும். ஞானவரம் முதலில் வந்து சேருகிறவர்களுக்குப் பரிசு இரண்டு லட்சம்.

உண்மையில் அவன் ஒரு மெக்கானிக்! ஷெரீப் காரேஜில் வேலைபார்த்தான். மோட்டார் சைக்கிளைத் தலைகீழாக ஓட்டுபவன். அவன் செய்யாத சாகசங்கள் இடையாது. அந்த வாகனம் அவன் கையில் ஒரு கொத்தடிமை. அவன் சொல்படி கீழ்ப்படியும்.

ஷெரீப்தான் இந்த ரேஸ் பற்றிக் குறிப்பிட்டார் — நீ கலந்துக்கோ சுரேஷ்! நிச்சயம் பரிசு கிடைக்கும்! நான் உனக்குச் செலவு பண்றேன்' என்றார் ஷெரீப்.

அவர் கொடுத்த ஊக்கத்தில் தான் இன்று ஓடிக் கொண்டிருக்கிறுன். பம்பாய்—ஞானவரம் பாதையில்.

மணியைப் பார்த்தான் 6.48.

திடுக்கிட்டுப் பார்க்க, வெளிப் பிரதேசம் பூராவையும் இருட்டு ஒரு போர்வை போல மூடியிருந்தது.

மரங்களின் ஏராளமான அடர்த்தி! இடைவெளியே தெரியவில்லை. சாலை குறுகிக் கொஞ்சம் கச்சாத்தனத்தோடு எதிர்ப்பட்டது.

இது ரேஸ் பாதைதானு?


தவறிவிட்டானு?

வண்டியை நிறுத்தினுன்.

கண்ணைக் கட்டியது போல் இருந்தது. அப்படி ஓர் அழுத்த இருட்டு! தவிர கல் போன்ற ஒரு நிசப்தம். ஒரு சின்ன ஓசை கூட இல்லை.

நிச்சயம் அது ஒரு காடு!

Road Map—ல் வனப்பகுதிகள் குறிக்கப்பட்டிருந்தன. இவ்வளவு சீக்கிரம் வரும் என்று தெரியாது.




என்னுடைய காமிராவில் எடுக்கப்பட்ட முதல் படமே எனக்குப் பொக்கிஷம். என் மலேஷிய நண்பர் முகமது ஷரீப் ஒரு யாஷிகா 35 எம். எம். காமிராவை எனக்குப் பரிசளித்தார். என் மகன் மண்ணை அளைந்து விளையாடிக் கொண்டிருந்தான். காமிராவை ஃபோகஸ் செய்து கொண்டு திரும்பச் சொல்லி கிளிக் செய்தேன். இயல்பான தோற்றம், கள்ளமற்ற சிரிப்பு, லைட் எஃபெக்ட் எல்லாமே தற்செயலாகச் சிறப்பாக அமைந்துவிட்டன!

-எம். தர்மராஜன்
ஆலங்குடி.

ரேஸ் ரேஸ் சமீரேஸ்

புஷ்பா தங்கதுரை



பதினைந்து நிமிடம் எத்தனையோ வளைவுகள்! கடைசியில் அந்த 20 அடிச் சாலையும் குறுக ஒரு பாறை மேட்டில்போய் முட்டிக் கொண்டு நின்றது.

கோபம் தாளித்துக் கொண்டு வர, இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்தான். ஊஹூம், பாதை தெரியவில்லை.

அடிவயிற்றிலிருந்து அழுகை பீறிட்டுவர-நான் தோல்வி! என்று வாய்விட்டுக் கூவினான்.

நிசப்தத்தில் விழுந்த சப்தம் சற்றுத் தூரத்தில் போய் அதிசயமாய் எதிரொலித்தது.

யமஹா 'பைக்'கைக் கோபத்தில் கீழே தள்ளினான். துக்கம் தாளாமல் ஒரு கரடு முரடுக் கல்லில் உட்கார்ந்து ஹெல்மெட்டை எடுத்தான். தலைமீது கையை ஊன்றினான்.

காரேஜ்கார ஷெரீப் என்ன சொல்வார்? அவனை நம்பித்தானே போட்டியில் இறங்கச் சொன்னார். 'பைக்' தேடிக் கொடுத்தார். ஆரம்பச் செலவுகள் நிறையச் செய்தார். அவரிடம் வேலை செய்யும் வெறும் மெக்கானிக்தானே என்று நினைத்தாரா? அவனைமுன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்று......

சத்தம் கேட்க, கூர்மையானான். காலடிகள் போலக் கேட்டன. உன்னிப்பாகப் பார்த்தான். இருட்டில் யாரோ நடந்து வருவது தெரிந்தது. ஆவலும் வந்தது. பயமும் வந்தது.

ஆள் அவனை நோக்கியே வந்தான் —யார்? என்றான்! ஆங்கிலத்தில்.

பாண்ட் ஷர்ட் தெரிந்தது. படித்தவனாக இருக்க வேண்டும்! — வழி தவறிடுத்து! என்றான் சுரேஷ் ஆங்கிலத்தில்.

—நீங்க எங்கே போகணும்?

சுரேஷ் பெருமூச்சு விட்டு எழுந்தான்.

—மெட்ராஸ்! இது மோட்டார் சைக்கிள் போட்டி! நான்தான் முதல்லே வந்துட்டிருந்தேன். வழிதவறி இதிலே நுழைஞ்சுட்டேன்.

—ஐயோ பாவமே! இந்தக் காட்டிலே பாதை சுத்திச் சுத்தி வருமே!

—அதான்! என் ஊக்கம் போயிடுத்து. நான் தோல்வி அடைஞ்சாச்சு!

—நீங்க எப்போ இந்தக் காட்டிலே நுழைஞ்சது?

—6.48—க்கு

—ஒரு மணி நேரம் இழந்துட்டீங்க!

—ஆமாம்!

—உங்களுக்கு ஞானவரம் போகிற ஹைவேயைப் பிடிக்கணுமில்லே.

—ஆமாம்!

—பயப்படாதீங்க! நீங்க போட்டியிலே வென்றுடலாம்! என் கூட வர்றீங்களா?

அவனால் நம்ப முடியவில்லை. போட்டியிலாவது, ஜயிக்கிறதாவது!

—எப்படி முடியும்? ஒரு மணி நேரம் போயாச்சு! மத்தவங்க முன்னாலே போயிருப்பாங்களே!

—அவங்க எல்லாரும் இந்தக் காட்டையும் மலையையும் சுற்றி வருவாங்க! ரோடு அப்படித்தானே வருது. நீங்க குறுக்கே போயிடலாம்.

—முடியுமா?

—ஓ! நீங்க பாதி தூரம் வந்தாச்சு இன்னும் பாதி இருக்கு! வாங்க அழைச்சிட்டுப் போறேன்.

ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

—நீங்க எப்படி வருவீங்க!

—எனக்கு பைக் இருக்கு!

—நீங்க என்ன ஃபாரஸ்ட் ரேஞ்சரா?

ஒரு ஒப்புதலோடு முறுவலித்தான் அவன். ஞானவரம் ரேஞ்தானே இது?

—ஆமாம் உங்களுக்குத் தெரியுமா?

—நானும் தெற்கத்திக்காரன்தான். அஞ்சு வருஷம் முன்னாலே இங்கே வந்துட்டேன். என் பெயர் நந்தகுமார்.

'பைக்'கை கிளப்பினான் —கவலைப்படாதீங்க! என் பின்னாடியே வாங்க!

சுரேஷ் தொடர்ந்தான். மனத்தில் மெல்லியதாக ஒரு கிலி! ஆசாமி வழிப்பறிக்காரனாக இருப்பானோ?

ஒரு ஏற்றம் சுமார் செங்குத்தாக இருந்தது. ஒரு பிரமாத 'ரெய்ல்'லில் நந்தகுமார் ஏறினான். சுரேஷ் ஏற முடியவில்லை. குமார் பைக்கை நிறுத்தி இறங்கி வந்தான். கமான்! என்றான்.

ஐம்பத்நாறு ஆண்டுகளுக்கு முன்னால்... (அம்மாடி!) 1927—ல் டாக்டர் அன்னிபெசண்ட் கும்பகோணத்தில் எங்கள் முன்னோர் நடத்தி வந்த தொழிலகத்துக்கு வருகை தந்தபோது எடுத்த படம் இது. அதுசரி, இதை நான் பொக்கிஷமாகப் பாதுகாப்பானேன் என்கிறீர்களா? படுகட்டிச் சிறுமி என்று என் முதுகில் அன்னி பெஸண்ட் அம்மையார் தட்டிக் கொடுத்ததை மறவாமலிருக்க உதவுகிறதே!

-ஸ்ரீ. ராஜலட்சுமி
மதுரை.





Life is full of unforgettable pictures.
You didn't take!
Now there's a clever little film
to capture them all.
Piccolo
COLOUR NEGATIVE FILM
Available in the two most popular
formats – 110 and 135

—மிஸ்டர் நந்தகுமார்! என்றான் சுரேஷ் இளைப்போடு — போதும் எனக்கு இனிமே போட்டி வேண்டாம். வந்த வழியே திரும்பறேன்... ப்ளீஸ்!

நந்தகுமார் விடவில்லை. முதுகில் தட்டினான். —அதைரியப்படாதீங்க! இதோ போயிரலாம்! கொஞ்சம் சிரமம்!

சுரேஷ் இளைப்ப, குமார் பின்னால் அதைத் தள்ளி மேலே ஏற்றினான்.

அங்கிருந்து சமவெளிகளாக இருந்தன. ஆனால் பாதை இல்லை. மேடும் பள்ளமுமாக நந்தகுமார் போனான். சிலசமயம் ஒற்றையடிப் பாதையைப் பிடித்தான். சில சமயம் விலகினான். பிறகு இறக்கம் வர ஆரம்பித்தது.

—கமான்! பயப்படாதீங்க!

பயப்படத்தான் செய்தான்! இல்லை நிச்சயம் இவன் ஏதாவது செய்யப் போகிறான்.

நினைத்தது சரி!

ஒரு சின்ன ஆறு ஒன்று சலசலப்போடு குறுக்கே வந்தது!

தண்ணீர் விளிம்புக்குப் போன பின்தான், அந்த மூன்றடிப் பாறை விளிம்புக்குக் கீழே 'காட்டிலாகா' என்று எழுத்துப் பொறிக்கப் பட்ட படகு இருப்பது தெரிந்தது. சின்னப் படகு.

சுரேஷுக்குத் தயக்கம் தீரவில்லை. ஆனால் குமார் அதைப் பொருட்படுத்தவில்லை. இரண்டு 'பைக்'கையும் தூக்கிப் படகில் வைத்தான். சுரேஷைக் கைகொடுத்து ஏற்றினான். அவனே உட்கார்ந்து துடுப்புப் போட ஆரம்பித்தான்.

சின்ன ஆறு! ஆனால் வேகமும் ஆழமும் அதிகம்.

வலுவான இரும்புத் தூண்டு போல் கரங்கள்! என்ன வேகமாக அவன் துடுப்புப் போட்டான்!

சுரேஷ் அவனை அடிக்கடி ஓரப்பார்வை பார்த்தான். ஆற்றின் நடு வந்தபோது பயம்! தள்ளிவிட்டால் நீந்தக் கூடத் தெரியாது.

ஐந்து நிமிடத்தில் அக்கரை போய்விட்டான். படகைக் கட்டிவிட்டு, பைக்குகளைத் தூக்கி வெளியே நிறுத்தினான்.

—வாங்க! இன்னும் கொஞ்ச தூரந்தான்! சுரேஷைப் பார்க்காமலே வண்டியில் ஏறி ஓட்டினான். சுரேஷ் தொடர்ந்தான்.

கண்களை நம்ப முடியவில்லை. — வந்தாச்சா! என்றான் சுரேஷ் கண்கள் விரிய!

—பாருங்க அந்தக் கல்லை!

அவனது பைக்கின் விளக்கைத் திருப்பினான்.

பார்த்தான். 'என். எச்.' 320 கி. மீ..... போட்டு பெரிய கல் இருந்தது. சென்னைக்குப் போகும் பாதையை போர்ட் காட்டியது.

—இந்தாங்க, மிஸ்டர்! இப்போ மணி 9.12. நீங்க சுற்றி வந்து இந்த இடத்தை அடைய உச்ச வேகம் போனாலும் இரண்டு மணி பத்து நிமிடம் ஆகும். நான் சோதிச்சுப் பாத்திருக்கேன். நீங்க குறுக்கு வழியே வந்தீங்கன்னா அதே அரைமணி இடைவெளியிலே அவங்களுக்கு முன்னாலே இருப்பீங்க! போய்ட்டு வர்றீங்களா?

சுரேஷுக்கு நன்றி பெருகியது.

—ஸார், ஸார் என்றான். குமாரின் கைகளைப் பற்றினான். பையிலிருந்து நூறு ரூபாய்த் தாளை எடுத்தான். — உங்க பெட்ரோல் செலவுக்காவது... என்று நீட்டினான்.

—நோ நோ இது என் கடமை. நான் வர்றேன். நானும் மெட்ராஸ்தான். அஞ்சு வருஷமா இங்கே இருந்தேன். எனக்கு கே. டி. அஷோக்கைத் தெரியும். அவர் தான் இந்த மாதிரி போட்டிக்கெல்லாம் முன்னே நிப்பார். நான் வர்றேன்.

திரும்பக் கூட இல்லை. தனது பைக்கில் ஏறினான். சத்தத்தோடு சாலையின் எதிர்ப்புறம் ஓட்டினான்.

சென்னை வந்த போது, சுரேஷ் முந்தியிருந்தான். 43 நிமிடங்களில் இரண்டாம் ஆசாமியை ஜெயித்திருந்தான்.

ஷெரீப்புக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

ஒரே கூச்சலும் ஆரவாரங்களும்.

ஒரு நீண்ட தூக்கத்திற்குப் பிறகு, எழுந்து புதுசாகி வெளியே வந்து அஷோக்கைத் தேடிப் போனான்.

அஷோக் 36. அவனைக் கண்டதும் ஒரே பரவசம்.

இவரென்று நந்தகுமாரின் உதவியைப் பற்றிச் சொல்ல வந்தவன். அது தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமென்று நினைத்துப் பல்லைக் கடித்தான். வார்த்தைகளை நிறுத்திக் கொண்டு — மிஸ்டர் அஷோக்! நந்தகுமாரை உங்களுக்குத் தெரியுமா? என்றான்.

—ஓ! நல்லாத் தெரியும். மூணு வாட்டி இங்கே ரேஸ்லே கலந்துக்கிட்டாரே!

—மோட்டார் பைக் ரேஸா?

—ஆமாம், ஆனா கடைசி ரேஸ்லே..... அது நடந்து அஞ்சு வருஷம் ஆயிடுத்து...!

—ஏன், என்ன நடந்தது?

—குண்டூரைத் தாண்டி கிஸர்வ் காடு வருது. அதிலே ஒரு வளைவிலே வரும்போது சக்கரம் கழண்டு போய்... தூக்கி எறிஞ்சுடுத்து.

—அப்புறம் என்னாச்சு?

—அது பெரிய டிராஜடி! அதோ ஆளைப் பாருங்களேன்! எப்படி இருப்பார் தெரியுமா?

திடுக்கிட்டு அவர் காட்டின திசை பார்க்க சுவரில் நந்தகுமார் படம் தொங்கியது.

தோற்றம் 1948.

மறைவு 1977

என்று எழுதியிருப்பதைப் பார்த்ததும் தலைக்குள் ஏதோ வெடித்தது.

—எஸ். மோட்டார் சைக்கிளிஸ்ட்! அவர்தான் ஜயிச்சிருக்கணும். ஆனா அந்த விபத்திலே இறந்துட்டாரு.

சுரேஷ் உறைந்தான்.


தலைவலி,
உடல்வலி,
ஜலதோஷம்
மறைந்திடும்
இங்கே
AMRUTANJAN
PAIN BALM
AMRUTANJAN LTD.
Luz church Road
90 ஆண்டுகளாக நம்பகமானது.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 8321 R TM

இந்து பிலிம் முந்துகிறது!

இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை ஒன்று சென்னையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இருக்கிறது என்று சொன்னால் பலருக்கு வியப்பு. 'ஊட்டியில்தானே இருக்கிறது?' என்று சந்தேகத்தோடு கேட்பவர்களுக்கு, இதோ சில விவரங்கள்:

அம்பத்தூர் தொழிற்சாலையை கன்வர்ஷன் பிளாண்ட் அல்லது பினிஷிங்பிளாண்ட் என்று சொல்லுகிறார்கள்.

தொழிற்சாலையின் மேலதிகாரி திரு. டி. என். ராதாகிருஷ்ணன் கூடவே வருகிறார் என்ற தைரியத்தில்தான் உள்ளே நுழைந்தேன். ஏனென்றால் மற்றத் தொழிற்சாலைகளில் பளிரென்று வெளிச்சம் இருக்கும். இங்கே தாழ்வாரத்தில் இருபதடிக்கு ஒரு சிவப்பு விளக்கு இலேசாகத் தரும் ஒளி மட்டுமே துணை! உள்ளேயோ ஒவ்வொரு பகுதியிலும் மப்பான நிலா வெளிச்சத்துக்கும் குறைவான ஒளி — ஐந்து நட்சத்திர ஒட்டலின் ரெஸ்ட்டாரண்ட் மாதிரி. ஊட்டி மாதிரியே சில்லென்ற குளிர்பாயும் குளிர்சாதன வசதி 35000 சதுர அடி தொழிற்சாலையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. வெள்ளை அங்கியும் குல்லாயும் போட்டுக் கொள்ளச் சொன்னபோது, இந்தக் குளிருக்காவது உபயோகமாயிருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டேன்!

சுவரெல்லாம் பாலியுரிதின் வர்ணம் பூசப்பட்டிருந்தது. தூசி வந்து ஒட்டாது தடுக்கவே இந்த ஏற்பாடு. அது போலவே ஒவ்வொரு பகுதியின் நுழைவிலும் உள்ள கதவுகள் இரும்பால் அமைந்திருக்கின்றன. தீவிபத்து என்றால் மரக்கதவுகள் இன்னும் அபாயமானவை அல்லவா? பிராஸஸிங் பகுதியில் அப்சொல்யூட் ஃபில்டர்கள் பொருத்தப்பட்டிருப்பதால் தூசி அறவே வராதாம்.

முதல் அறைக்குள் நுழையும் முன், தாழ்வாரத்தின் கோடியில் அறுபது அங்குலம் அகலம் கொண்ட பிலிம் ரோல்கள் ராட்சச உருளைகளாக மரப்பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஜம்போ ரோல்கள் என்கிறார்கள்.




பி. ஆர். எஸ். ராவ்
○ சேர்மன்




○ ராதாகிருஷ்ணன்

ஜம்போ ரோல்கள் முதலில் 'ஸ்லிட்டிங்' பகுதியிலும் பிறகு 'சாப்பர்' பகுதியிலும் தேவையான நீள அகலங்களில் வெட்டப்படுகின்றன.

மருத்துவ எக்ஸ்–ரே பிலிம் சுருள்களை ஹெவி ஆட்டோமாடிக் சாப்பர் இயந்திரத்தின் வழியாகச் செலுத்துகிறார்கள். பிரும்மாண்டமான இந்த இயந்திரத்தில், நடு நாயகமாக ஒருவர் அமர்ந்து கொண்டு, சன் குத்திப் பாம்பாய் பிலிம் ரோல் நகருவதைக் கண்காணிக்கிறார். தரம் குறைவான பகுதி அவர் கண்ணில் படவேண்டியதுதான் — உடனே அவர் தம் கையிலுள்ள விசையை ஒருமுறை அழுத்துகிறார். சாலிட் ஸ்டேட் எலெக்ட்ரானிக் வகையைச் சேர்ந்த மெமரி சிஸ்டம், இவர் குறிப்பிட்டு அழுத்திய பகுதியைக் குறித்து வைத்துக் கொள்கிறது. இயந்திரத்தின் அடுத்த பகுதியை பிலிம் தாண்டும்பொழுது, தரம் குறைவான பிலிம் வெட்டப்பட்டுத் தனியே விழுந்து விடுகிறது.





இஞ்ஜினியரிங், மோட்டார் வாகனத் தொழில், கப்பல் — விமானக் கட்டுமானத் துறைகள், எண்ணெய்க் குழாய் அமைப்புகள் ஆகியவற்றுக்குத் தேவையான, இறக்குமதி செய்யப்பட்ட இண்டஸ்ட்ரியல் எக்ஸ்-ரே பிலிம் இங்கே வெட்டப்பட்டு, பிராஸஸ் செய்யப்பட்டு, அட்டைப்பெட்டிகளில் அடைக்கப்படுகிறது

இங்கே தயாராகிற மற்றொரு பொருள் கிராஃபிக் ஆர்ட் பிலிம். ப்ளாக் அல்லது ப்ளேட் தயாரிக்கவும், அச்சுத் தொழிலில் 'லிதோகிராஃபிக்' உபயோகத்துக்கும் ஏற்றது இது.

ஆரம்ப நிலையிலிருந்து தயாரிக்காமல், இது என்ன ராட்சத பிலிம் ரோல்களாக இறக்குமதி செய்துவிட்டு, உபயோகத்திற்குத் தகுதியான சிறுநைவுகள் மட்டும் தானே இங்கே செய்கிறார்கள்?—என்பது பலரும் தெரிவித்த கேள்வி.

''ஜம்போ ரோல்களை இறக்குமதி செய்துவிட்டு, அதிலிருந்து நமக்குத் தேவையான வடிவில் இங்கே மாற்றி அமைக்கும் பணி செய்யப் படுவதால் தான் இதை 'கன்வர்ஷன் பிளான்ட்' என்கிறோம். தவிர, உபயோகிக்கத் தகுந்த பிலிம் வகைகளாக இறக்குமதி செய்வதைவிட இப்படி ஜம்போ ரோல்களாக இறக்குமதி செய்வதால் இருபது சதவீத அந்நியச் செலாவணி மிச்சமாகிறது. இந்த முறைதான் உலகின் பல நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது'' — திரு.ராதாகிருஷ்ணனின் பதில்.

ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு, விஸ்தரிப்பு இவற்றுக்கான ரிசர்ச் அண்ட் டெவலப்மென்ட் அமைப்பு ஊட்டியில் இயங்குகிறதாம். இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைந்தது. எலும்பு முறிவுச் சிகிச்சையில் முதல் தேவையான ஆர்த்தோபிடிக் எக்ஸ்-ரே பிலிம் (OPX) இவர்கள் கண்டுபிடிப்புத்தான். ஒருபக்கம் மட்டுமே சில்வர் கோட்டிங் செய்யப்பட்ட இதன் விலை குறைவு என்பது மட்டுமல்ல, நோயாளிக்கும் அதிகமான கதிரியக்க (ரேடியேஷன்) பாதிப்பு இருக்காது.

புகைப்படம் எடுத்த பிறகு அதை டெவலப் செய்யத் தேவையான ரசாயனப் பொருட்களையும் இங்கே 'கெமிகல் பிளான்ட்'டில் தயாரிக்கிறார்கள். அடிப்படையான ரசாயனப் பொருட்களை வாங்கி, ட்யூபாண்ட் என்ற அமெரிக்க நிறுவனத்தின் ஃபார்முலாபடி கலவை செய்கிறார்கள். பவுடர் வடிவிலும், திரவ வடிவிலும் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றுக்கும் தனியே ஒரு தரக் கட்டுப்பாடு நிலையம் இயங்குகிறது. ஆப்கானிஸ்தான், மரிஷஸ், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு இப் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன.

சினிமா கலர் பாஸிடிவ் பிலிம் இங்கே பிராஸஸிங் செய்யப்பட்டு வட்ட வடிவ டப்பாக்களில் அடைக்கப்படுகிறது. 'பிராஸஸிங்'கில் பிலிமின் இருபுறமும் துளையிட, பதினெட்டு இயந்திரங்கள் இயங்குகின்றன.

சிற்பக் கூடத்தில் கல் தச்சர்களின் உளி யோசை மாதிரி கேட்டுக்கொண்டேயிருக்கிறது!

இங்கே அம்பத்தூரில் புகைப்படக்காரர்களுக்குத் தேவையான பிலிம் தயாரிக்கப்படுவதில்லை. ஊட்டியில் மட்டுமே தயாராகிறது. ஆனாலும் ஒரு புகைப்படக்காரர் தெரிவித்த குறையைச் சொன்னேன்.

''பாக்கிங்கில் தவறுகள் ஏற்பட்டு, தர்ம சங்கடங்களை உண்டாக்குகின்றனவாம். உதாரணமாக 120 என்று வேகம் குறிப்பிடப்பட்ட அட்டைப் பெட்டியில், 200 ACA பிலிம் போடுவது, அல்லது 200 ACA என்று அச்சடிக்கப்பட்ட பெட்டியில் 120 ACA வேகமுள்ள பிலிமைப் போடுவது....''

''இது எப்போதாவது நிகழும் தவறு தான். சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட வேகம் உள்ள பிலிம் கருவின் பாட்ச் (Batch) முடிந்துவிட்டால், அந்த பாக்கிங் நிறுத்தப்பட்டுவிடுவதுதான் வழக்கம். வேறு ஸ்பீடு உள்ள பிலிம் அதே அட்டைப் பெட்டியில் போடுவது அவ்வளவு சுலபம் அல்ல. கண்ட்ரோல் முறைகளைக் கவனமாகவே கடைப் பிடித்து வருகிறோம்.''

அதேபோல, ப்ரோமைட் பிரிண்டிங் பேப்பரும் ஊட்டி தொழிற்சாலையில்தான் செய்யப்படுகிறது. இங்கே இல்லை. ஆனாலும் இதுபற்றிய குற்றச்சாட்டு ஒன்றும் நண்பர் ஒருவர் தெரிவித்தார் — இந்தப் பிரிண்டிங் பேப்பரில் அங்கங்கே கறுப்புப் புள்ளிகள் இருப்பதாகப் பதில் தந்தார் திரு. ராதாகிருஷ்ணன்.

''எங்கள் ப்ரோமைட் பிரிண்டிங்பேப்பருக்கு மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு இருக்கிறது. நாங்கள் இந்தத் துறையில் ஏகபோக உற்பத்தியாளர்கள் அல்ல. ஆக்ஃபாவின் ப்ரோமைட் பிரிண்டிங் பேப்பரும் கிடைக்கிறது. ஜி.டி.நாயுடு அவர்களின் ஜிடி பிரிண்டிங் பேப்பரும் விற்கப்படுகிறது. அதனால் குற்றம் குறை இருந்தால் எங்கள் சரக்கு விலைபோகாது. அப்படியிருந்தும் எங்கள் ப்ரோமைட் பிரிண்டிங் பேப்பருக்குக் கிராக்கி மட்டுமல்ல, நல்ல பெயரும் இருக்கிறது.''

தயாரிக்கப்பட்ட பொருட்கள், பெரிய பெரிய மரப்பெட்டிகளில் அடைக்கப்பட்டு, லாரிகளில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. கிடங்குப் பகுதி துப்புரவாகவே இருந்தது. லாரியில் அலட்சியமாகத் தூக்கிப் போடுகிறார்கள். ஒரு லாரி விரைகிறது; அடுத்த லாரி வந்து நிற்கிறது.

'கிளிக்'கினார் உடன் வந்த புகைப்படக்காரர்.

''இந்து பிலிம்தானே உங்கள் காமிராவில்?'' என்றேன்.

மர்மமாய்ப் புன்னகைத்தார்.


—சாருகேசி

புகைப்படங்கள்: சுபா



இந்தப் படங்களைப் பார்த்தால் இவற்றை எடுக்க நான் மிகவும் சிரமப்பட்டுக் கானகங்களில் அலைந்து திரிந்திருப்பேன் என்று தோன்றுகிறதல்லவா? அதுதான் இல்லை! தில்லி மிருகக்காட்சி சாலையில் நான் எடுத்த படங்கள்தாம் இவை!


மாணவர் பக்கம்



பி. எஸ். பரமேசுவரன்,
முதலாண்டு, புகைப்படக்கலை டிப்ளோமா
பாரதிய வித்யா பவன்
புதுதில்லி.



ஒரே நாளில் கலர் புகைப்படங்கள்



பத்து நாள், பதினைந்து நாள் எடுத்துக் கொண்டு கலர்ப் புகைப்படங்களை பிரிண்ட் போட்டுத் தந்த காலம் போய், ஒரேநாளில் ஒரு படத்துக்கு மூன்றரை ரூபாய் செலவில், தபால் கார்டு சைஸ் வண்ணப் புகைப்படம் பிரிண்ட் போட்டுத் தருகிறார்களாம் பம்பாயில். இன்னும் ஆறு மாதங்களில் ஒரு கூல் டிரிங்க் சாப்பிடுகிற விலைக்கு வண்ணப்படம் கிடைக்கும் நிலை வந்துவிடும் போலிருக்கிறது!

சென்னையில் எப்படி?

கிட்டத்தட்ட முப்பது பேர் பணிபுரியும் ஸ்பெக்ட்ரம் கலர் லாபரட்டரி நிறுவனர் திரு **திவாகர்** வண்ணப்படங்கள் பற்றி, குறிப்பாக வண்ண டிரான்ஸ்பாரன்ஸி பற்றிச் சில தகவல்கள் தந்தார். முழுக்க முழுக்க ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட நவீன தொழிற்சாலை இவருடையது. Durst M-505 (இதாலியன்) மெஷின்களும், LPL (ஜப்பான்) இயந்திரமும் கொண்ட வண்ண பிராஸஸிங் அமைப்பு உள்ளது இவரிடம். என்லார்ஜர், கலர் ஃபில்டர்கள், கலர் லென்சுகள் இவை மேற்படி இயந்திரங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போதெல்லாம் இரண்டு நாள் கூட அல்ல, ஒரே நாளில் ஒரு பத்திரிகையின் அட்டைப்படத்துக்குத்தேவையான 'கலர் டிரான்ஸ்பாரன்ஸி' எனப்படும் வண்ண பிலிம் தயாராகி விடுகிறது. இன்னும் சுருக்கமாகச் சொன்னால், ஒரு வண்ண டிரான்ஸ்பாரன்ஸியை அச்சுக்குத் தயாரான நிலையில் கொண்டு வர, சரியாக முப்பத்து நான்கு நிமிடங்களே பிடிக்கின்றன.

''டிரான்ஸ்பாரன்ஸி பிலிம் என்பது மற்ற சாதாரண பிலிம்களிடமிருந்து மாறுபட்டது. மற்ற பிலிம்களில் நெகடிவ் எடுத்து பிரிண்ட் போடும்பொழுது பாஸிடிவ் ஆகிவிடுகிறது. டிரான்ஸ்பாரன்ஸியில் 'நெகடிவ்'வை ஒத்தியெடுத்து (Contact; அதையே வண்ணத்தில், அச்சிடுவதற்குத் தயாரான நிலையில் டெவலப் செய்கிறார்கள். இந்த பிராஸஸிங் முறைக்கு ரசாயனப் பொருட்கள் தேவை. அவை இந்தியாவில் கலவை செய்யப்பட்ட ரசாயனப்பொருட்கள் தாம். ஆனால் விலை அதிகமுள்ளவை. குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் இவற்றை உபயோகித்துத் தீர்க்காவிட்டால் பயனற்றுப் போய்விடும். அதனால்தான் அதிகமான பேர்கள் இந்தத் தொழிலில் இறங்குவதில்லை. நிறைய பிரிண்ட்கள் செய்யும் நிறுவனங்களில் இந்தப் பிரச்சினை எழுவதில்லை!''


பிரிண்ட்களை உலர்த்தும் ட்ரையிங் இயந்திரத்தை திரு. திவாகரே உருவாக்கியிருக்கிறார். தொழிலகங்களும், விளம்பர நிறுவனங்களும், பத்திரிகைகளும் ஸ்பெக்ட்ரம் கலர் லாபரட்ரியை நாடக் காரணம் திரு. திவாகரின் சுறுசுறுப்பு; ஒருநாளைக்குப் பதினெட்டு மணி நேர உழைப்பு.

பேட்டி: சாருகேசி
படம்: தாமு

1984 ஒலிம்பிக்ஸுக்கு அமெரிக்கா தயாராகி வருகிறது. லாஸ் ஏன்ஜலெஸ்ஸில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் பந்தயங்களுக்காகப் பிரும்மாண்டமான இரட்டை நீச்சல்குளம் தயாராகியுள்ளது. தனியார் துறையைச் சேர்ந்த மக்டோனல்ட் கார்ப்பரேஷனின் நன்கொடையாகப் பெறப்படும் இந்த நீச்சல்குளங்கள் அமைக்க ஆன செலவு ரூ. 4 கோடி.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka